தலைத் தட்டிய கை

ரா
1264

ர்ம்மணி

யும் நவீனம்



கதவைத் தட்டிய கை!

க
634
334

துப்பறியும் நவீனம்

எழுதியவர்
ஆர். எஸ். மணி

அவ்வை
சண முகனூர்

வெளியிட்டவர்கள்
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தியாகராயநகர் : : சென்னை-17

முதற் பதிப்பு - மே 1957

ALL RIGHTS RESERVED
BY THE PUBLISHERS

அவ்வை டி.கே. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 684
நன்கொடை எண்: 684

விலை ரூ. 1·00

இது ஆர். எஸ். மணி எழுதிய 43-வது நவீனம்



சென்னை நகரில் லிப்கோ ஏஜெண்டுகள்
எம். தாமோதரம் & கம்பெனி
அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1

அச்சிட்டோர்
ஸ்ரீ ராஜா பவர் பிரஸ்
சென்னை-14

இப்புத்தகத்தைப்பற்றி...

இது ஒரு துப்பறியும் கதைதான். ஆனால் துப்பறிபவர் வரவில்லை! இது காதல் கதையல்ல; ஆனால் இதில் காதலர்கள் வருகிறார்கள்! சோலைமலை பங்களாவில் வசித்து வந்த காப்டனைக் காணச் செல்கிறார் அவருடைய நண்பர், எங்கும் இருட்டு; நிசப்தம்; கதவும் சாத்தப்பட்டிருக்கிறது. காப்டனைக் காணக் கதவைத் தட்டுகிறார் அவர். பலமுறை பலமாகத் தட்டுகிறார். பலன் இல்லை; போலீசாரிடம் புகார் செய்கிறார். பிறகுதான் காப்டன் கொலை செய்யப்பட்டிருக்கும் விஷயம் வெளிப்படுகிறது! இன்ஸ்பெக்டர் அந்தக் கொலையைப்பற்றி விசாரிக்கப் புறப்படுகிறார். தன் காதலனை நெருக்கடியிலிருந்து தப்புவிக்க ஒரு பெண்ணும் துப்புத் துலக்க ஆரம்பிக்கிறாள். இருவரும் இரண்டு கோணங்களில் விசாரணை செய்கிறார்கள். கடைசியில் அனுபவம் வாய்ந்த இன்ஸ்பெக்டர்தான் வெற்றி பெறுகிறார். அப்பெண் பேதை துப்பறியும் வேலையில் தோல்வியுற்றபோதிலும் காதல் வாழ்க்கையில் வெற்றிபெற்று விடுகிறாள்! குற்றவாளியின் சிறிய தவறு அவனைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. குற்றவாளிகள் எவ்வளவுதான் சாமர்த்தியசாலிகளாக இருந்தபோதிலும் எவ்வாறு தண்டனையிலிருந்து தப்ப முடியும்?

எங்கள் பிரசுராலயத்தின் மூலம் வெளிவந்திருக்கும்

ஆசிரியர் ஆர். எஸ். மணி எழுதிய

துப்பறியும் நவீனங்கள்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

ஆசிரியர் ஆர். எஸ். மணி எழுதிய இதர துப்பறியும்
நவீனங்களும் எங்களிடம் கிடைக்கும்.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17.

அவலை
தி.க. சண்முகம் நூல்

கதவைத் தட்டிய கை!

இரவு மணி எட்டு. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பனிக் காலமாகையினால் மூடுபனி அந்த மலை வட்டாரத்தை மூடிக் கொண்டிருந்தது. மேகமண்டலம் குன்றுகளின் சிகரத்தைப் பார்க்க முடியாதபடி செய்துகொண்டிருந்தது. இருளும் குளிரும் அமைதியும் அந்தச் சோலைமலை வட்டாரத்தைப் பயங்கரத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தன.

சோலைமலைச் சாரலில் படர்ந்திருந்த மூடுபனியைக் கிழித்துக் கொண்டு, குளிர்காலத்தில் அணியும் நீளமான கோட்டு, தலையில் ஹாட்டு முதலியவைகள் அணிந்திருந்த மேஜர் பகதூர்சிங், கரத்தில் ஓர் அரிக்கன் விளக்கைப் பற்றியவண்ணம் அலட்சியமாக நடந்துகொண்டிருந்தான். அந்த விளக்குப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த போதிலும் மூடுபனி காரணமாக மங்கலான வெளிச்சத்தைத்தான் கொடுத்துக் கொண்டிருந்தது. பகதூர்சிங் நடந்து செல்வது நிழலுருவம் அசைவது போல் இருந்தது. பள்ளம், மேடு, பாறை, குன்று முதலியவைகளைக் கட்ந்து வட கோடியில் காணப்பட்ட ஒரு பங்காளாவின் முன்னால் வந்து நின்றான் பகதூர்சிங். அழகான மலர்ச் செடிகள் வளர்ந்திருந்த தோட்டத்தின் மத்தியில் கட்டப்பட்டிருந்த அந்த 'மூல்லை வில்லா' வில்தான் சமீபத்தில் குடியேறியிருந்தார் காப்டன் கந்தசாமி.

மூடுபனிக்கு நடுவேயும், காடு மூடானான பாதையிலும் நடந்து வந்த பகதூர்சிங்கிற்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக்கொண்டிருந்தது. மூல்லை வில்லாவின் முன்னால் வந்த நின்றபிறகுதான் அவனிடம் சிறிது நிதானம் நிலைத்தது. ஒருவாறு அமைதியை வரவழைத்துக்கொண்டு மூடப்பட்டிருந்த கதவின் பக்கத்தில் இருந்த காலிங் பெல்லின் விசையை அழுத்தினான்.

வில்லாவினுள் மணியடிக்கும் ஒலி கேட்டது!

பகதூர்சிங் சற்று நிதானித்தான், கதவு திறக்கப்பட வில்லை. சில நிமிடங்களாகின. எந்த விதமான மாறுதலும் ஏற்படவில்லை. மறுபடியும் விசையை அழுத்தினான்.

பங்களாவினுள் மீண்டும் மணியடிக்கும் ஒலி கேட்டது. முன்னைவிட பலமாகவும் ஒலித்தது. ஆயினும் கதவு திறக்கப்படவில்லை!

மூன்றும் முறையாகக் காலிங் பெல்லின் விசையைப் பலமாக அழுத்தினான் அவன். விசையிலிருந்து விரலை எடுக்கவில்லை. மூல்ஜி வில்லாவினுள் மணியோசை கேட்டுக் கொண்டிருந்ததே தவிர, காலடியோசையோ, கதவு திறக்கப்படும் ஒலியோ கேட்கவில்லை!

பகதூர்சிங் ஏமாற்றமடைந்து போனான். பயங்கர இரவையும், உடலை நடுக்கும் மூடுபனியையும் பொருட்படுத்தாமல் வீடு தேடி வந்திருக்கும் தன்னை அலட்சியம் செய்யும் காப்டன் கந்தசாமியின்மீது அவனுக்குக் கோபம் சுருண்டு வந்தது. ஆனால் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு மீண்டும் முயற்சித்தான் அவன். அதுவும் பலனளிக்கவில்லை! ஒருவேளை அயர்ந்து தூங்குகிறாரோ என்னவோ என்று எண்ணிக் கதவின்மீது இருந்த இரும்புக் கைப்பிடியினால் பலமாகக் கதவைத் தட்டினான். அமைதி நிலவியிருந்த அந்த வட்டாரத்தில் இடியோசை போல் ஒலி கேட்டதே தவிர, கதவு திறக்கப்படவில்லை! அது என்ன ஆழ்ந்த அமைதி? அப்படி ஒரு தூக்கமா?

அந்த அமைதியும் நிசப்தமும் பகதூர்சிங்கிற்குக் கவலையையும் கலவரத்தையும் கொடுத்தன. கந்தசாமியுடன் அவன் நன்கு பழகியிருக்கிறான். அவருடைய குணாதிசயங்களை நன்கு அறிவான். சிறிய சப்தம் கேட்டாலும்கூட கண்விழித்துக் கொள்ளக் கூடிய அவர் இத்தனை பலமாகத் தட்டியும் ஏன் கதவைத் திறக்கவில்லை? ஒருவேளை வெளியே எங்காவது சென்றிருப்பாரோ? ஆனால் கதவு பூட்டப்படவில்லையே! கதவு உட்புறம் தாளிடப்பட்டிருக்கிறதே!

பகதூர் சிங்கிற்கு ஒன்றும் புரியவில்லை. திடீரென்று ஏதோ ஒன்று அவனுடைய நெஞ்சை அடைப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவனால் அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. அந்த இடத்தைவிட்டு நகருவதற்கான சக்தியும் ஏற்படவில்லை. என்ன செய்வது என்ற கேள்வி அவனைக் குழப்பியது. ஒரு நிமிடம் தலையைக் குனிந்து கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். கடைசியில் ஒருவித முடிவிற்கு வந்தவன்போல் அரிக்கன் விளக்கைக் கைக் கரத்தில் பற்றியவண்ணம் அந்த வில்லாவின் தோட்டத்தைக் கடந்து வெளியே வந்தான். சற்றுத் தூரத்தில் இருந்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைவாக நடந்தான்.

சோலைமலைச் சாரலில் இருந்த சிறிய போலீஸ் ஸ்டேஷனின் முன் வராந்தாவில் போடப்பட்டிருந்த ஸ்டூலின் மீது அமர்ந்து சுவாரஸ்யமாகத் துப்பறியும் நவீனம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான் கான்ஸ்டேபிள் காளிரத்னம். அரைகுறையாகப்

படித்தவன். எப்படியாவது போலீஸ் இலாகாவில் உயர்ந்த பதவியை அடைந்து விடவேண்டும் என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் வேருன்றி இருந்தது. அதற்காகத் துணிகரமாக எந்தக் காரியத்தையும் செய்து வந்தான் அவன். ஒரு சமயம் ரகசியமாகச் சூதாடிக்கொண்டிருந்த ஒரு கூட்டத்தாரைப் பிடித்து விட்டான்! அவன் தன்னந்தனியாகச் சிக்கிக் கொண்டபடியால் அக்கூட்டத்தார் அவனை அடித்து நொறுக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். உடம்பில் ஏற்பட்ட காயம் ஆறுவதற்கு ஒரு மாத காலம் பிடித்தது! மற்றொரு சமயம் கொலைகாரன் ஒருவனைப் பிடிக்க முயன்றுப் பேராபத்தில் சிக்கிக்கொண்டு விட்டான் அவன். கொலைகாரர்கள், கொள்ளைக் கூட்டத்தார், ஜோப் படிக்காரர்கள் அனைவரும் காளிரத்னத்தை ஒழித்துக் கட்டச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய வாழ்க்கை நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பதுபோல் இருந்தது!

காளிரத்னம் தன் அபாயகரமான நிலைமையை நன்கு உணர்ந்திருந்த போதிலும் உள்ளம் தளரவில்லை. உற்சாகம் குன்றவில்லை. எப்படியாவது தான் ஒரு பெரிய மனிதனாக வேண்டும், தன்னுடைய பெயரும் புகழும் ஓங்கவேண்டும் என்ற எண்ணத்துடன் துப்பறியும் தொழில் சம்பந்தமான புத்தகங்களைப் படித்து வந்தான். துப்பறியும் நவீனங்களைப் படித்து வந்தால் அதன் மூலம் சில நூதனமான விஷயங்கள் கிடைக்கும் என்று யாரோ சொல்லி விட்டார்கள், அவ்வளவுதான்! அன்றையிலிருந்து துப்பறியும் புத்தகப் பித்தனாகி விட்டான் அவன். எப்போதும் அவன் கையில் ஒரு துப்பறியும் புத்தகம் இருந்தது!

வராந்தாவில் காலடியோசை கேட்ட பிறகு தலையை மெல்ல நிமிர்த்தினான் அவன். தன் முன்னால் கலவரமடைந்த முகத்தோற்றத்துடன் உடல் நடுங்க நின்று கொண்டிருக்கும் பகதூர்சிங்கைக் கண்டு பதறிப் போனான். மேஜரை அவனுக்கு நன்கு பழக்கமுண்டு. அவரை அவன் அதற்கு முன்பு பலமுறை பார்த்துப் பேசிப் பழகியிருக்கிறான். ஆனால் அவர் அப்பொழுது இருந்த தோற்றம் சந்தேகத்தை வினாவித்து விட்டது!

"வணக்கம் மேஜர் சார்! இந்த இரவு வேளையில் உடல் நடுங்க வைக்கும் குளிரில் எங்கு இப்படி வந்தீர்கள்?" என்று வியப்புடன் கேட்டான் காளிரத்னம். அவன் கை படித்த இடத்தை மடித்து அடையாளமிட்டது.

"காப்டன் கந்தசாமியைப் பார்க்க வந்தேன். முல்லை வில்லாவின் கதவைத் தட்டினேன்; காலிங் பெல்லின் விசையை அழுத்

தினேன். உள்ளேயிருந்து பதில் ஒன்றும் வரவில்லை" என்ருன் மேஜர் தடுமாற்றம் நிறைந்த குரலில்!

"ஓ! இன்று வெள்ளிக்கிழமையா? அது எனக்கு நினைவு இல்லை. வெள்ளிக்கிழமை தோறும் நீங்கள் முல்லை வில்லாவிற்கு வருவது வழக்கமாயிற்றே? ஆனல் மூடுபனியின் பிடியில் மூழ்கி யிருந்த இரவில் அவர் உங்களை எதிர்பார்த்திருக்க மாட்டார்" என்ருன் காளிரத்னம், கொஞ்சம் கொட்டாவி விட்டுக் கொண்டே. "அவர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரோ இல்லையோ, வழக்கம் போல் நான் வந்து விட்டேன். நான் மாளிகை முன்னல் வந்து கதவைத் தட்டியதும் உள்ளே யிருந்து பதில் வராததும் உண்மை! அதைப்பற்றிப் புகார் செய்யத்தான் அவசரமாக இங்கு வந்தேன்".

"கதவைத் தட்டினீர்களா? பதில் வரவில்லையா? கதவு திறக்கப்படவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே?"

"எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!"

"ஒருவேளை அவர் வீட்டில் இல்லையோ என்னவோ?"

"அவரைப்பற்றி எனக்கு நன்முகத் தெரியும். அவர் கண்டிப் பாக வீட்டை விட்டு வெளியேறியிருக்க மாட்டார். இது விஷய மாக நீங்கள் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்."

காளிரத்னத்திடம் இப்பொழுது சுலவரமும் குழப்பமும் ஏற்பட்டன. இன்ஸ்பெக்டர் அப்பொழுது ஸ்டேஷனில் இல்லை. ஒரு திருட்டுக் கேஸ் விஷயமாக விசாரணை செய்ய வெளியே சென்றிருந்தார். ஆகவே உள்ளே பிரவேசித்து ரிஸீவரைக் கையில் எடுத்து டெலிபோன் மூலம் காப்டன் கந்தசாமியை அழைத்தான். முல்லை வில்லாவில் டெலிபோன் மணி ஒலிக்கும் சப்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்ததே தவிர, பதில் ஒன்றும் வரவில்லை! ஐந்து நிமிடங்களாகியும் மணியோசை மட்டும்தான் அவனுடைய காதில் விழுந்து கொண்டிருந்தது. காளிரத்னம் ஏமாற்றம் கலந்த பெருமூச்சு விட்டவண்ணம் ரிஸீவரை வைத்தான்.

"ஒருவேளை அவர் உடல் நலமின்றிப் படுத்துக் கிடக்கிறரோ என்னவோ! இல்லாவிட்டால் கண்டிப்பாக அவர் டெலிபோன் மூலம் பதில் சொல்லியிருப்பார்" என்று கூறித் தன்னைச் சமா தானப்படுத்திக் கொண்டான் காளிரத்னம்.

"என்னால் ஒன்றும் யூகிக்க முடியவில்லை, எதற்கும் டாக்டரை உடன் அழைத்துச் செல்வோம்" என்றான் மேஜர் பகதூர்சிங்.

டாக்டர் தர்மராஜனின் வீடு போலீஸ் ஸ்டேஷனிற்குப் பக்கத்தில்தான் இருந்தது. சாப்பாட்டை முடித்து விட்டு இரவு உடைகளை அணிந்து கொண்டு வைத்திய சம்பந்தமான நூல் ஒன்றைப் படித்தவண்ணம் இருந்தார் டாக்டர் தர்மராஜன். கொஞ்சம் கண்டிப்பான பேர்வழி; குறிப்பிட்ட நேரத்திற்கு முன்போ பிறகோ ஒருவரையும் அவர் பார்க்கமாட்டார். ஆகவே அந்த வேளையில் தன்னை ஒருவன் தொந்தரவு செய்வதை அவர் விரும்பவில்லை. ஆனால் காளிரத்னத்தைப்பற்றி அவருக்குத் தெரிந்திருந்தபடியால் தலையை அசைத்து அவனை உள்ளே வரவேற்றார். காளிரத்னம் தான் வந்த காரணத்தை அவரிடம் விளக்கினான். அவரை வற்புறுத்தினான். வேறு வழியின்றி அவனுடன் புறப்படச் சித்தமானார் டாக்டர்.

மேஜர் பகதூர்சிங் முன்பு போலவே அரிக்கன் விளக்கைக் கரத்தில் பற்றிய வண்ணம் கரடு முரடான பாதையில் சென்று கொண்டிருந்தான். டாக்டரும், காளிரத்னமும் அவனைப் பின் தொடர்ந்து மௌனமாகச் சென்று கொண்டிருந்தனர். அம்மூவரும் வெகு விரைவில் முல்லை வில்லாவை அடைந்து விட்டனர். முன்புபோலவே மூன்று முறை காலிங் பெல்லின் விசையை அழுத்தினான் பகதூர்சிங். மற்ற இருவரும் பலமாகக் கதவைத் தட்டிப் பார்த்தார்கள். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. அவர்களின் கரங்களில்தான் வலி கண்டது.

"ஒருவேளை பின்பக்கக் கதவு திறந்திருக்கலாம். போய்ப் பார்க்கலாமா?" என்று யோசனை கூறினான் மேஜர் பகதூர்சிங். முல்லை வில்லாவைப் பற்றி அவனுக்கு மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டும் என்பதை காளிரத்னம் உணர்ந்திருந்தபடியால், டாக்டரை அழைத்துக் கொண்டு பின்பக்கம் நடந்தான். வலது பக்கத்துச் சுவரில் அமைக்கப்பட்டிருந்த மூன்று ஜன்னல்களும் உட்புறம் தாளிடப் பட்டிருந்தன. பின்பக்கம் செல்வதற்காக இடது புறம் திரும்பியபோது ஒரு கண்ணாடி ஜன்னல் திறந்து இருப்பது அவர்களின் பார்வையில் விழுந்தது! குளிர் நிறைந்த அந்த இரவு வேளையில் புத்தியுள்ள எவனும் கதவைத் திறந்து வைக்கமாட்டான். உள்ளேயிருந்து விளக்கொளியும் வீசிக்கொண்டிருந்தது! மூவரும் விரைந்து அந்த ஜன்னலின் அருகில் சென்றனர். மறுகணம் மூன்று ஜோடிக் கண்களும் அவ்வறையினுள் பாய்ந்தன. அடுத்த கணம் மூவருடைய உடலும் சற்று நடுங்கின. உள்ளமும் திக்கென்று

திகைத்துப்போயிற்று. அந்த அறையில்—காப்டன் கந்தசாமியின் ஆபீஸ் அறையில்—கண்ட காட்சிதான் அவர்களை அவ்வாறு திடுக்கிடச் செய்துவிட்டது!

காப்டன் கந்தசாமி தலைகுப்புறத் தரையில் விழுந்துகிடந்தார்! முகம் பூமியில் புதைந்து இருந்தது. கரங்கள் அகல விரிந்திருந்தன. அந்த அறையும் அலங்கோலமாகத்தான் காட்சியளித்தது. மேசை டிராயர்கள் வெளியே இழுத்து விடப்பட்டிருந்தன. காகிதங்கள் தரையில் சிதறிக் கிடந்தன. கண்ணாடி ஜன்னலும் உடைக்கப்பட்டுச் சிதறியிருந்தது. காப்டன் கந்தசாமி விழுந்து கிடந்த இடத்திற்குப் பக்கத்தில் இரண்டு அடி நீளத்திற்கு இரண்டு அங்குல சுற்றளவிற்கு மணல் அடங்கிய பை ஒன்று கிடந்தது. சிதறிய ஜன்னல் வழியாக மூவரும் அவ்வறையினுள் பிரவேசித்தனர். டாக்டர், காப்டனின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து அவருடைய உடலைப் பரிசோதனை செய்தார். சில வினாடிகளுக்குப் பிறகு தலையைத் தொங்கவிட்ட வண்ணம் எழுந்து நின்றார். டாக்டரின் முகத்தோற்றத்திலிருந்தே அவருடைய பரீட்சையின் முடிவை உணர்ந்து கொண்டான் மேஜர் பகதூர்சிங்.

"காப்டன் இறந்து போய்விட்டாரா?" என்று துக்கம் தளும்பும் குரலில் கேட்டான் மேஜர். டாக்டர் தலையை அசைத்து அதை ஆமோதித்தார். கைக்குட்டையினால் வாயைப் பொத்திக் கொண்டு பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டான் மேஜர். அவருடைய ஆத்மசாந்திக்கு ஆண்டவனைப் பிரார்த்திப்பதுபோல் ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்தான். பல காலமாக நெருங்கிப் பழகிய நண்பர் திடீரென்று இவ்வாறு மரணமடைவது என்னுள் மனத்தாங்கல் இல்லாமல் போய்விடுமா? உற்சாகம் இழந்து பேசுவதற்குச் சக்தியற்றுச் சிலையைப் போல் நின்றுவிட்டான் மேஜர்.

"இவர் சாதாரணமாக இறக்கவில்லை. இவருடைய தலையில் யாரோ பலமாக அடித்திருக்கிறார்கள். அதனால்தான் மண்டை சிதறி மரணமடைந்திருக்கிறார். இன்ஸ்பெக்டரின் அனுமதியில்லாமல் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. உடனே அவரை வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்றார் டாக்டர்.

காப்டன் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டவுடன், மேஜரின் துயரமும் வேதனையும் அதிகரித்தன.

இவ்வாறு ஏதாவது விபரீதம் நடந்திருக்கும் என்ற எண்ணத்துடன்தான் மேஜருடன் உற்சாகத்துடன் புறப்பட்டு

வந்தான் காளிரத்னம். முல்லைவில்லா ஆபீஸ் அறையில் விழுந்து கிடந்த காப்டனைப் பார்த்தவுடன் அந்த விஷயத்தில் தலையிட்டுத் தன் திறமையைக் காட்டி வெற்றி பெறவேண்டும் என்று நினைத்தான், ஆனால் துணையின்றி ஒரு கொலை வழக்கைத் துப்பறியப் புறப்பட்டு அதனால் தன் உயிருக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற பயம் உண்டாகியது. ஆகவே காப்டனின் மரணத்தைப்பற்றி இன்ஸ்பெக்டருக்குத் தெரியப்படுத்த அந்த அறையின் மேசையின் மீதிருந்த டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்தான் கான்ஸ்டேபிள் காளிரத்னம்.

தன் நண்பர் இவ்வாறு துர்மரணமடைவார் என்று மேஜர் நினைக்கவில்லை. துயரம் மேலிட்டுக் கண்ணீர்ப் பெருகிவந்தது. அவைகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு டாக்டரின் அருகில் சென்று, "எவ்வளவு நேரத்திற்கு முன்பு இவர் இறந்துபோயிருப்பார் என்று சொல்லமுடியுமா?" என்று விநயமான குரலில் கேட்டான் மேஜர்.

"இரண்டு, மூன்று மணி நேரத்துக்கு முன்பு இறந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்."

"இப்பொழுது எட்டரை மணியாகிறது. நீங்கள் கூறுவதைப் பார்த்தால் மாலை ஐந்தரைமணி சுமாருக்கு அவர் இறந்திருக்கலாம் என்று தோன்றுகிறது."

"அவ்வளவு நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனால் மாலை ஐந்தரைமணி சுமாருக்கு இறந்திருக்கலாம் என்று நினைக்க இடமிருக்கிறது" என்றார் டாக்டர்.

பகதூர்சிங் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. வேதனையும் அதிர்ச்சியும் கலவரமும் அவருடைய மனதைக் சூழப்ப இன்ஸ்பெக்டரின் வருகையை எதிர்பார்த்துவண்ணம் சற்றுத் தூரத்தில் இருந்த நாற்காலியில் ஓய்ந்துபோய் உட்கார்ந்து விட்டான்.

அன்று இரவு ஏழு மணிக்கு ஒரு முக்கியக் கேஸ் விஷயமாக விசாரிக்கச் சென்றிருந்த இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் அவசர வேலையாகக் கோயமுத்தூருக்குச் செல்லவேண்டியிருந்தது. ஆகவே பொழுது விடிந்த பிறகுதான் சோலைமலைக்கு வந்து சேர்ந்தார் அவர். காப்டன் கந்தசாமியின் மரணத்தைப்பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டது. கான்ஸ்டேபிள் காளிரத்னம் நடந்த விஷயங் களை நடந்தபடி கூறினான். முல்லை வில்லாவில் இவ்வாறு ஒரு மர்மக் கொலை நடந்திருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை! இச் செய்தி அவருக்குப் பரபரப்பை உண்டாக்கியது. அவர் விடா முயற்சியும் பிடிவாதக் குணமும் அஞ்சாநெஞ்சமும் படைத்தவ ராகையினால் அந்தக் கேஸை நன்கு விசாரித்து உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் காளிரத் னத்தையும் மற்றொரு கான்ஸ்டேபிளையும் அழைத்துக்கொண்டு முல்லைவில்லாவிற்கு வந்து சேர்ந்தார்.

முதல் நாள் இரவு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன்செய்து இன்ஸ்பெக்டர் திரும்பிவருவதற்கு வெகுநேரமாகும் என்று உணர்ந்துகொண்டு, இரண்டு போலீஸ்காரர்களை முல்லை வில் லாவில் காவல்போட்டுவிட்டு வந்திருந்தான் காளிரத்னம். குற்ற வாளி தண்டனையிலிருந்து தப்புவிக்க ஏதாவது தந்திரம் செய்து விடப் போகிறானே, காப்டனின் உடல் காணாமல் போய்விடப் போகிறதே என்று இமைகொட்டாது வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் புரிந்த வண்ணம் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. இன்ஸ்பெக்டர் அங்கு வந்த பிறகுதான் அவர்களுக்குச் சற்று நிம்மதி ஏற்பட்டது.

இன்ஸ்பெக்டர் முல்லை வில்லாவையும் அதைச் சுற்றியிருந்த தோட்டத்தையும் ஒரு முறை பார்வையிட்டுவிட்டு, காப்டன் கந்தசாமி மரணமடைந்து கிடந்த ஆபீஸ் அறையினுள் பிரவே சித்தார். காப்டன் தரையில் விழுந்து கிடந்த நிலை அவரையே திடுக்கிடச் செய்துவிட்டது. மண்டியிட்டு அமர்ந்து காப்டனின் உடலைக் கவனித்தார். மார்பு விரிந்து தோள்பட்டைகள் இரண்டும் அகன்று இருந்தன. தேகப்பயிற்சி, யோகாசனம் முதலியவைகள்செய்து உடம்பைப் பாதுகாத்து வந்திருக்கிறார் என்பதை அவருடைய உடல் தோற்றம் வெளிப்படுத்தியது. அவருடைய முகத்தில் இருந்த முறுக்கிவிட்ட மீசையும், குட்டை யான தாடியும் அவருடைய குணாதிசயத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தன. அவருக்கு அறுபது வயதாயிருந்த போதிலும் ஐம்பது, ஐம்பத்தொன்று வயது மதிப் பிடக்கூடியவராகத்தான் காணப்பட்டார். காளிரத்னம்

மூன்னும் பின்னும் நடந்து, சுற்று மூற்றும் விழிகளை உருட்டி மிருந்த உற்சாகத்துடன் அந்த மர்மக் கொலையைப்பற்றித் துப்பறியத் துடித்துக் கொண்டிருந்தான்.

" இன்ஸ்பெக்டர் சார்! குற்றவாளி ஜன்னலை உடைத்துக் கொண்டு இந்த அறையினுள் புகுந்து இருக்கிறான். காப்டன் மாடியில் இருந்திருக்கவேண்டும். குற்றவாளி வீட்டில் ஒருவரு மில்லை என்று திருடத் துணிந்திருக்கிறான் . . . ." என்று தன் ஊகத்தை வெளியிட்டான் காளிரத்னம்.

" அவருடைய படுக்கை அறை எங்கே யிருக்கிறது?"

" மாடியில் இருக்கிறது."

" இப்பொழுதெல்லாம் ஐந்து மணிக்கு முன்பே இருட்டி விடுகிறது. காப்டன் மாடியில் இருந்திருந்தால்தான் அறையில் விளக்கை ஏற்றியிருக்கவேண்டும். வீட்டில் விளக்கொளி இருந் திருந்தால் குற்றவாளி அவ்வளவு துணிச்சலாகக் கண்ணாடி ஜன்னலை உடைத்துக்கொண்டு அதன் வழியே உள்ளே புகுந்து இருக்கமாட்டான்."

"காப்டன் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக மாடி அறைக்குச் சென்று இருக்கலாம். நன்றாக இருட்டிய பிறகு விளக்கைப் போடலாம் என்று எண்ணியிருக்கலாம். வீட்டில் ஒருவருமில்லை என்று எண்ணிக்கொண்டு குற்றவாளி வீட்டினுள் புகுந்து இருக்கலாம். மேலே ஏதோ சப்தம் கேட்டுக் காப்டன் ஆபீஸ் அறைக்கு வந்திருக்கலாம். குற்றவாளி கதவினருகில் மறைந் திருந்து பின்புறமாக அவருடைய மண்டையில் வலுவாக அடித்திருக்கலாம்."

"ஜன்னல் பக்கம் பார்த்தாற்போல் இவர் விழுந்து கிடப்ப தினால் அவர் பின்புறமிருந்துதான் தாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது விளங்குகிறது. ஆனால் மாலை ஐந்து மணி சுமாருக்கு எவனாவது வீட்டினுள் திருடவருவானா என்பது எனக்குச் சந்தேக மாக இருக்கிறது!"

"இந்தக்காலத்தில்தான் பட்டப்பகலில் எத்தனையோ திருட்டு கள் நடந்துவருகின்றனவே! இந்த வீட்டிற்குச் சமீபத்தில் வேறு வீடுகள் ஒன்றுமில்லை. அத்துடன் இந்த வட்டாரத்தில் மனித சஞ்சாரமும் அதிகமாகக் கிடையாது. இந்த வீட்டில் காப்டன் கந்தசாமிமட்டும் தனியாக வசித்துவருவதும் அவனுக்குத் தெரிந் திருக்கலாம். ஆகவே, அந்தச் சந்தர்ப்பத்தை அவன் ஏன் பயன் படுத்திக்கொண்டு இருந்திருக்கக்கூடாது?"

"நீ நினைப்பதுபோல் இது சாதாரணத் திருட்டு அல்ல! இதில் வேறு சில மர்மங்களும் மறைந்திருக்கின்றன. திருடவேண்டும்

என்ற நோக்கத்துடன் வருபவன் நேராக இரும்புப்பெட்டி இருக்கும் இடத்திற்குத்தான் செல்வானே தவிர, இவ்வாறு மேஜை டிராயரைத் திறந்தும், காகிதங்களை இங்குமங்கும் பரவியிறைத்தும் நேரத்தை வீணுக்கமாட்டான்! அத்துடன் கண்ணுடி ஜன்னலைக் கவனித்துப் பார்த்தால் நான் சந்தேகிப்பதின் உண்மை உனக்கு விளங்கும். இந்தக் கண்ணுடி ஜன்னல் உட்புறம் தாளிடப்படவில்லை. திருடன் முதலில் சாதாரணமாகத் தான் கண்ணுடி ஜன்னலைத் திறக்க முயன்று இருப்பான். அவ்வாறு செய்திருந்தால் ஜன்னல் கதவு தானுகவே திறந்துகொண்டிருக்கும். அதனுல் கண்ணுடி ஜன்னல் வேண்டும் என்று உடைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா?" என்றூர் இன்ஸ்பெக்டர்.

காளிரத்னம் மிகுந்த ஆவலுடன் கண்ணுடி ஜன்னலைக் கவனித்தான். பிறகுதான் இன்ஸ்பெக்டரின் சந்தேகம் சரியானது என்பது காளி ரத்னத்திற்கு விளங்கியது. அது ஒரு சாதாரணக் கொலை அல்ல. அதில், வேறு சில மர்மங்களும் மறைந்திருக்கின்றன என்பது காளி ரத்னத்திற்கு விளங்கிவிட்டது. ஆச்சரியத்தினுல் அவனுடைய புருவங்கள் அகல விரிந்தன.

"நான் வேறு எதை எதையோ பரிசோதனை செய்துகொண்டிருந்தேன். இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன். இந்தக் கண்ணுடி ஜன்னல் வேண்டுமென்றே உடைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுமல் போய்விட்டது" என்று தன் தோல்வியை ஒப்புக்கொண்டான் காளிரத்னம்.

"நம் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காகத்தான் இந்தத் தந்திரத்தைக் குற்றவாளி கையாண்டிருக்கிறன். ஆனுல் அவனை விட நாம் புத்திசாலிகள் என்பதை அவன் மறந்துவிட்டான்!" என்று கூறிவிட்டு ஏளனமாகச் சிரித்தார் அவர். 'நாம்' என்று இன்ஸ்பெக்டர் தன்னையும் புத்திசாலிகள் கூட்டத்தில் சேர்த்து விட்டதைக் குறித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தான் காளிரத்னம்.

"அப்படியானுல் இது சாதாரண மரணமல்ல, வேண்டுமென்று செய்யப்பட்ட கொலை என்று கருதுகிறீர்களா?" என்று ஆவலுடன் கேட்டான் காளிரத்னம்.

இன்ஸ்பெக்டர் தலையை அசைத்த வண்ணம் பதில் பேசினர். "ஆமாம்! ஆனுல் இந்தக் கொலையில் சில விசித்திரமான விஷயங்கள் தென்படுகின்றன. கண்ணுடி ஜன்னல் வழியாகத்தான் குற்றவாளி இந்த அறையினுள் பிரவேசித்திருக்கவேண்டும். இந்த அறையில் மட்டும் ஈரமான சில காலடிகளும் இங்குமங்கும்

உதிர்ந்த பனித்துளிகளும் காணப்படுகின்றன. இந்த அறையில் மட்டும்தான் அவ்வீத அடையாளங்கள் தென்படுகின்றன. காலடிகள் பதிந்திருக்கும் அடையாளங்களிலிருந்தும் கண்ணாடி ஜன்னல் உட்புறம் தாளிடப்படாமல் இருப்பதிலிருந்தும் காப்டன் கந்தசாமியே குற்றவாளியைக் கண்ணாடி ஜன்னலைத் திறந்து உள்ளே வரவேற்றிருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது. அவ்வாறுஎல் குற்றவாளி, கொலையுண்ட காப்டனுக்குத் தெரிந்தவனகத்தான் இருக்கவேண்டும் என்று நீனைக்க இடமிருக்கிறதல்லவா? அது சரி காளிரத்னம்! இந்த வட்டாரத்தில் நீ பலகாலமாக இருந்துவருகிறாய். மேலும் நீ சோலைமலை ஆசாமி. ஆகவே, உனக்குக் காப்டன் கந்தசாமியைப்பற்றி மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்திருக்கவேண்டும். அவர் எப்பேர்ப்பட்டவர்? மூன்கோபம் மிகுந்தவரா? அவருக்கு யாராவது விரோதிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அவர் பணத்தில் கண்ணும் கருத்தும் மிகுந்தவர். அளவுசியமாகச் செலவு செய்யமாட்டார். அதற்காக அவரைக் கருமி என்றும் சொல்லிவிடமுடியாது. எனக்குத் தெரிந்து அவருக்கு விரோதிகள் ஒருவரும் கிடையாது. எனக்குத் தெரிந்து அவர் எவரையும் விரோதித்துக் கொண்டதும் இல்லை."

"இங்கு வருவதற்கு மூன்பு, அதாவது அவர் இராணுவத்தில் இருந்த காலத்தில் யாரையாவது விரோதித்துக் கொண்டிருக்கலாமல்லவா?"

"அது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் தன்னைக் கொலை செய்யுமளவிற்கு ஒருவரையும் விரோதித்துக் கொண்டிருக்க மாட்டார். அவர் இராணுவத்தை விட்டு விலகி இங்கு வந்து குடியேறிப் பல வருடங்களாகி விட்டன. ஆகவே அவ்வாறு சந்தேகிப்பதற்கு இடமில்லை. ஆனால் அவர் ஒரு செல்வந்தராகையினால் பணவிஷயமாகத்தான் அவர் கொலைசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்" என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான் காளிரத்னம். இன்ஸ்பெக்டர் இவ்வளவு சகஜமாகத் தன்னுடன் கலந்தாலோசிக்கிறாரே ஏன்ற எண்ணம் அவனைக் களிப்படையச் செய்தது.

"அது சரி, இந்த வீட்டில் அவரைத்தவிர வேறு யாராவது இருக்கிறார்களா?"

"தற்போது ஒருவரும் இல்லை. ஆனால் ஐந்து வருடங்களாக ஏகாம்பரம் என்ற வேலைக்காரன் இந்த வீட்டில் வசித்துவந்தான். இந்த வீட்டின் முழுபொறுப்பையும் ஏற்று, எல்லா வேலைகளையும்

அவனே கவனித்து வந்தான். ஆனால் ஒருமாத காலத்திற்கு முன்பு அவன் கலியாணம் செய்துகொண்டு தனியாகப் போய் விட்டான்."

"அப்படியா? அவனை விசாரித்தால் காப்டனைப்பற்றி ஏதாவது சில உண்மைகள் கிடைக்குமே?"

"நேற்று இரவே அவனைச் சந்தித்து விசாரித்துவிட்டேன். அவன் கலியாணமானவுடன் பாலகுமார் வீதியில் ஒரு வீட்டை ஏற்பாடு செய்துகொண்டு குடியேறிவிட்டான். ஆனால் வேலையை விட்டுவிடவில்லை. பிரதினமும் இங்கு வந்து வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறான். நேற்றுக் காலை வழக்கம்போல் வேலைக்கு வந்திருக்கிறான். எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு இரண்டரை மணிக்குத்தான் தன்னுடைய வீட்டிற்குச்சென்று இருக்கிறான். இதை அவனே என்னிடம் தெரிவித்தான்."

"ஏகாம்பரம்தான் கடைசிமுறையாகக் காப்டனை உயிருடன் பார்த்திருக்கிறான். ஆகவே நான் அவனை விசாரிக்கவேண்டும்."

"நான் அவனை இங்கு வரச்சொல்லியிருந்தேன். அவன் நமக்காக அடுத்த அறையில் காத்துக்கொண்டிருக்கிறான். இங்கு அழைத்து வரட்டுமா?"

"சபாஷ்! நீ மிகுந்த புத்திசாலித்தனமாகவும், முன் எச்சரிக்கையுடனும் இருந்திருக்கிறாய். இந்தக் கொலையின் மர்மத்தைக் கண்டுபிடித்து விடவேண்டும் என்று நீ துடித்துக்கொண்டிருக்கிறாய். ஆனால் இனிமேல்தான் சிக்கல்கள் ஆரம்பமாகப் போகின்றன. மிகுந்த ஜாக்கிரதையுடனும் புத்திசாலித்தனத்துடனும் இருந்தால் தவிர, நம்மால் குற்றவாளியைக் கண்டு பிடிக்கமுடியாது. அது சரி, ஏகாம்பரம் எத்தகையவன், அவனுடைய குணாதிசயங்களைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"அவன் யுத்தகாலத்தில் கப்பல் படையில் வேலைசெய்தவன். யுத்தம் நின்று அவன் வெளியேற்றப்பட்ட பிற்கு வேலையில்லாமல் எங்கெல்லாமோ அலைந்துகொண்டிருந்தான். வேறு வேலை ஒன்றும் கிடைக்காததினால்தான் இங்கு வந்து சேர்ந்தான் அவன். நல்ல குணம் படைத்தவன். எந்தவிதமான துர்ப்பழக்கமும் அவனிடம் கிடையாது."

"ஏகாம்பரம் கலியாணமான பிறகுதானே அந்த வீட்டை விட்டு வெளியே சென்றான்?"

"ஆமாம்."

"அதற்கு என்ன காரணம்?"

"கலியாணமான பிறகு தனியாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம்."

"ஒருவேளை காப்டனுக்கும் ஏகாம்பரத்தின் மனைவிக்கும் ஏதாவது....."

"அவ்விதமான சந்தேகம் உங்களுக்கு வேண்டாம். காப்டன் நோமையும் ஒழுக்கமும் மிகுந்தவர். பெண்களைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது. ஏகாம்பரம் தானுகத்தான் தனியாக வசிக்கத் தீர்மானித்திருக்க வேண்டும்."

"நான் முதலில் ஏகாம்பரத்தைப் பார்த்து விசாரிக்கிறேன். பிறகு இந்த வீட்டைச் சுற்றிப் பார்க்கவேண்டும். அடுத்தபடியாக சின்னமலை நீலவானம் ஓட்டலுக்குச் சென்று அங்கு வசித்து வரும் மேஜர் பகதூர்சிங்கைச் சந்திக்கவேண்டும். காப்டன் மரணமடைந்த நேரத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டது எனக்கு ஆர்வத்தை உண்டாக்கியிருக்கிறது" என்று கூறிவிட்டு மீண்டும் அவ்வறையைச் சுற்றி ஒரு முறை கண்ணோட்டம் விட்டார் இன்ஸ்பெக்டர்.

"இந்த அறையில் இருக்கும் அலங்கோலமும் கண்ணாடி ஜன்னல் உடைக்கப்பட்டிருப்பதும் வெறும் கபட நாடகம் என்றுதான் நான் நம்புகிறேன்!" என்றார் அவர் சந்தேகம் நிறைந்த குரலில்.

"குற்றவாளி, காப்டனுக்குத் தெரிந்தவனுக இருக்க வேண்டும். அவராகத்தான் அவனை உள்ளே வரவேற்றிருக்க வேண்டும் என்று சொன்னீர்களே!" என்று அவரையே மடக்கினான் காளிரத்னம்.

"அவ்வாறுதான் நினைத்தேன். ஆனால் யோசித்துப் பார்க்கும் போது அதிலும் சில குழப்பங்கள் இருக்கின்றன. குற்றவாளி காப்டனுக்குத் தெரிந்தவனுக இருந்திருந்தால் அவனை அவர் வாசல் பக்கம் வழியாகவே உள்ளே அனுமதித்து இருக்கலாம். எதற்காகத் தோட்டத்தின் பக்கம் வரச்சொல்லிக் கண்ணாடி ஜன்னலைத் திறந்து ஏறிக் குதித்து உள்ளே வரும்படி சொல்ல வேண்டும்? அதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டார் இன்ஸ்பெக்டர்.

காளிரத்னத்தின் மனத்திலும் இப்பொழுது அதே சந்தேகம் தான் எழுந்தது. ஆனல் ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி அந்தச் சந்தேகத்தைப் போக்க முயன்றுன் அவன்.

"காப்டனுக்கு அவன் தன்னைக் கொலைசெய்ய வந்திருக்கிறுன் என்பது தெரிந்திருக்காது. அத்துடன் அவன் வீட்டினுள் வருவது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம்" என்று யோசனை கூறினன் அவன்!

"அதிகமான வீடுகளும் மனித சஞ்சாரமும் இல்லாத இந்த வட்டாரத்தில் அதுவும் பொழுது சாயும் நேரத்தில் ஒருவரும் இந்த வீட்டைக் கவனித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அத்துடன் வீட்டைச்சுற்றி மரங்களும் செடி கொடிகளும் இருப்பதினல் காப்டன் தன் நண்பரை முன்புறமாக வரவேற்றிருந்தால் ஒருவரும் பார்த்திருக்கமாட்டார்கள். ஆகவே இதில் ஏதோ மர்மம் மறைந்திருக்கவேண்டும். போகப் போக உனக்கே என் சந்தேகத்தின் காரணம் விளங்கும்" என்று கூறிவிட்டு ஏகாம்பரத்தை விசாரிக்கச்சென்றுர் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டரையும் அவருக்குப் பின்னால் வரும் கான்ஸ்டேபிளையும் கண்டவுடன் மரியாதையாக எழுந்து நின்று அவர்களுக்கு வணக்கம் செலுத்தினான் ஏகாம்பரம். அவன் கறுப்பாகவும் குள்ளமாகவும் இருந்தான். கன்னங்களில் குழி விழுந்திருந்தபோதிலும் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டான் அவன். அவருடன் ஒத்துழைக்கவும், எந்தவிதமான கேள்விகளுக்கும் பதில் சொல்லத்தயாராகவும் இருந்தான்.

இன்ஸ்பெக்டர் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு அவன் எத்தகையவன் என்பதைப் புரிந்துகொண்டவர் போல் பேச ஆரம்பித்தார்.

"நீதானே ஏகாம்பரம்?"

"ஆமாம் சார்!"

"காப்டனின் கொலையைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?"

"எனக்கு ஒன்றும் தெரியாது. அவர் மரணமடைந்த செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போய்விட்டேன். இவ்வாறு அவர் திடீர்மரணமடைவார் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை சார்!"

"நீதானே இந்த வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகிறாய்?"

"ஆமாம், பொழுது விடிந்தவுடன் வேலைக்கு வந்துவிடுவேன். மாலை நேரம்வரை ஏதாவது ஒரு வேலை இருந்துகொண்டேயிருக்கும். ஆறுமணி சுமாருக்குத்தான் வீட்டிற்குச் செல்வேன்."

"நேற்று நீ உன் எஜமானரைக் கடைசி முறையாக எப்பொழுது பார்த்தாய்?"

"பகல் இரண்டு மணிக்குப் பார்த்தேன். நான் சீக்கிரம் போய்விட்டபடியால் பிறகு அவரைப் பார்க்கவில்லை."

"வழக்கமாக ஆறு மணி சுமாருக்கு வீடு செல்லும் நீ ஏன் நேற்றுச் சீக்கிரம் கிளம்பினாய்?"

"காப்டன்தான் வேலை முடிந்தவுடன் வீட்டிற்குப் போய் விடும்படி சொன்னார். அன்று மாலை திரும்பி வரும்படியும் சொல்லவில்லை."

"இது உனக்குச் சந்தேகத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கவில்லையா?"

"அவருடன் நான் ஐந்து வருடங்களாகப் பழகியிருக்கிறேன். அவருடைய குணம் எனக்கு நன்றாகத் தெரியும். மூடுபனி காலமாகையினாலும் விரைவில் இருட்டு வந்தபடியாலும் என்னைச் சீக்கிரமாகப் போகச் சொல்லிவிட்டார் என்று எண்ணினேன்."

"அவர் என்ன சொன்னார் என்பதைச் சற்று விளக்கமாகக் கூற முடியுமா?"

"நேற்றுப் பகல் போஜனத்திற்குப் பிறகுப் புத்தகங்களைப் படித்துக்கொண்டும், ரேடியோ இன்னிசையை ரசித்துக்கொண்டும் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார். நானும் இரண்டு மணி சும்மாருக்கு வேலையை மூடித்துக்கொண்டு ஹாலின் பக்கம் வந்து பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன். காப்டன் ஜன்னல் வழியாகத் தோட்டத்தையும் வானத்தையும் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுதே குளிர ஆரம்பித்து விட்டது. நேற்று வழக்கத்தைவிட விரைவில் இருட்டி விடலாம் என்று நினைப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

"'இன்று சீக்கிரம் இருட்டிவிடும்போல் இருக்கிறது. குளிரும் மூடுபனியும் அதிகமாக இருக்கும்போல் இருக்கிறது. இன்று மானேஜர் பகதூர்சிங் வருவது சந்தேகம்தான்! நான் இங்கு வந்து பல வருடங்களாகிவிட்டன. ஆனால் இந்த வருடத்தைப் போல் குளிரும் பனியும் எப்பொழுதும் இருந்தது இல்லை! இரவுச் சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு நீ போய்விடு. எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நானாக் காலை வழக்கம்போல் வந்தால் போதும்' என்று கூறினார் அவர். நான் அரைமணி நேரத்திற்குள் பாக்கியிருந்த வேலைகளை முடித்துக்கொண்டு கிளம்பி விட்டேன்."

"பகதூர்சிங்கை உனக்குத் தெரியுமா?"

"நன்றாகத் தெரியும். அவர் சின்னமலை நிலவானம் ஓட்டலில் வசித்து வருகிறார். வெள்ளிக்கிழமை தோறும் அவர் இங்கு வந்து விடுவார். எங்கள் எஜமானர் செவ்வாய்க்கிழமைகளில் அவரைப் பார்க்க சின்னமலைக்குப் போவார். இருவரும் சதுரங்கம் ஆடிக் கொண்டும், பொது விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டும் பொழுதை உற்சாகமாகக் கழிப்பார்கள். வெள்ளிக் கிழமைகளில் மேஜரைக் காணுவிட்டால் அவருக்குப் பொழுது போகாது. நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருப்பார். எஜமானருக்கும் வாரம் ஒருமுறை சின்னமலைக்குப் போய்வராவிட்டால் மன நிம்மதியிருக்காது. அதனால்தான் நேற்று மேஜர் வராமல் போய்விடப் போகிறாரோ என்ற எண்ணம் அவருக்குச் சற்றுக் கவலையைக் கொடுத்திருந்தது."

"மேஜரைத் தவிர அவர் நேற்று வேறு யாரையாவது எதிர் பார்த்துக் கொண்டிருந்தாரா?"

"அப்படி ஒன்றும் அவர் என்னிடம் சொல்லவில்லை."

"வழக்கத்திற்கு விரோதமாகவோ சந்தேகப்படும்படியோ அவரிடம் ஏதாவது மாறுதல் காணப்பட்டதா?"

"ஒன்றுமில்லை, வழக்கம்போல்தான் இருந்தார். மேஜர் வராவிட்டால் நேரத்தை எப்படிக் கழிப்பது என்ற எண்ணம் தான் அவருக்குச் சற்று மூகவாட்டத்தைக் கொடுத்திருந்தது என்று சொல்லலாம்."

"அது சரி. உனக்குச் சமீபத்தில் கலியாணமாகித் தனிக் குடித்தனம் வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன்...."

"ஆமாம், ஒரு மாதத்திற்கு முன்பு கலியாணமாயிற்று. அதிலிருந்து தனியாகத்தான் வசித்து வருகிறேன். சின்னமலை நீலவானம் ஓட்டலின் சொந்தக்காரியான ஸ்ரீமதி பத்மாவதியின் மகளைத்தான் மணந்து கொண்டேன்."

"கலியாணமான பிறகு நீ ஏன் தனியாக வேறு இடத்தில் வசிக்க ஆரம்பித்தாய்?"

"இந்த வீட்டிலேயே இருந்துவிடலாம் என்றுதான் நினைத் தேன். ஆனால் ஒரு பெண் இந்த வீட்டில் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அவருடைய வற்புறுத்துதலின் பேரில்தான் நான் தனிக் குடித்தனம் செல்ல வேண்டியிருந்தது."

"ஐந்து வருடங்களாகப் பழகி வந்த உனக்குக் காப்டனுக்குப் பெண்களைப் பிடிக்காது என்ற விஷயம் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்க எந்த எண்ணத்துடன் நீ கலியா ணம் செய்துகொண்டு உன் மனைவியை இங்கு அழைத்து வந்தாய்?"

"இவ்வளவு பெரிய வீட்டில் அவள் அவருடைய கண்ணில் படாமல் இருந்துவிடலாம் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் ஒரு பெண் எக்காரணம் கொண்டும் இந்த வீட்டில் இருக் கக்கூடாது என்று அவர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்."

"அது சரி. காப்டன் ஏன் பெண்களை அவ்வாறு வெறுத்து வந்தார்?"

"அதற்கு விசேஷமான காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு பெண்களின்மீது வெறுப்புக் கொள்வது என்பது அவருக்குப் பழக்கமாகிவிட்டது என்று எண்ணுகிறேன்."

இவ்வித மனப்பான்மை கொண்ட வேறு சிலரையும் நான் பார்த்திருக்கிறேன். ஏமாற்றம், வெட்கம், தாழ்வு மனப்பான்மை போன்றவைகள் இதற்குக் காரணங்களாக இருக்கலாம். காதலில் தோல்வி அடைந்திருக்கலாம். ஆசை காட்டி மோசம் செய்யப் பட்டிருக்கலாம் அல்லது ஒருதலைக் காமத்தினால் உள்ளம் குழித்து ஏமாற்றமடைந்து, மனமுடைந்து போயிருக்கலாம். அத்தகையவர்கள் பெண் இனத்தின் மீதே வெறுப்புக் கொள்வது இயற்கைதானே?" என்று உலக அனுபவம் மிகுந்தவன்போல் பேசினான் ஏகாம்பரம்.

இன்ஸ்பெக்டர் கடைக்கண்ணால் அவனைக் கவனித்துவிட்டுத் தொடர்ந்து விசாரிக்க ஆரம்பித்தார்.

"காப்டனுக்குக் கலியாணமாகவில்லை என்று எண்ணுகிறேன்?"

"இல்லை! பெண்களை வெறுக்கும் அவர் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதில் ஆச்சரியமில்லையே?"

"அவருக்கு உற்றார் உறவினர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"சந்திரகிரியில் அவருடைய சகோதரி ஒருத்தி வசித்து வருகிறார். அத்துடன் மற்றொரு சகோதரியின் மகன் எவனை இருப்பதாகவும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அவர்கள் எப்பொழுதாவது இந்த வீட்டிற்கு வந்து போயிருக்கிறார்களா?"

"இல்லை. மேலும் அவர் தன் சகோதரியுடன் மனஸ்தாபம் கொண்டிருந்தார் என்று தெரிய வருகிறது."

"அவளுடைய பெயர் என்ன?"

"கற்பகம் என்று எண்ணுகிறேன். ஆனால் நிச்சயமாகத் தெரியாது."

"அந்த அம்மாள் எங்கு வசித்து வருகிறாள் என்பதாவது உனக்குத் தெரியுமா?"

"அதுவும் எனக்குத் தெரியாது."

"அதைப்பற்றிப் பரவாயில்லை. காப்டனின் கடிதப்போக்கு வரத்துக்களைக் கவனித்துப் பார்த்தால் கற்பகத்தின் விலாசத்தைக் கண்டுபிடித்து விடலாம். அது சரி ஏகாம்பரம், நேற்று மத்தியானம் இங்கிருந்து வீட்டிற்குப் போன பிறகு நீ என்ன செய்தாய்?"

"நான் வீட்டிலேயேதான் இருந்தேன்."

"நீ எங்கு வசிக்கிறாய்?"

"இரண்டு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் பாலகுமார் வீதி 85-ம் நெம்பர் வீட்டில் இருக்கிறேன்."

"நிச்சயமாக நீ வீட்டை விட்டு எங்கும் வெளியே போக வில்லையே?"

"கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன். இரண்டே முக்கால் மணிக்கு வீட்டை அடைந்த நான் வெளியே அடி எடுத்து வைக்கவில்லை. அப்பொழுதே குளிர ஆரம்பித்துவிட்டது. நான் வீட்டைவிட்டு நகரவில்லை."

"இதற்கு யாராவது சாட்சி யிருக்கிறார்களா?"

"என் மனைவிக்குத் தெரியும்!"

"உன் மீது சந்தேகம் கொண்டு விட்டதாக எண்ணிவிட வேண்டாம். ஒவ்வொருவரையும் விசாரிக்க வேண்டியது என் கடமையல்லவா?" என்று சமாதானம் சொன்னார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

ஆனால் ஏகாம்பரத்திற்கு, இன்ஸ்பெக்டர் தன்மீது சந்தேகம் கொண்டு விட்டார் என்பது விளங்கிவிட்டபடியால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லத் தயாராக இருப்பவன்போல் நின்றான் அவன். ஆனால் இன்ஸ்பெக்டர் அவன் மூலம் அறிந்த உண்மைகளை டைரியில் குறித்துக் கொள்வதில் மூனைந்திருந்தார்.

தான் நின்றிருந்த இடத்தைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்த ஏகாம்பரத்தின் பார்வை ஆபீஸ் அறையினுள் விழுந்தது. அவ்வறையின் அலங்கோலத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனான் அவன்.

"இந்த அறை ஒரு போதும் இப்படி இருந்தது இல்லை. எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்காக வைக்கட்டுமா?" என்று கேட்டான் அவன். இன்ஸ்பெக்டர் புருவத்தை உயர்த்திக் கருவிழிகளை உருட்டி அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார்.

"இன்னும் பரிசீலனை முடியவில்லை. அதுவரை எல்லாம் அப்படியே இருக்க வேண்டும். இந்த வீட்டில் இருக்கும் இதர அறைகளைப் பரிசோதனை செய்யவில்லை. இந்த வீட்டைப்பற்றி உனக்கு அதிகம் தெரியும். ஆகவே பரிசீலனை முடியும்வரை இங்கு இருக்க முடியுமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"என்னால் முடிந்த உதவியைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எப்படியாவது குற்றவாளியைக் கண்டுபிடித்து

அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தால் போதும்" என்று ஆர்வம் மிகுந்த குரலில் சொன்னான் ஏகாம்பரம்.

இன்ஸ்பெக்டர் அவனை அழைத்துக்கொண்டு மற்ற இடங்களைக் கவனிக்க ஆரம்பித்தார். இதர இடங்களில் அவருக்குப் பயன்படுமளவிற்கு எந்த விதமான துப்பும் கிடைக்கவில்லை. மீண்டும் இருவரும் ஆபீஸ் அறைக்கே வந்து சேர்ந்தனர். அவ்வறையின் வடகோடியில் இருந்த மேசையின் மீது ஒரு தட்டும் இரண்டு வெள்ளிக் கோப்பைகளும் இருந்தன. மற்றொரு புறம் கவர்ச்சி மிகுந்த மூன்று புத்தகங்கள் கிடந்தன. வெள்ளிக் கோப்பைகளின்மீது எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. மூன்று புத்தகங்களிலும் காதல் கதைகள் அடங்கியிருப்பதை மேலட்டைகள் வெளிப்படுத்தின. அந்தக் கோப்பைகளையும் புத்தகங்களையும் பரிசோதனை செய்தார் இன்ஸ்பெக்டர்.

"அந்தக் கோப்பைகள் இரண்டும் அவருக்கு விளையாட்டுப் பந்தயம் ஒன்றில் கிடைத்தன. அறிவுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அந்த மூன்று நவீனங்களும் அவருக்குப் பரிசாகக் கிடைத்தன. அறிவை வளர்க்கக்கூடிய பத்துக் கேள்விகளுக்குச் சரியான பதில் அனுப்புகிறவர்களுக்குச் சிறந்த சன்மானம் கிடைக்கும் என்று ஒரு பத்திரிகையில் விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது.

"உலகத்திலுள்ள அதிசயங்களைப்பற்றியும், அநேகமாகப் பலருக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றியும்தான் கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. காப்டன் ராணுவத்தில் சேர்ந்து பல இடங்களுக்குச் சென்று அனுபவப்பட்டிருந்தபடியாலும், கலைக் களஞ்சிய நூல்களை நன்கு படித்திருந்தபடியாலும் சுலபமாக அக் கேள்விகளுக்குப் பதில் எழுதிவிட்டார். ஆயிரம், இரண்டாயிரம் பரிசு வரும் என்று எண்ணியிருந்தார். ஆனால் கடைசியில் இந்த மூன்று புத்தகங்களும், அவருடைய அறிவைப் பாராட்டி ஒரு நற்சான்றிதழும் வந்து சேர்ந்தன. அந்தப் போட்டியின்மூலம் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம் என்று நினைத்திருந்த அவருக்குக் காதல் நவீனங்கள் வந்து சேர்ந்தன, ஒருவேளை அவர் காதல் வலையில் சிக்குண்டவராக இருந்திருந்தால் பணம் வந்திருக்குமோ என்னவோ?" என்று ஏளனம் கலந்த புன்னகையுடன் கூறினான் அவன்.

இன்ஸ்பெக்டரும் அலட்சியமாகப் புன்னகை புரிந்து விட்டுத் தொடர்ந்து தன் பரிசோதனையை ஆரம்பித்தார். அவருடைய துணிமணிகள் கோட்ஸ்டாண்டில் தொங்கிக்கொண்

டிருந்தன. தேகப்பயிற்சி சம்பந்தமான புத்தகங்கள் சில கண்ணாடி அலமாரியை அலங்கரித்துக்கொண்டிருந்தன. காக்கி நிற உறையினுள் திணிக்கப்பட்ட டென்னிஸ் மட்டை சுவரோடு சுவராய்த் தொங்கிக்கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் இருந்த டீபாய் ஒன்றின்மீது, யானையின் வலது கால் முதலையின் வாயினுள் திணிக்கப்பட்டதுபோல் தந்தத்தினால் செய்யப்பட்ட சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. 'முதலையின் வாயில் காலை விட்டுவிட்டு விழிக்கும் யானையைப்போல் நீ விழித்துக்கொண்டிருக்கிறாயே!' என்று கூறுவதுபோல் இருந்தது அந்தச் சிலையின் தோற்றம்!

"காப்டன் இந்த வீட்டில் எவ்வளவு காலமாக வசித்து வருகிறார் என்று சொல்ல முடியுமா?"

"நான் வந்து ஐந்து வருடங்களாகின்றன, அப்பொழுதிலிருந்து காப்டன் இந்த வீட்டில்தான் இருந்துவருகிறார். ஆனால் அதற்கு முன்பு அவர் இந்த வட்டாரத்தில் இருக்கும் ஆனந்த நிலையத்தில் வசித்து வந்ததாகத் தெரியவந்தது."

"ஆனந்த நிலையமா?"

"ஆமாம்! அதுவும் காப்டனின் வீடுதான்! அந்த வீட்டை அவர் தற்போது ஸ்ரீமதி வேதவல்லிக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார். அங்கு இருக்கும்போதுதான் காப்டன் இந்தப் பொருள்களையெல்லாம் வாங்கியிருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன்."

"வேதவல்லியைக் காப்டனுக்கு ஏற்கனவே தெரியுமா?"

"அவர்கள் அறிமுகமில்லாதவர்கள் என்றே எண்ணுகிறேன்."

"அது எப்படி அவ்வளவு நிச்சயமாக உனக்குத் தெரியும்? அவ்வாறு அவர் உன்னிடம் சொன்னாரா?"

"இல்லை. ஸ்ரீமதி வேதவல்லி, வக்கீல் லோகநாதனின் சிபார்சின் பேரில்தான் ஆனந்தநிலையத்திற்குக் குடிவந்தாள். அவள் காப்டனுக்கு ஏற்கனவே அறிமுகமானவளாக இருந்திருந்தால் கடிதம் மூலம் எழுதி வீட்டை ஏற்பாடு செய்துகொண்டிருக்கலாமல்லவா?" என்றான் ஏகாம்பரம்.

இன்ஸ்பெக்டர் அவனுடைய புத்தி கூர்மையைப் பாராட்டியவர்போல் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மேலும் அவனை விசாரணை செய்தார்.

"அவர் அவளிடம் எவ்வாறு பழகிவந்தார்? வீட்டுச் சொந்தக்காரர் என்ற முறையில் இறுமாப்புடன் பழகினாரா? அல்லது அன்புடன் நடந்துகொண்டாரா?"

"காப்டன் எந்தவிதமான அக்கறையுமின்றிதான் இருந்து வந்தார். ஆனால் வேதவல்லிதான் இங்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தாள். ஆனந்தநிலையத்தின் அமைப்பைப் பற்றி வர்ணிப்பாள். அங்கு குடிவந்த பிறகு தனக்கு நிம்மதியும் ஆனந்தமும் ஏற்பட்டிருப்பதாகக் கூறிக்கொண்டிருந்தாள். மேலும் எஜமானரைக்கூட அவள் பாராட்டிப் பேசிய துண்டு."

"அப்படியானால் அவர் அவளிடம் அதே முறையில்தான் பழகி வந்தார் என்று சொல்கிறாயா?"

"காப்டனின் மனத்தைக் கரையவைப்பது அத்தனை லேசான காரியமல்ல. ஒரு பெண் எவ்வளவு அழகியாயும் அறிவுள்ளவளாயும் அளவுமீறிய ஆற்றல் படைத்தவளாயும் இருந்தபோதிலும் அவரை எளிதில் வசப்படுத்திவிட முடியாது. வேதவல்லி வீட்டைப் புகழும்போதும், தன்னைப் பாராட்டிப் பேசும்போதும் அவர் தலையை அசைத்த வண்ணம் மௌனமாக அவ்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருப்பாரே தவிர, ஒருவார்த்தைகூடப் பேச மாட்டார். இல்லாவிட்டால் அவளுடைய அழைப்பையும் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருப்பாரா?"

"அவள் அவரை எதற்காக அழைத்தாள்?"

"குறிப்பாகக் காரணம் ஒன்றும் சொல்லமுடியாது. 'உங்கள் வீடு எனக்குப் பிடித்திருக்கிறது. நான் அங்கு சௌக்கியமாய் இருக்கிறேன். அங்கு நான் குடியிருந்தபோதிலும் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து போகலாம். அந்தப் பக்கம் வந்தால் கட்டாயம் வீட்டிற்கு வரவேண்டும்' என்று அவள் பலமுறை வற்புறுத்தி அழைத்திருக்கிறாள். ஆனந்தநிலையம் ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது. வீட்டைவிட்டு அநேகமாக வெளியேறுத அவர் அனாவசியமாக ஆறு மைல் தூரம் போய் விட்டு வருவாரா?"

"காப்டன் பெண்களின்மீது ஏன் அவ்வளவு வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதுதான் புரியவில்லை. அது சரி, ஸ்ரீமதி வேதவல்லியின் கணவன் எங்கே இருக்கிறான்?"

"அவளுக்கும் கணவனுக்கும் ஒற்றுமையில்லை. வேதவல்லி கொஞ்சம் படித்தவள்; பசையுள்ளவள். அதனால்தான் தனியாக வந்துவிட்டாள்" என்றான் அவன்.

இன்ஸ்பெக்டரிடம் ஏற்கனவே ஏற்பட்டிருந்த சிக்கல் இப் பொழுது அதிகமாகிவிட்டது. 'வேதவல்லி எதற்காகச் சோலை மலைக்கு வந்தாள்? ஏன் ஆனந்த நிலையத்தில் குடியேறினாள்?

கணவனை வெறுத்துவிட்ட வந்த அவள் ஏன் காப்டனிடம் அத்தனை சகஜமாகப் பழகினாள்? ஏதாவது ஒரு முக்கிய திட்டத்துடன் அவள் இங்கு வந்திருப்பாளோ? காப்டனின் கொலைக்கும் அவளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா?' இதுபோன்ற கேள்விகள் ஒரே சமயத்தில் எழுந்து அவருடைய மூளையை உலுக்கின.

அந்தக் கொலையில் பல சிக்கல்கள் மறைந்திருப்பதை உணர்ந்தார் இன்ஸ்பெக்டர். ஆகவே முதன் முதலில் சின்னமலை நீலவானம் ஓட்டலுக்குச்சென்று துப்பறிவது என்ற தீர்மானத்துடன் அங்கிருந்து புறப்பட்டார்.

நீலவானம் ஓட்டலை நடத்திவந்த ஸ்ரீமதி பத்மாவதி ஓட்டலின் நிர்வாகத்தைக் கவனிக்க மானேஜர் ஒருவரை நியமித்திருந்தாள். அங்கு வசிப்பவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வது, கணக்குத்தீர்த்து பணம் வாங்குவது போன்ற வேலைகளை மானேஜர் தான் கவனித்து வந்தார். அதற்காக பத்மாவதி சும்மாயிருந்து விடவில்லை. அன்றுட வரவு செலவுகளைக் கவனித்துக்கொண்டும் மாதம் ஒருமுறை லாப நஷ்ட கணக்குப் பார்த்துக்கொண்டும் தான் இருந்தாள் அவள். அத்துடன் அவளுக்கு அங்கு நிரந்தரமாக வசிப்பவர்களைப்பற்றியும் ஓரளவு தெரிந்திருந்தது. நீலவானம் ஓட்டலின் மூலம் அவளுக்கு நிறைய வருமானம் வந்த போதிலும் செலவும் அதிகமாகத்தான் இருந்தது. அதிக லாபம் சம்பாதிக்க முடியவில்லை. ஆயினும் பணக்காரர்களின் ஜாபிவில்தான் சேர்க்கப்பட்டிருந்தாள் அவள். ஓரளவு அந்தஸ்தும் செல்வமும் படைத்த அவள் எவ்வாறு தன் மகள் ராணி ஏகாம்பரத்தை மணந்துகொள்ளச் சம்மதித்தாள் என்பது வியப்பாக இருக்கிறதல்லவா? உண்மைக் காதலுக்கு ஜாதிமத வித்தியாசம் ஏது? ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு ஏது? பெண்கள், பிள்ளைகள் இவர்களின் விருப்பப்படி மணம்செய்து வைப்பதுதானே பெற்றோர்களின் கடமை? தன் கடமையை உணர்ந்திருந்தபடியால்தான் பத்மாவதி தன் மகளின் காதலன் சர்வசாதாரண நிலையில் இருந்தபோதிலும் அவனையே அவளுக்கு மணம் செய்துவைத்தாள்!

பத்மாவதி அவ்வாறு பெருந்தன்மையுடனும் விசால மனப்பான்மையுடனும் நடந்துகொண்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அவளுடைய சொந்த வாழ்க்கையும் அதற்குக் காரணம் என்றும் சொல்லலாம். பத்மாவதி ஓர் ஏழைக் குடும்பத்துப் பெண். இரண்டு பெண்களில் பெற்றோர்கள் அவளைத்தான் அதிகமாக நேசித்தார்கள். பத்மாவதி நல்ல அழகி. புத்திசாலித்தனம் மிகுந்தவள். நன்கு படித்துவிட்டு ஒரு கம்பெனியில் உத்தியோகம் செய்துவந்தாள். காரியாலயத்தில் கூட வேலை செய்துவந்த ஒரு கட்டழகனை அவள் விரும்பினாள்; நேசித்தாள்; பரிபூரணமாகக் காதலித்தாள். அந்த விஷயம் பத்மாவதியின் மூத்த சகோதரிக்குத் தெரிந்துவிட்டது. பொறுமையும், பத்மாவதியின்மீது இருந்த வெறுப்பும் அவளை ஒரு மனித மிருகமாக்கின. எப்படியாவது அவளுடைய காதல் நிறைவேறாமல் செய்துவிடவேண்டும் என்று தீர்மானித்தாள். பத்மாவதியின் காதலனைப்பற்றித் துரபிப்பிராயம் ஏற்படும்படி தன் பெற்றோர்களிடம் பல விஷயங்களைச்

சொன்னாள். பத்மாவதியைக் கட்டுத்திட்டம் செய்தாள். ஆயினும் அவள் தன் காதலனையே மணப்பது என்று தீவிரமாக இருந்தாள்.

பத்மாவதியின் காதலன் அவளைப் பரிபூரணமாக நேசித்த போதிலும் அவன் ஒரு கோழையாகவும் பயந்த சுபாவம் கொண்ட வனாகவும் இருந்தபடியால் தன் அபிப்பிராயத்தைப் பெற்றோர் களிடம் வெளியிடத் துணிவின்றித் தவித்துக்கொண்டிருந்தான். இத்தனை இடையூறுகளுக்குமிடையே ஜாதிமத வித்தியாசமும் ஏழை, பணக்காரன் என்ற பிளவும் குறுக்கிட்டன. காதலனுக்கு இவைகளை எதிர்த்துப் போராடத் துணிவு இல்லை. கடைசியில் தன் பெற்றோர்களின் விருப்பப்படி வேறு ஒருத்தியை மணந்து கொண்டான். அதன் விளைவாக பத்மாவதியின் மனம் முறிந்தது. ஒன்றிரண்டு வருடங்கள் வரை மனக்கவலையில் ஆழ்ந்துகிடந்தாள். பெற்றோர், உற்றார் உறவினர்களின் வற் புறுத்துதலின்பேரில் பத்மாவதி ஒருவனை மணம் செய்துகொண்டு சின்னமலைக்கு வந்துவிட்டாள். அவளுடைய கணவன்தான் நீலவானம் ஓட்டலை நடத்திவந்தான். ராணி பிறந்து ஐந்து வருடங்களில் பத்மாவதியின் கணவன் இறந்து போய்விட்டான். தன் வாழ்க்கைதான் பாழாகிவிட்டதே, மகளாவது மனம்போல் வாழட்டும் என்று ராணியைச் சீரும் சிறப்புமாய் வளர்த்தாள். கடைசியில் அவள் விருப்பப்படி ஏகாம்பரத்தை அவனுக்கு மணம் செய்துவைத்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

பத்மாவதி விசாலமான ஆபீஸ் அறையில் அமர்ந்து ரேடி யோவின் இன்னிசையை அனுபவித்த வண்ணம் இருந்தாள். அவளுடைய செவிகளில்மட்டும் பாட்டு விழுந்துகொண்டிருந்ததே தவிர, மனம் ஓட்டலின் நிர்வாகம், குடும்பத்தின் நிலைமை, எதிர் கால வாழ்க்கை முதலியவைகளைப்பற்றிய எண்ணத்திலேயே ஆழ்ந்துகிடந்தது. அதனால்தான் இன்ஸ்பெக்டர் தன் அறை யினுள் பிரவேசித்ததையும் அவளால் கவனிக்க முடியவில்லை.

நாகலிங்கம் தானைத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பிறகுதான் போலீஸ் அதிகாரி ஒரு முக்கிய விஷயமாகத் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்பதை உணர்ந்தாள். அவரை எதிரில் இருந்த சோபாவில் அமரச்செய்து காபி, பலகாரம் கொண்டு வரச்சொல்லி வெகுவாக உபசரித்தாள்.

காப்டன் கந்தசாமியின் மரணத்தைப்பற்றியும், அதில் தனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களைப்பற்றியும் வெளியிட்டு விட்டு விஷயத்திற்கு வந்தார் இன்ஸ்பெக்டர்.

"காப்டன் இவ்வாறு மரணமடைவார் என்று நான் நினைக்க வில்லை. சோலைமலை 'முல்லைவில்லா' ஒரு தனிப்பட்ட இடத்தில்

இருக்கிறது. பகல் வேளைகளில்கூட அதிகமாக அந்த வட்டாரத்தில் மனித சஞ்சாரம் இருக்காது. மேலும் அவர் ஒரு செல்வந்தர். இந்த நிலையில் எந்தவிதமானத் தற்காப்புமின்றி இவ்வளவு அலட்சியமாக வாழ்ந்து வந்திருக்கிறாரே! கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் இருந்திருந்தால் இவ்வாறு அவர் துர் மரணமடைந்திருக்கமாட்டார்" என்று அனுதாபம் நிறைந்த குரலில் பேசினார் இன்ஸ்பெக்டர்.

"இன்று காலையில்தான் எனக்கு விஷயம் தெரியவந்தது. நேற்று இரவு எவ்வளவு குளிர் என்கிறீர்கள்? பொழுது விடிந்த பிறகுகூடச் சரியாக மூடுபனி விலகவில்லை என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! இந்த பயங்கர இரவைக் குற்றவாளி பயன் படுத்திக்கொண்டிருக்கிறான். காப்டனின் நெருங்கிய நண்பர் மேஜர் பகதூர்சிங்கும் இங்குதான் இருக்கிறார். செவ்வாய்க் கிழமைதோறும் அவர் மேஜரைப் பார்க்க இங்கு வருவார். போனவாரம்கூட அவரைப் பார்த்தேன். இருவருடைய இணை பிரியாத நட்பையும் அன்பையும் கண்டு நான்கூடச் சிற்சில சமயங்களில் பொறுமை கொண்டதுண்டு. காப்டனின் தேகக் கட்டையும் பலத்தைப் பாதுகாத்து வந்தவிதத்தையும் கேள்விப் பட்டு ஆச்சரியமடைந்தும் இருக்கிறேன். ஆனால் அவர் இவ்வாறு திடீரென்று போய்விடுவார் என்று நான் நினைக்கவில்லை. நாளை எமக்கு என்ன நடக்குமோ யார் கண்டார்கள்?" என்று அனுதாபம் கலந்த பெருமூச்சு விட்டாள் அவள்!

"காப்டனின் மர்மக் கொலை விஷயமாகச் சில விஷயங்களை விசாரிக்கத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். உங்களால் முடிந்த உதவியைச் செய்யவேண்டும். நேற்று இந்த ஓட்டலில் யார் யார் இருந்தார்கள்? புதிய ஆசாமிகள் யாராவது வந்தார்களா? நீங்கள் தவறாக எண்ணவேண்டாம். அவைகளின் மூலம் உண்மை ஏதாவது கிடைக்குமா என்று அறியவே முயற்சிக்கிறேன்."

"என்னால் முடிந்த உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறேன். மானேஜர் ஓட்டலின் நிர்வாகத்தைக் கவனித்து வந்த போதிலும் அன்றாடம் என்ன நடக்கின்றன, யார் யார் இருக்கிறார்கள், வெளியேறுகிறார்கள், புதியதாக வருகிறார்கள் என்ற விஷயங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். கோடைகாலங்களில்தான் இங்கு கூட்டம் அதிகமாக இருக்கும். இம்மாதிரியான சமயங்களில் ஐந்தாறு பேருக்குமேல் தங்கியிருக்கமாட்டார்கள். இரண்டு மூன்று வியாபாரிகள் சில காலமாக இங்கு இருந்து வருகிறார்கள். கோயமுத்தூரிலிருந்து நேற்று

நடுப்பகல் நேரத்தில் ஒரு வாலிபன் வந்தான். இரவு கடைசி வண்டியில் மற்றொருவன் வந்தான்."

"கடைசி வண்டி இரவு பத்து மணிக்குத்தான் வருகிறது. ஆகவே அவனைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். கோயமுத்தூர் ஆசாமியைப்பற்றி உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்ல முடியுமா?"

"அவனுடைய பெயர் எனக்கு மறந்து விட்டது. புத்தகத்தைப் பார்த்தால் தெரியும். அவன் எதற்காக இந்த ஊருக்கு வந்தான் என்று தெரியவில்லை. இன்று காலை முதல் வண்டியில் அதாவது 6-10-க்கு புறப்படும் வண்டியில் சந்திரகிரிக்குப் புறப்பட்டுவிட்டான்."

"என்ன! அவன் இப்பொழுது ஓட்டலில் இல்லையா? அது சரி, இதற்கு முன்பு அவன் இங்கு வந்திருக்கிறானா?"

"இல்லை! அவனைப் பார்த்ததாகக்கூட நினைவு இல்லை."

"அவன் நேற்று இந்த ஓட்டலைவிட்டு எங்காவது வெளியே சென்றானா?"

"காலை மணிக்கு வெளியே சென்ற அவன் ஆறரை மணி சுமாருக்குத்தான் திரும்பி வந்தான்."

"ஆச்சரியமாக இருக்கிறதே! காப்டன் கந்தசாமியைப் பற்றிப் பேச்செடுத்திருக்கிறானா?"

"இங்கு வந்தது முதல் அவன் அனுவசியமாக ஒருவருடனும் பேசவில்லை. தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருந்து வந்தான். அவன் கவர்ச்சி மிகுந்த முகத்தோற்றத்துடன் காணப்பட்ட போதிலும் கவலையுற்றவன் போல்தான் காட்சியளித்தான்" என்றாள் பத்மாவதி.

இன்ஸ்பெக்டருக்கு அந்த வாலிபனின் மீது சந்தேகம் வந்தது. ஓட்டல் ரிஜிஸ்தரைக் கொண்டுவரச் செய்து அதைப் பரிசீலனை செய்தார்.

முதல் நாள் கோயமுத்தூரிலிருந்து வந்திருந்த ஆசாமியின் பெயர் ஜானகிராமன் என்று மட்டும்தான் போடப்பட்டிருந்ததே தவிர, மற்றபடி வேறு எந்தவிதமான உண்மைகளையும் அறிய முடியவில்லை. அவருக்கு ஜானகிராமனின் மீதும் சந்தேகம் வந்தது. மேஜர் பகதூர்சிங்கைப் பார்த்துப் பேசித் துப்பறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் அடுத்த ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து காபி அருந்திய வண்ணம் காப்டனின்

மரணத்தைப்பற்றிய செய்தி வெளி வந்திருந்த தினசரிப் பத்திரி கையைப் புரட்டியவண்ணம் இருந்தார்.

"நீங்கள்தானே மேஜர் பகதூர்சிங்?" என்று கேட்ட வண்ணம் அவன் முன்னல் போய் நின்றூர் இன்ஸ்பெக்டர். மேஜர் தன் பார்வையை அவர் பக்கம் திருப்பினன். உடையிலி ருந்தே அவரை யாரென்று உணர்ந்து கொண்டான் மேஜர். அவர் எதற்காகத் தன்னைப் பார்க்க வந்திருக்க வேண்டும் என்பதும் விளங்கியது.

"வணக்கம் இன்ஸ்பெக்டர்! உட்காருங்கள். காப்டனின் மர்மக் கொலை விஷயமாகத் தானே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான் மேஜர்.

"நான் உங்களைத் துப்பறிய வந்திருக்கிறேன். ஆனல் நீங்கள் என்னைத் துப்பறிந்து விட்டீர்களே?" என்று எளனம் கலந்த குரலில் கேட்டவண்ணம் அவனுக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்துகொண்டார் அவர்.

"போலீஸ் அதிகாரிகள் காரணம் இல்லாமல் எதையும் செய்யமாட்டார்கள். உங்களை நான் எதிர்பார்க்கவும் இல்லை. நேற்று என்னுடைய அத்தியந்த நண்பர் ஒருவர் கொலை செய்யப் பட்டிருக்கிறார். அந்தக் கொலையும் என்னல்தான் வெளிப் பட்டது. இந்த நிலையில் நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பதை நான் புரிந்துகொண்டதில் என்ன ஆச்சரியம் இருக் கிறது?"

"உங்களுடைய ஊகத்தைப் பாராட்டுகிறேன். இந்த வழக்கு விஷயமாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு முன்பு எனக்கு ஏற்பட்டிருக்கும் சில சந்தேகங் களைப் போக்கவேண்டும்."

"என்னல் முடிந்த உதவியைச் செய்யத் தயாராக இருக் கிறேன். எனக்குத் தெரிந்த விஷயங்களையும் கூறுகிறேன். எப்படியாவது நீங்கள் குற்றவாளியைக் கண்டுபிடித்து விட்டால் போதும்."

"காப்டன் கந்தசாமிக்கு விரோதிகள் யாராவது உண்டா?"

"அவரைப்போன்ற தங்கமான மனிதரை நான் பார்த்ததே இல்லை. இராணுவத்தில் வேலை பார்த்து வந்தவரான போதிலும் அவரிடம் முன்கோபமோ, பிடிவாத குணமோ, முரட்டுத்தனமோ கிடையாது. பண விஷயத்தில் கொஞ்சம் சிக்கனமாக நடந்து கொள்வார். அனுவசியமாகச் செலவு செய்யமாட்டார். அவ்வளவு

தான்! மற்றபடி அவர் எந்தவிதத்தில் பார்த்தாலும் உயர்ந்த மனிதர்தான்!"

"அவர் வீட்டு வேலை பார்த்து வரும் ஏகாம்பரத்தைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன? நம்பிக்கையானவன்தானு?"

"அவன் ஒழுங்கானவன் என்றுதான் எண்ணுகிறேன். ஏனென்றால் காப்டன் அவனிடம் மிகவும் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார்."

"அவனுடைய கலியாண விஷயமாக இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதுண்டா?"

"மனஸ்தாபம் என்று சொல்ல முடியாது. ஏகாம்பரம் ஒரு பிரம்மசாரியாகையினாலும் பெண்களை வெறுத்து வந்தபடியாலும் ஏகாம்பரத்தைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டாம் என்று எச்சரித்தார். திருமண வாழ்வில் ஏற்படும் கஷ்டநிஷ்டூரங்களை எடுத்துக் கூறினார். ஆனால் அவருடைய புத்திமதிகளைப் புறக்கணித்துவிட்டு ராணியை அவன் கலியாணம் செய்துகொண்டான். அதன் காரணமாகத்தான் அவன் தனியாக குடியேற வேண்டியிருந்தது."

"காப்டன் ஒரு பிரம்மசாரி; பெண் இனத்தையே வெறுத்து வந்தார். ஆனால் சிக்கனமானவர்; அனுவசியமாகச் செலவு செய்ய மாட்டார் என்பவைகள் தெரியவருகின்றன. அவ்வாறு இருக்கும்போது யாருக்காகப் பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தார்? அவர் ஏதாவது உயில் எழுதி வைத்திருக்கிறாரா? அப்படி இல்லாவிட்டால் அவருக்குப் பின் அவருடைய சொத்து யாருக்குப் போய்ச் சேரும்?"

"அவருடைய சொத்தைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். தன் சொத்து சம்பந்தமாக அவர் ஓர் உயில் எழுதி வைத்திருக்கிறார்."

"ஓ, அப்படியா! அந்த உயிலைப்பற்றி உங்களுக்கு விவரம் தெரியுமா?"

"அவர் தன்னுடைய உயிலில் தனக்குப் பிறகு என்னைத் தன் சொத்துக்களின் நிர்வாகியாக ஏற்பாடு செய்து எழுதி இருப்பதாகச் சொன்னார்."

"நீங்கள் அவருடைய எக்ஸிகியூட்டரா? மிகவும் சந்தோஷம். அவருடைய சொத்துக்களைப் பற்றிய விவரங்களைக் கூற முடியுமா?"

"சோலமலை வட்டாரத்திலேயே அவர்தான் பணக்காரர் என்று சொல்லிக் கொள்கிறார்களே தவிர, அவருடைய சொத்துக்களைப்பற்றிய விவரம் எனக்குத் தெரியாது."

"காப்டனுக்கு உற்றார் உறவினர்கள் யாராவது இருந்து வருகிறார்களா?"

"அவருக்கு ஒரு சகோதரியும், மருமானும் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்களை நான் பார்த்தது இல்லை. அவர்கள் காப்டனுடன் சண்டையிட்டுக் கொண்டதாகவும் தெரியவில்லை."

"அது சரி, நீங்கள் குறிப்பிடும் உயிலை அவர் எங்கு வைத்திருக்கிறார் என்று சொல்ல முடியுமா?"

"காந்திநாதன் என்ற சட்ட ஆலோசக கம்பெனியாரிடம் அது வைக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். எனென்றால் அவர்கள்தான் அந்த உயிலைத் தயாரித்தார்கள்."

"நல்லது, அந்த உயிலில் அடங்கியிருக்கும் விஷயங்களை அறிய விரும்புகிறேன். தயவு செய்து என்னுடன் அங்கு வர முடியுமா?"

"அந்த உயிலுக்கும் காப்டனின் மரணத்திற்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே?" என்று ஆச்சரியமும் சந்தேகமும் நிறைந்த குரலில் கேட்டான் மேஜர்.

"நாம் நினைப்பதுபோல் இது சாதாரண மரணம் அல்ல. இதில் பல மர்மங்கள் மறைந்துள்ளன. அதனால்தான் நான் இவ்வளவு முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. அது சரி, உங்களை முக்கியமாக ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அதை மறந்துவிட்டேன். நேற்று மாலை காப்டன் இறந்துவிட்டார் என்பதை அறிந்தவுடன் அவர் ஐந்தரைமணி சுமாருக்கு இறந்திருக்கலாமல்லவா என்று நீங்கள் டாக்டரிடம் கேட்கக் காரணம் என்ன?"

"உங்கள் கேள்வி ஆச்சரியமாக இருக்கிறதே! டாக்டர் அவருடைய உடலைப் பரிசோதனை செய்தபோது இரவு சுமார் எட்டரை மணி இருக்கும். காப்டன் இரண்டு மூன்று மணி நேரங்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என்று அவர் கூறியபடியால்தான் நான் அந்தக் கேள்வி கேட்க வேண்டியிருந்தது. இதை நீங்கள் பெரிய விஷயமாக நினைப்பதோ என்மீது சந்தேகம் கொள்வதோ அர்த்தமற்றது" என்று அடித்தாற்போல் பேசினான் மேஜர். இன்ஸ்பெக்டர் அந்த விஷயத்தைப்பற்றி அப்

பொழுது அதிகமாக வற்புறுத்தவில்லை. ஆயினும் சமயம் வரும் போது அதுபற்றி மீண்டும் அவளை விசாரிப்பது என்ற எண்ணத் துடன் விசாரணையை வேறு பக்கம் திருப்பினர்.

"சோலைமலை 'ஆனந்த நிலையம்' விஷயம்தான் எனக்கு அதிக மான ஆர்வத்தை உண்டாக்கி யிருக்கிறது. அந்த வீட்டில் ஒரு பெண்மணி வசித்து வருவதாகத் தெரிகிறது. அவளை உங்களுக்குத் தெரியுமா?"

"ஸ்ரீமதி வேதவல்லியைத்தானே கேட்கிறீர்கள்! அவளை எனக்கு நன்றாகத் தெரியும். பார்க்கப் போனால் நான் ஆனந்த நிலையத்தில் அப்பொழுது..."

"நீங்கள் ஆனந்த நிலையத்தில் இருந்தீர்களா? அங்கு எதற் காகச் சென்றீர்கள்? அப்பொழுது என்ன நடந்தது?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

ஆனந்த நிலையத்தில் நடந்த விஷயங்களைச் சொல்லிவிட வேண்டும் போலிருந்தது மேஜருக்கு! தொண்டையை முட்டிக் கொண்டு வார்த்தைகள் வெளியே வந்துவிட்டன. ஆனால் மிகுந்த பிரயாசையுடன் உண்மைகளை உள்ளே இழுத்துக்கொண்டான் அவன்.

மேஜர் ஏதோ புதிய விஷயங்களைச் சொல்லப் போகிறான் என்று ஆவலுடன் அவனையே பார்த்தவண்ணம் இருந்தார் இன்ஸ்பெக்டர். ஆனால் மேஜரின் முகத்தில் தோன்றிய குழப்ப மும் தடுமாற்றமும் அவரை ஏமாற்றத்தில் ஆழ்த்திவிட்டன. மேஜரிடமிருந்து விஷயங்களைக் கிரகிப்பது சுலபமல்ல என்பது அவருக்கு அப்பொழுதுதான் விளங்கியது. அவசரப்படாமல் பக்குவமாகத்தான் உண்மைகளை விசாரித்தறிய வேண்டும் என்று தீர்மானித்தார் இன்ஸ்பெக்டர்.

"நான் உங்களை வற்புறுத்துவதாக எண்ணவேண்டாம். ஸ்ரீமதி வேதவல்லி ஆனந்த நிலையத்தில் எவ்வளவு காலமாக வசித்து வருகிறாள்?"

"காப்டன் ஆனந்த நிலையத்தை ஐந்து வருடங்களாகத்தான் வாடகைக்கு விட்டு வருகிறார். இதற்கு முன்பு இரண்டு, மூன்று பேர் அந்த வீட்டில் குடியிருந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால் வேதவல்லி அங்கு வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகின்றன."

"அவள் மட்டும் அங்கு தனியாக வசித்து வருகின்றாளா? அல்லது.....?"

"தன் மகளுடன் வசித்து வருகிறாள்."

"அவர்கள் எதற்காக சோலைமலைக்கு வந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஸ்ரீமதி வேதவல்லி கொஞ்சம் பசையுள்ளவள். முற்போக்கு வதியும்கூட. அவளுடைய மகள் கொஞ்ச காலத்திற்கு முன்பு உடம்பு குணமின்றி இருந்தாளாம். சுகவாசத்தை உத்தேசித்து டாக்டரின் யோசனையின்பேரில் ஆனந்த நிலையத்திற்குக் குடியேறி னாள் என்று எண்ணுகிறேன். செல்வம் இருக்கிறது; செல்வாக்கு இருக்கிறது. அந்தஸ்து இருக்கிறது. இந்த நிலையில் அவள் இஷ்டப்படி யிருப்பதை யார் தடுக்க முடியும்?"

"வேதவல்லியின் குணாதிசயங்களைக் கூறமுடியுமா?"

"எல்லோரிடமும் சகஜமாகப் பேசுவாள்; நாலு நண்பர்கள் கிடைத்துவிட்டால் போதும். சாப்பாடுகூட வேண்டாம். மணிக் கணக்காகப் பேசிக்கொண்டிருப்பாள். நாடகம், நாட்டியம், இசை முதலியவைகளில் அதிக ஆர்வம் உண்டு, 'வாழ்க்கை நிரந்தரமற்றது. எந்த சமயத்தில், என்ன நேரும் என்று சொல்ல முடியாது. ஆகவே ஆனந்தமாகப் பொழுதைப் போக்கவேண்டும்' உல்லாசமாக வாழ்நாட்களைக் கழிக்கவேண்டும்' என்ற கொள்கை கொண்டவள். சொத்துக்களின்மூலம் நிறைய வரு மானம் வந்தபடியால் கவலையற்று வாழ்ந்தாள் அவள்."

"அது சரி, காப்டன் கந்தசாமிக்கு ஸ்ரீமதி வேதவல்லியை ஏற்கனவே தெரியுமா?"

"கண்டிப்பாகத் தெரிந்திருக்கமுடியாது."

"எப்படி அவ்வளவு நிச்சயமாகக் கூறுகிறீர்கள்?"

"அவ்வாறு இருந்திருந்தால் அதை நெருங்கிய நண்பரான என்னிடம் சொல்லாமல் இருந்திருக்கமாட்டார்."

"நீங்கள் சொல்வதுபோலவே வேதவல்லி ஏற்கனவே காப்டனுக்குத் தெரிந்தவளாக இல்லை என்று வைத்துக்கொள் வோம். ஏதோ ஒரு முக்கிய நோக்கத்துடன் அவரை அறிமுகப் படுத்திக் கொள்வதற்காக ஏன் ஆனந்த நிலையத்திற்குக் குடிவந் திருக்கக்கூடாது?" என்று அவரை மடக்கினார் இன்ஸ்பெக்டர்.

மேஜர் பகதூர்சிங்கினால் உடனே பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. எதையோ யோசிப்பவன்போல் சற்று நிதானித் தான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகுதான் பதிலுரைத்தான்.

"இப்பொழுதுதான் எனக்கு அவ்வித சந்தேகம் ஏற்படுகிறது! ஆனால் அவள் பழகிய விதத்தைக்கொண்டு அவள்மீது சந்தேகம் கொண்டுவிடமுடியாது. வேதவல்லி எந்தவிதமான சதித் திட்டத்துடனும் சோலைமலைக்கு வந்திருக்கமுடியாது என்று நான் உறுதி கூறுவேன்" என்று அழுத்தம் திருத்தமான குரலில் கூறினான் மேஜர்.

"இவ்வளவு தூரம் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லியதற்கு நன்றி. ஆனால் உயில் விஷயமாக காந்திநாதன் கம்பெனியாரைப் பார்க்கவேண்டும். உங்கள் உதவியின் மூலம் அவர்களை விசாரிக்க விரும்புகிறேன். புறப்படுங்கள் போகலாம். நீங்கள் விரும்பினால் நானே உங்களை என் காரில் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போகிறேன்" என்று வற்புறுத்தினார் இன்ஸ்பெக்டர். வேறு வழியின்றி உடைகளை மாற்றிக்கொண்டு சட்ட ஆலோசகர்களை விசாரிக்க இன்ஸ்பெக்டருடன் புறப்பட்டான் மேஜர்.

இன்ஸ்பெக்டர் நாகலிங்கமும் மேஜர் பகதூர்சிங்கும் காந்தி நாதன் கம்பெனியை அடைவதற்கும் சட்ட ஆலோசகர்களில் ஒருவரான லோகநாதன் தன்னுடைய காரில் வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது. பகதூர்சிங்கையும் உடன் வந்திருப்பவரையும் பார்த்தவுடன் அவர்கள் எதற்காக வந்திருக்க வேண்டும் என்பது புரிந்துவிட்டது. புன்னகையுடன் அவர்களை வரவேற்று மாடியில் இருந்த தன்னுடைய ஆபீஸ் அறைக்கு அழைத்துச்சென்றார் அவர்.

லோகநாதன் வயது முதிர்ந்தவரும் அனுபவம் மிகுந்தவராகவும் காணப்பட்டார். அவருடைய தந்தை ஆரம்பித்த அந்தக் கம்பெனியை அவர் தொடர்ந்து நடத்திவருகிறார். இன்ஸ்பெக்டரையும் மேஜரையும் மேஜைக்கு முன்னால் இருந்த நாற்காலியில் உட்காரவைத்துவிட்டுத் தானும் சுழல் நாற்காலியில் அமர்ந்துகொண்டார். மறுகணம் தலைக்குமேலிருந்த மின்சார விசிறி சுழல ஆரம்பித்தது. மேசையின்மீது அவர் உடனடியாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல இருந்தன. ஆனால் அவை களை எல்லாம் ஒரு பக்கமாக எடுத்துவைத்துவிட்டு அவர்களுடன் பேச ஆரம்பித்தார்.

"மிஸ்டர் பகதூர்சிங்! காப்டன் இவ்வாறு துர்மரண மடைவார் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. அந்தச் செய்தியைப் படித்தவுடன் நாங்கள் அனைவரும் அதிர்ச்சி யடைந்து விட்டோம். இந்த வட்டாரத்தில் இம்மாதிரியான மர்மக்கொலை நடப்பது இதுதான் முதல் தடவை!" என்று கூறி விட்டு ஒரு முறை இருவரின் முகங்களையும் பார்த்தார்.

பகதூர்சிங் துயரம் கலந்த பார்வையில் அவரைப் பார்த் தான். 'ஆமாம். எனக்கும் இது அதிர்ச்சியைத்தான் கொடுத் திருக்கிறது. அத்துடன் இதில் பல மர்மங்களும் மறைந்திருக் கின்றன" என்று கூறுவதுபோல் அவரைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

"நீங்கள் இந்த வழக்கு விஷயமாக வேலை செய்கிறீர்கள் போலிருக்கிறது" என்று இன்ஸ்பெக்டரைக் கேட்டார் லோகநாதன்,

"ஆமாம், என் பெயர் நாகலிங்கம். உங்கள் அறிமுகம் ஏற்பட்டதுபற்றி மகிழ்ச்சி. காப்டனின் கொலையைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு முக்கிய விஷயம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் காப்டனின் வக்கீலாகையினால் அதைப்பற்றி உங்களுக்குத் தெரிந்

திருக்கலாம் என்று எண்ணுகிறேன். தற்போது ஆனந்தநிலையம் மாளிகையில் வசித்துவரும் ஸ்ரீமதி வேதவல்லியை உங்களுக்குத் தெரியுமா?"

"சோலைமலை வட்டாரத்திற்கு வருவதற்கு முன்பே அவளை எனக்குத் தெரியும். தனக்கு வசதியான வீடு ஒன்று வேண்டும் என்று எனக்குத்தான் எழுதியிருந்தாள். நான்தான் காப்டனிடம் சிபார்சுசெய்து அந்த வீட்டை அவளுக்கு வாங்கிக்கொடுத்தேன்".

"இங்கு வந்து வீட்டைப் பார்க்காமலே குடிவரச் சம்மதித்து விட்டாளா?"

"என்னிடம் அவளுக்கு நம்பிக்கையுண்டு. நான் நல்ல இடமாகத்தான் சிபார்சு செய்திருப்பேன் என்ற நம்பிக்கையுடன் ஆனந்தநிலையத்திற்குக் குடிவந்துவிட்டாள்."

"ஓ, அப்படியா! அது சரி. காப்டனின் உயில் உங்களிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நீங்கள்தானே அதைத் தயாரித்தீர்கள்?"

"ஆமாம். ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு அது தயாரிக்கப்பட்டது. ஆனால் எப்பொழுது என்று எனக்குச் சரியாக நினைவு இல்லை."

"அந்த உயிலை நான் பார்க்கமுடியுமா? அதன் மூலமாவது குற்றவாளியைக் கண்டுபிடிக்க வழி கிடைக்குமா என்று பார்க்க வேண்டும்."

"அதைப்பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஆனால் அது எவ்வளவு தூரம் உங்களுக்குப் பயன்படும் என்றுதான் யோசிக்கிறேன். அத்துடன் காப்டன், என்னையும் மேஜரையும் தான் தன்னுடைய சொத்தின் எக்ஸிகியூடராக நியமித்து இருக்கிறார். அவருக்கு ஆட்சேபணையில்லாவிட்டால்....."

"எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. நான்தானே அவரை அழைத்து வந்திருக்கிறேன்" என்று தன்னுடைய சம்மதத்தை வெளியிட்டான் பகதூர்சிங். லோகநாதன் மேசையில் இருந்த டெலிபோன் ரிஸீவரைக் கையில் எடுத்துக் கீழ்த்தளத்தில் இருந்த உயில் சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் குமாஸ்தாவைக் கூப்பிட்டு விஷயத்தைக் கூறினார். சில நிமிடங்களுக்குள் அரக்கினால் சீல் வைக்கப்பட்டிருந்த நீளமான பழுப்பு நிறக்கவர் ஒன்றைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றான் ஒரு குமாஸ்தா. லோகநாதன் பேனாக் கத்தியினால்

அரக்கைப் பெயர்த்து எடுத்துவிட்டு உள்ளேயிருந்த உயிலை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். அதன் சாராம்சம் இதுதான்:

1. என்னுடைய அத்தியந்த நண்பரான மேஜர் பகதூர்சிங்கையும் என்னுடைய வக்கீல் லோகநாதனையும் என்னுடைய சொத்தின் எக்ஸிகியூடர்களாக நியமிக்கிறேன்.

2. சில வருடங்களாக என்னிடம் உண்மையாகவும் நம்பிக்கையுடனும் ஒத்துழைத்துவந்த ஏகாம்பரத்திற்கு என்னுடைய மரணத்திற்குப் பிறகு ரூபாய் ஆயிரம் கொடுக்கப்படவேண்டும். நான் இறப்பதற்கு முன்பு அவன் வேலையிலிருந்து விலகிவிட்டால் இது ரத்தாகிவிடும்.

3. என்னுடைய அத்தியந்த நண்பரான மேஜர் பகதூர் சிங் என்னுடைய மரணத்திற்குப் பிறகு என்னிடமுள்ள வெள்ளிக் கோப்பைகள், உடல் பயிற்சி, சம்பந்தமான சாமான்கள், போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற பதக்கங்கள் முதலியவைகளை அடையவேண்டும்.

4. முதல் பாராவில் குறிப்பிட்டிருக்கும் இரண்டு எக்ஸிகியூடர்களுக்கும் என்னுடைய சொத்தை அனுபவிப்பதற்கோ, அல்லது விற்றுப் பணமாக மாற்றுவதற்கோ பரிபூரண அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

5. என்னுடைய சொத்தை நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். ஒரு பாகம் என்னுடைய சகோதரி கற்பகத்திற்குக் கொடுக்கப்படவேண்டும். மற்ற மூன்று பாகங்களும், காலம்சென்ற மற்றொரு சகோதரி பார்வதியின் மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்கப்படவேண்டும்.

லோகநாதன் அந்த உயிலை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் அந்த உயிலின்மீது ஒரு மூறை கண்ணோட்டம் விட்டார். தகுந்த சாட்சிகளுடன் சரியானபடிதான் அந்த உயில் தயாரிக்கப்பட்டிருந்தது.

"காலம்சென்ற சகோதரி பார்வதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அவளைப்பற்றி உங்களுக்குத் தெரிந்தவைகளைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எனக்கு அவைகளைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. பத்து வருடங்களுக்கு முன்பு அவள் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அவள் ஒரு போதும் காப்டனைப் பார்க்க வந்ததில்லை. அதைப்பற்றி அறிந்துகொள்ளவும் நான் முயன்றதில்லை."

"இந்த உயிலில் காப்டன் தன் சொத்தின் விவரங்களைக் கொடுக்கவில்லையே! அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கும்?"

"ஆனந்த நிலையம் பங்களா அவருடையதுதான். மருத மலையில் கொஞ்சம் நிலபுலன்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. திருவாங்கூரில் முன்னூல் ஒரு காபி எஸ்டேட்டும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அத்துடன் பல பிரபல கம்பெனிகளின் ஷேர்களும் வாங்கியிருக்கிறார், ஆகவே, சரியாக அவருடைய சொத்தின் மதிப்பைச் சொல்லிவிடமுடியாது."

"ஓரளவு மதிப்புத் தெரிந்தால் போதும்."

"நான்கு ஐந்து லட்சத்திற்கு மதிப்பிடலாம். சரியாக கணக்குப் பார்த்தால் இன்னும் அதிகமும் சொல்லலாம்" என்றார் வக்கீல்.

"காப்டன் பெரிய பணக்காரர் என்று நான் சொன்னேன். அதனால்தான் கேட்கிறார்" என்று நடுவில் குறுக்கிட்டான் மேஜர் பகதூர் சிங்.

"காப்டனின் சகோதரி கற்பகத்தைப் பற்றியும், காலஞ் சென்ற பார்வதியின் குடும்பத்தைப்பற்றியும் உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று வக்கீலைக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"பார்வதியின் குடும்பத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கற்பகம் சந்திரகிரியில் இருக்கும் வாஞ்சிநாதன் வீதியில் வசித்து வருகிறாள்."

இன்ஸ்பெக்டர் வக்கீலிடம் விசாரித்தறிந்தவைகளை டைரியில் குறித்துக்கொண்டு, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு மேஜருடன் வெளியே கிளம்பினார்.

காந்திநாதன் கம்பெனியைத் தாண்டி வீதியில் வந்து நின்றார் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம். கவலை தோய்ந்த முகத்தைத் தொங்க விட்டவண்ணம் அவரைப் பின் தொடர்ந்து வந்தான் மேஜர் பகதூர்சிங். காப்டனுடன் பேசிப் பழகிய நாட்களும் சதுரங்கம் விளையாடியதும் அவன் மனத்திரையில் தோன்றி அவனைத் துயரக் கடலில் ஆழ்த்தின. காப்டன் உயிருடன் இருந்த வரை மேஜர் அவருடன் அன்பாகத்தான் பழகி வந்தான். அவனுக்கும் தெரியாமல் அந்த அன்பு வளர்ந்து வந்தது. வாரத்திற்கு ஒரு முறைதான் அவரைப் பார்த்து வந்தபோதிலும் அந்தப் பிரிவை அவன் அவ்வளவாக உணரவில்லை. ஆனால் இந்தப் பிரிவு அவனை ஆற்ற முடியாத துயரக் கடலில் ஆழ்த்தி விட்டது. பரிபூரணமாக நேசித்து வந்த ஒருவர் பிரிந்துவிட்டாரே என்ற உணர்வும் இனிமேல் இந்தப் பிறவியில் அவரைச் சந்திக்க முடியாது என்ற எண்ணமும் நம்மைக் கவலைக் கடலில் மூழ்கடித்துவிடுவது இயற்கைதானே! அந்த எண்ணம்தான் பகதூர்சிங்கை இப்பொழுது கவலையுறச் செய்திருந்தது.

"மேஜர் பகதூர்சிங்! நான் மீண்டும் தங்களைத் தொந்தரவு செய்வதாக எண்ண வேண்டாம். காப்டன் ஐந்தரை மணிக்கு இறந்திருக்கக்கூடுமா என்று நீங்கள் ஏன் கேட்டீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். பிறகுதான் இந்த உலகத்திற்கு வந்தான் மேஜர் பகதூர்சிங். அந்தக் கேள்வி அவனுடைய குழப்பத்தைப் போக்கிக் கோபத்தை உண்டாக்கிவிட்டது.

"நான்தான் முன்பே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டேனே?" என்று சற்றுக் கடுமையான குரலில் தான் பதிலுரைத்தான் பகதூர்சிங்.

"மூன்பு பதில் சொன்னது வாஸ்தவம்தான். ஆனால் அது திருப்திகரமாக இல்லை என்றுதான் மீண்டும் உங்களைக் கேட்கிறேன். நீங்கள் ஏதோ ஒரு உண்மையை மறைத்து வைத்திருப்பதாகவே எண்ணுகிறேன். யாரோ ஒருவன் அந்த நேரத்தில் முல்லைவில்லாவிற்கு வருவதாக இருந்தானல்லவா?"

• "அப்படி இருந்ததாகத் தெரியவில்லையே?"

"ஜானகிராமன் என்பவன் நேற்று மாலை ஐந்தரை மணிக்கு காப்டனைப் பார்க்க வருவதாக இருந்தான் என்பதையாவது ஒப்புக்கொள்கிறீரா?"

"ஜானகிராமனா? அந்தப் பெயரைக்கூட நான் கேள்விப்பட்டது இல்லையே? காப்டனின் சகோதரி மகனைக் குறிப்பிடுகிறீர்களா?"

"அப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். நேற்றுக் கோயமுத்தூரிலிருந்து 'நீலவானம்' ஓட்டலுக்கு ஒரு வாலிபன் வந்திருந்ததாகத் தெரிகிறது. அவனைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"உங்கள் விசாரணை எனக்கு வியப்பைக் கொடுக்கிறது! என்னையே குற்றவாளி என்று நீங்கள் நினைத்துவிட்டீர்களோ என்றுகூடச் சந்தேகமாக இருக்கிறது."

"நீங்கள் உண்மையை மறைப்பதினால் தான் இவ்வாறு கேள்விகள் கேட்க வேண்டியிருக்கின்றன. உங்களுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் இறந்திருக்கிறார். மேலும் மர்மமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவ்வாறு இருந்தும் நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க மறுக்கிறீர்கள். இந்த நிலையில் என்னால் எவ்வாறு குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியும்?" என்று வினயமான குரலில்தான் கேட்டார் இன்ஸ்பெக்டர். மேஜர் சில வினாடிவரை இன்ஸ்பெக்டரை வைத்த விழி வாங்காமல் பார்த்தான். மெல்ல மெல்ல அவனுடைய கோபம் தணிந்தது. விழிகளில் இருந்த கடுமை குறைந்தது. ஒரு முறை நீண்ட பெரு மூச்சு விட்டுவிட்டுப் பேசினான் அவன். "நான் ஒரு உண்மையை மறைத்து வைத்திருப்பதாக நீங்கள் சந்தேகிப்பது சரிதான்! ஆனால் அது அர்த்தமற்றது; ஆதாரமற்றது. பரிகாசத்திற்கு இடமானது. அதனால்தான் இத்தனை நேரம் அதை மறைத்து வைத்திருந்தேன்..." என்று கூறி விட்டு மேற்கொண்டு பேச வதற்குத் தயங்கினான் மேஜர்.

"மேஜர் சார்! நீங்கள் கூறிப்போகும் விஷயம் எவ்வளவு அற்பமானதாக இருந்தபோதிலும் பரவாயில்லை. உண்மைகளை மறைக்காமல் கூறினால் தான் என்னால் வெற்றிகரமாக இந்த வழக்கில் வேலை செய்ய முடியும்" என்று மீண்டும் வற்புறுத் தினார் இன்ஸ்பெக்டர்.

"நான் வெள்ளிக்கிழமைகளில் வழக்கமாக இருட்டியதற்கு முன்பு முல்லைவில்லாவிற்குப் போய் வருவேன். காப்டனுடன் இரவு வெகு நேரம் வரை சதுரங்கம் ஆடிக்கொண்டிருப்பேன். சிற்சில சமயங்களில் குடும்ப விஷயங்களையும் உலக விஷயங்களையும் பேசிக்கொண்டிருப்போம். நேற்று வழக்கத்திற்கு முன்பாகவே 'நீலவானம்' ஓட்டலைவிட்டுப் புறப்பட்டுச் சோலைமலைக்குப் போய் விட்டேன். ஆனந்த நிலையத்தில் வசிக்கும் ஸ்ரீமதி வேதவல்லியை எனக்குத் தெரியும். அடிக்கடி தன்னுடைய வீட்டிற்கு வரும்படி அழைத்திருக்கிறாள். அன்று சோலைமலைக்குச்

சென்று அவளைப் பார்த்துவிட்டுப் பிறகு மூல்லைவில்லா வீற்குப் போவது என்ற எண்ணத்துடன் ஐந்து மணி சுமாருக்கு ஆனந்த நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். ஆனந்த நிலையத்தில் எனக்கு மூன்பு ரங்கராஜனும் தாமோதரனும் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அந்த வட்டாரத்தில் அண்டைப் பக்கத்து வீடுகளில் வசித்து வருபவர்கள். என்னைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர். வேதவல்லியும் என்னுடைய விஜயத்தை எதிர்பார்க்கவில்லை. ஆகவே, எனக்கு வரவேற்பும் உபசாரமும் பலமாக இருந்தன, ஸ்ரீமதி வேதவல்லியும் அவளுடைய மகளும் வரவேற்று உபசரித்தனர். நாங்கள் அனைவரும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தோம். சற்று நேரத்திற்குப் பிறகு வேதவல்லி ஒரு சிறிய அட்டைப் பெட்டியைக்கொண்டு வந்து என் முன்னுல் வைத்தாள். 'இதனுள் நம் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் இயந்திரம் ஒன்று இருக்கிறது. கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலை எழுதிக் காண்பித்துவிடும்!' என்று கூறிய வண்ணம் அட்டைப் பெட்டியிலிருந்து ஒரு பொருளை எடுத்து மேஜையின் மீது வைத்தாள். பிளாவுட்டு பலகையில் ஆடுதன்போல் இருந்தது. அதன் கீழ்ப் பகுதியில் மூன்று சக்கரங்கள் அமைக்கப் பட்டிருந்தன. ஒரு மூனையில் பென்சில் செருகப்பட்டிருந்தது. 'நீங்கள் கேள்வியைக் கேட்டு விட்டு இதன் மீது கையை வையுங்கள். இந்த இயந்திரம் உங்கள் கேள்விக்குப் பதிலை எழுதிக் காண்பித்துவிடும்" என்றுள் வேதவல்லி. எனக்கு அது வேடிக்கையாக இருந்தது. விசித்திரமாகவும் இருந்தது. நான் அதை நம்பவில்லை. என் உள்ளத்தைப் புரிந்துகொண்டவள் போல் வேதவல்லி தானே அந்த இயந்திரத்தின் திறமையை எனக்கு வெளிப்படுத்த முயன்றுள். வலது கரத்தை அந்த விசித்திரப் பலகையின்மீது வைத்துக்கொண்டு என்னைக் கேள்வி கேட்கும்படி கூறினுள் அவள். அவளுடைய பேதமையைக் கண்டு உள்ளூர நான் சிரித்துக்கொண்டேன். 'நீ பேயா அல்லது பிசாசா?' என்று கேட்டேன். வேதவல்லி கரத்தை அந்தப் பலகை யின்மீது அழுத்திய வண்ணம் கண்களை மூடிக் கொண்டாள்; நான் இமை கொட்டாது அந்தப் பலகையைக் கவனித்த வண்ணம் இருந்தேன். ஒரு நிமிட நேரத்திற்குப் பிறகு அந்தப் பலகை நகர்ந்தது. பலகையில் பொறுத்தப்பட்டிருந்த பென்சில் முன்னும் பின்னும் உராய்ந்து பட்டையாகக் கிறுக்கியது. பிறகு நின்றுவிட்டது. 'நான் ஓர் உயிர் என்பதை இக்கோட்டின் மூலம் தெரியப்படுத்துகிறது' என்றுள் வேதவல்லி. 'உன்னுடைய பெயர் என்ன?'— நான் அடுத்த கேள்வியைக் கேட்டேன். அந்தப் பலகை மீண்டும் முன்போலவே உராய்ந்து நீளமாக ஒரு கோடு

கிழித்தது. 'தன் பெயரைச் சொல்ல முடியாது என்பதை இந்தக் கோடு வெளிப்படுத்துகிறது. இந்தப் பலகையை இன்னும் பலமாக அழுத்தி நல்ல கேள்வியாகக் கேட்டால் சரியான பதில் கிடைக்கும்' என்று சமாதானம் கூறினாள் அவள். அந்த இயந்திரத்தின் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆகவே நானே அந்தப் பலகையின் மீது கரத்தை வைத்து அழுத்தி 'மூல்லைவில்லாவில் இருக்கும் என் நண்பர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?' என்று கேட்டேன். நான் இமைகளை மூடிக்கொண்ட போதிலும் கீழ்க் கண்ணால் அந்தப் பலகை என்ன எழுதுகிறது என்றுதான் நான் கவனித்துக் கொண்டிருந்தேன். இந்த முறை அந்தப் பலகை கோடு கிழிக்கவில்லை. அதற்குப் பதிலாக அது எழுத ஆரம்பித்து விட்டது. 'கா...ப்...ட...ன் கா...ல...மா...ளை...ர்.' இந்த ஒன்பது எழுத்துகளையும் பார்த்தவுடன் நான் திடுக்கிட்டுப் போனேன்! 'இந்தப் பலகை சொல்வதை எவ்வாறு நம்புவது? இல்லாவிட்டால் காப்டனைப்பற்றி எவ்வாறு இதற்குத் தெரிந்திருக்க முடியும்? ஒரு வேளை அவர் இறந்து போயிருந்தால்...?' என் மனம் துடித்தது. குழம்பியது.

ஸ்ரீமதி வேதவல்லியும் அவளுடைய மகளும்கூடச் சற்றுகலவரமடைந்து போனார்கள். மற்ற இருவரும் குழப்பமடைந்தனர். அப்பொழுது ஐந்தரை மணிதான் ஆகியிருந்தது. ஆயினும் எனக்கு அதற்குமேல் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. ஆகவே உடனடியாக மூல்லை வில்லாவிற்குச் சென்று காப்டனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. டாக்ஸியில் செல்லலாம் என்று பார்த்தேன். வண்டி கிடைக்கவில்லை. இருள் உலகத்தை விழுங்க ஆரம்பித்து விட்டது. பனித் துளிகளும் விழத் தொடங்கின. டாக்ஸிக்காகக் காத்திருப்பதில் பலன் இல்லை என்று கால் நடையாகவே புறப்பட்டேன். ஆறு மைல் தூரம் இருந்தபடியாலும் மூடுபனி சரியாகப் பாதையைப் பார்க்க முடியாதபடி செய்துகொண்டிருந்தபடியாலும் எட்டு மணி சுமாருக்குத்தான் மூல்லை வில்லாவிற்கு வர முடிந்தது. பிறகு நடந்த விஷயங்கள்தான் உங்களுக்குத் தெரியும். காப்டனின் துர்மரணத்தைப்பற்றி நினைக்கும்போது எனக்கு மிக வேதனையாக இருக்கிறது," என்று கூறிப் பொங்கி வந்த துயரத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் மேஜர்.

இன்ஸ்பெக்டர் ஆச்சரியமடைந்து போய் சற்று நேரம் அசைவற்று நின்று விட்டார். மூல்லை வில்லாவில் கொலை நடந்திருக்கிறது! ஆறு மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு விசித்திரப் பலகை அதை வெளிப்படுத்தி இருக்கிறது! — இன்ஸ்பெக்

டனிலல் ஒன்றையும் நம்ப முடியவில்லை! இரண்டிற்கும் என்ன சம்பந்தம் என்றும் புரியவில்லை! அதைப் பற்றி யோசித்து மூளையைக் குழப்பிக் கொள்வதில் பலன் இல்லை என்று தோன்றியது அவருக்கு. ஆகவே, காப்டனின் சகோதரி கற்பகத்தை விசாரித்து அவருடைய மரணத்திற்கு ஏதாவது காரணம் கிடைக்கிறதா என்று அறிந்து வர சந்திரகிரிக்குப் புறப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

பிறகுதான் நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்த பாரம் இறங்கியது போல் இருந்தது மேஜர் பகதூர் சிங்கிற்கு. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவண்ணம், மெல்ல 'நீலவானம்' ஓட்டலுக்குக் கிளம்பினான் அவன்.

'நீலவானம்' ஓட்டலினுள் பிரவேசித்துப் படிக்கட்டுகளைத் தாண்டி, மாடி வராண்டாவை அடைந்து, தன் அறையின் கதவுகளின் மீதிருந்த பூட்டைத் திறப்பதற்காகக் கோட்டுப் பையிலிருந்து சாவிக் கொத்தை வெளியே எடுத்தான் மேஜர். மறுகணம், பின்னால் ஏதோ காலடியோசை கேட்டுத் திரும்பினான் அவன். அவனுக்குப் பின்னால் ஜிப்பா, வேஷ்டி, வெயிஸ்டுகோட்டு, கரத்தில் ஒரு பை மூதலியவைகள் சகிதம் வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். பத்திரிகைத் தொடர்புள்ளவன் போலத் தோற்றமளித்தான் அவன். 'நீ யார்?' என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்தான் மேஜர்.

"நீங்கள்தானே மேஜர் பகதூர்சிங்?" என்று பணிவான குரலில் கேட்டான் அவன்.

"ஆமாம்!" என்று அலட்சியமாகத் தலையை அசைத்தான் மேஜர்.

"நான் 'தினசரி'ப் பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறேன்..." என்று கூறி முடிப்பதற்கு முன்பு மேஜருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"ஓ, நீங்கள் 'தினசரி'ப் பத்திரிகையின் நிருபரா? பார்த்தவுடனேயே சந்தேகப்பட்டேன். உங்களுக்கு எந்தவிதமான கொள்கையும் கிடையாது. ஒருவன் உங்களுக்கு வேண்டியவனாக இருந்தால் அவனை வானளாவப் புகழ்ந்து விடுவீர்கள்! ஒருவனை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் அவனை மட்டம் தட்டிக் குழிதோண்டிப் புதைத்து விடுவீர்கள். எனவே, என்னைத் தொந்தரவு செய்யாமல் போய் விடுங்கள். நீங்கள் என்ன முயன்றாலும் என்னிடமிருந்து காப்டன் கந்தசாமியின் மரணத்தைப்பற்றி ஒன்றும் அறிய முடியாது. அதைப்பற்றி அவசியம் தெரியவேண்டும் என்றால் போலீசாரிடம் போய் விசாரித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல முயன்றான்.

மேஜரின் படபடப்பான வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப் போயிருந்த நிருபரிடம் நிதானம் ஏற்படுவதற்குச் சற்று நேரம் பிடித்தது.

"மேஜர் சார்! நீங்கள் என்னைத் தவறாக எண்ணி விட்டீர்கள், நான் வந்திருக்கும் விஷயம் வேறு! காப்டன் கந்தசாமியின் கொலையைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அதைப்பற்றி அறியவும் நான் ஆசைகொள்ளவில்லை"

என்று கூறியவண்ணம் அவனைப் பின் தொடர்ந்து அவ்வறையி னுள் சென்றான் அவன். காப்டனின் திடீர்மரணம் அந்த வட் டாரத்தையே கதிகலங்கச் செய்திருக்கும்போது அந்த நிருபருக்கு அது தெரியாமலா இருந்திருக்கும்? ஆனால் அதை வெளிப்படுத்து வதற்குத் துணிவில்லாததினால்தான் அவன் அவ்வாறு கூறினான். அத்துடன் அவன் வேறு ஒரு முக்கிய விஷயமாகத்தான் அங்கே வந்திருந்தான்.

"'தினசரி' பத்திரிகாலயத்திலிருந்து வேறு ஒரு முக்கிய காரணமாக நான் வந்திருக்கிறேன். எங்கள் பத்திரிகையின் அறிவுப் போட்டியின் சரியான விடையை அனுப்பி முதல் பரிசு பெற்றிருக்கிறீர்கள். அதற்காக ஐயாயிரம் ரூபாய்க்குச் செக் கொண்டு வந்திருக்கிறேன்....." என்று அந்த நிருபர் கூறி முடிப் பதற்கு முன்பு மேஜரின் முகபாவம் மாறிவிட்டது. இமை கொட்டாது நிருபரைப் பார்த்த வண்ணம் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான்.

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? நேற்று உங்களுக்குக் கடிதத்தின் மூலம் இந்த விஷயத்தைத் தெரியப்படுத்தி இருந்தோமே?"

"அப்படியா? உங்கள் கடிதம் ஒன்றும் வந்து சேர வில்லையே!"

"இன்று காலை இதழில் இதைப்பற்றி வெளியிட்டிருந் தோமே, அதையாவது நீங்கள் பார்த்திருக்க வேண்டுமே?"

"இல்லை! இன்னும் உங்கள் இதழைப் பார்க்கவில்லை."

"உண்மைதான், நெருங்கிய நண்பர் ஒருவர் துர் மரண மடைந்திருக்கும்போது எவ்வாறு மனநிம்மதி இருக்கும்?"

"நெருங்கிய நண்பர் அல்ல, உயிர்த் தோழர் என்று சொல்லுங்கள்!" என்று கூறிய வண்ணம் சற்றுத் தூரத்தி லிருந்த நாற்காலியை அருகில் இழுத்துப்போட்டான் மேஜர். பிறகு அலமாரியில் வைத்திருந்த கிரஷைக் கண்ணாடி டம்ளரில் விட்டுக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தான். அதை வாங்கிப் பரு கிய வண்ணம் தொடர்ந்து பேச ஆரம்பித்தான் அவன்.

"என் பெயர் சந்திரசேகரன். 'சந்திரா' என்ற பெயரில் நாவல்களை எழுதி வருகிறேன். 'சேகரன்' என்ற பெயரில் கட்டுரைகளை எழுதி வருவதும் நான்தான். பெண்கள் எழுதும்

கதைகளைப் படிப்பதில் வாசகர்களுக்கு அமோகமான மோகம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் 'சந்திரா' என்ற புனைப் பெயரில் எழுதுகிறேன்! அறிவுப்போட்டி விஷயங்களை நான் தான் கவனித்துக் கொள்கிறேன். அதனால்தான் உங்களை நேரிடையாகப் பார்த்துப் பேசிவிட்டுச் செக்கைக் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறேன்" என்று கூறிய வண்ணம் கரத்திலிருந்த பையைத் திறந்து செக்கை எடுத்து அவரிடம் கொடுத்தான் சந்திரசேகரன். பத்திரிகை நிருபர்களின் மீது அவருக்கு எவ்வளவுதான் கோபம் இருந்தபோதிலும் அதை அவர் அப்பொழுது வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஐந்தாயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடுத்த ஒருவனை விரட்டியடித்து விட முடியுமா?

"வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் இந்தப் பரிசைக் கண்டு நீங்கள் மிகவும் சந்தோஷமடைந்திருப்பீர்கள். ஆனால் உங்கள் மனோ நிலை சரியாக இல்லை. அறிவுப் போட்டியில் பணம் வந்திருக்கும் சந்தோஷம் ஒரு புறம், அத்தியந்த நண்பரின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட கவலை மறுபுறம். அது சரி, காப்டனுக்கு யாராவது விரோதிகள் உண்டா?" என்று ஆரம்பித்தான் சந்திரசேகரன்.

"அப்படி ஒன்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லையே!" என்றான் மேஜர்.

"கொள்ளையடிப்பதற்காக அவர் கொலை செய்யப்பட்டிருப்பாரோ என்று நினைத்தேன். ஆனால் அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே!"

"காப்டனின் மரணம் எனக்கும்தான் மிகவும் மர்மமாக இருக்கிறது."

"அவர் மரணமடைந்திருந்ததை நீங்கள்தான் முதன் முதலில் கண்டுபிடித்தீர்கள் போலிருக்கிறது."

"ஆமாம்."

"அந்த கோரக் காட்சியைக் கண்டு நீங்கள் திடுக்கிட்டுப் போயிருப்பீர்களே?"

இவ்வாறு ஆரம்பித்த விசாரணை கடைசியில் காப்டனின் மரணத்தைப்பற்றிய முழு விவரத்தை வெளியிடும் நிலைமையில் கொண்டு வந்து விட்டுவிட்டது. மேஜர் முதலில் கொஞ்சம் பிடிவாதத்துடனும் விட்டுக் கொடுக்காமலும் தான் பேசிக் கொண்டே வந்தான். ஆனால் சந்திரசேகரனின் சாதுர்யமான கேள்விகளும் விசாரணையும் அவனைத் தோல்வி அடையச்செய்து

விட்டன. முதல் நாள் மாலையிலிருந்து மனக்குழப்பமடைந்து போயிருந்த அவனுக்கு யாருடனாவது மனம் விட்டுப் பேசினால் தான் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம் குறையும் போலவும் இருந்தது. அதனால்தான் அவன் விஜயவல்லி வீட்டில் வெளிப்பட்ட விசித்திரப் பலகையின் விபரீதச் செய்தியிலிருந்து, காப்டனின் உடல் கண்டு பிடிக்கப்பட்டது வரையில் சந்திரசேகரனிடம் விளக்கமாகக் கூறிவிட்டான்.

மேஜர் கூறியவற்றின் குறிப்புகளை டைரியில் குறித்துக் கொண்டான் சந்திரசேகரன்.

"'மூல்லை வில்லா' மர்மக் கொலையைப்பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் விளக்கமாகக் கூறியதற்கு நன்றி. சோலை மலைக்குச் சென்று ஆனந்த நிலையம், மூல்லை வில்லா முதலிய இடங்களைப் பார்க்க வேண்டும். அத்துடன் காப்டனின் வீட்டையும் வீட்டிலுள்ள சாமான்களையும் போட்டோ பிடிக்க வேண்டும். இது விஷயமாக உங்கள் உதவியை எதிர்பார்க்கிறேன். மற்றவர்களுக்கு முன்பு 'மூல்லை வில்லா' மர்மக் கொலையைப் பற்றி விவரமாக வெளியிட்டால் எங்கள் பத்திரிகைக்கு நல்ல பெயர் ஏற்படும். அத்துடன் பத்திரிகையின் விநியோகமும் அதிகரிக்கும்" என்று அவனிடம் வேண்டினான் சேகரன்.

"கொள்ளை, கொலை முதலியவைகளைப்பற்றி விளக்கமாக எழுதினால் உங்கள் வியாபாரம் அதிகரிக்கும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் அதன் விளைவாகப் பணம் பறிகொடுத்தவர்கள் என்ன பாடு படுவார்கள், உயிரைப் பலி கொடுத்த குடும்பத்தினரின் உள்ளங்கள் எவ்வாறு துடிக்கும் என்பவைகளை நீங்கள் எண்ணிப் பார்க்கிறீர்களா? பாதிக்கப்பட்டவர்கள் பரிதவிக்கிறார்கள்; ஆனால் நீங்கள் பணம் பண்ணுகிறீர்கள். உங்களைக் குறை கூறுவதாக எண்ணவேண்டாம். பத்திரிகைக்காரர்களின் போக்கைத்தான் கூறுகிறேன். அது சரி, நீங்கள் இப்பொழுது சோலை மலைக்குப் போக முடியாது. 'மூல்லை வில்லா' போலீஸார் வசம் இருக்கிறது. வீட்டினருகில் நெருங்கவிடமாட்டார்கள். போட்டோ எடுக்கவும் அனுமதிக்கமாட்டார்கள்" என்று பதிலுரைத்த வண்ணம் செக்கைப் பெற்றுக்கொண்டதற்கு ரசீது எழுதிக் கொடுத்தான் பகதூர்சிங்.

"அதனால் தான் உங்கள் உதவியை நாடினேன். நீங்கள் சொன்னால் கண்டிப்பாக அனுமதிப்பார்கள். புறப்படுங்கள், போகலாம்" என்று வேண்டினான் சேகரன்.

"மிஸ்டர் சேகர்! இந்த விஷயத்தில் என்னை வற்புறுத்தாதீர்கள். 'மூல்லை வில்லா'வைக் கண்டால் மீண்டும் எனக்குக் கவலைகள் ஏற்பட்டுவிடும். நான் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும்புகின்றேன். உங்களுக்குச் சாமர்த்தியம் இருந்தால், வெற்றிகரமாகக் காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை யிருந்தால் நீங்களே போய் விட்டு வாருங்கள்" என்று கூறினான் மேஜர். மேலும் வற்புறுத்துவதால் பலன் இருக்காது என்று அவனிடம் விடை பெற்றுக்கொண்டு சோலைமலைக்குப் புறப்பட்டான் சந்திரசேகரன். மேஜர் கூறிய விஷயங்களி லிருந்து அவனுக்கு ஏகாம்பரத்தின் மீதுதான் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. உள்ளும் புறமும் தெரிந்த ஆசாமிகள் தானே இவ்வளவு சுலபமாக காரியத்தைச் செய்து முடிக்க முடியும்? ஆகவே வேலைக்கார ஏகாம்பரத்தைச் சந்தேகிப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

சந்திரசேகரன் ஒரு சாதாரண நிருபர்தான். துப்பறிபவன் அல்ல; ஆனால் அவனிடம் துப்பறிபவனுக்குள்ள ஊகமும் புத்தி கூர்மையும் இருந்தன. எப்படியாவது ஏகாம்பரத்தை மடக்கி விசாரித்து புதிய விஷயம் ஒன்றைக் கண்டு பிடித்துப் பத்திரிகையில் வெளியிட்டு விடுவது என்ற ஆர்வத்துடன்தான் புறப்பட்டான் அவன். சோலை மலையில், ஏகாம்பரம் வசித்து வந்த இடத்தைக் கண்டு பிடிக்க அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. சோலைமலை வட்டாரமே திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. யாரைக் கேட்ட போதிலும் காப்டனின் மர்மக் கொலையைப் பற்றிச் சொல்லத் தயாராக இருந்தார்கள். அந்த விஷயம் இப்பொழுது ஒன்றுக்குப் பத்து மடங்காக வளர்ந்திருந்தது. அதனால்தான் ஏகாம்பரத்தின் விலாசத்தை உடனே தெரிந்து கொண்டு விட்டான் சந்திரசேகரன்.

பாலகுமார் வீதியில் இருந்த 85-ம் நெம்பர் வீட்டின் கதவைத் தட்டினான் சந்திரசேகரன். கதவைத் திறந்தான் ஏகாம்பரம். சேகரனைக் கண்டு திகைத்தான். போலீசார் மீண்டும் தன்னை விசாரிக்க வந்து விட்டார்களோ என்ற பயம் அவனுக்கு!

"உங்கள் பெயர்தானே ஏகாம்பரம்?"

"ஆமாம்."

"மேஜர் பகதூர்சிங்கிடமிருந்து வந்திருக்கிறேன். ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்க வேண்டும்."

"ஓ, அப்படியா? சரி, வீட்டினுள் வாருங்கள்."

அது ஒரு சிறிய வீடுதான். அதிக சாமான்களும் இல்லை. வசதியாக வாழ்வதற்கான வழிகளும் இல்லை. ஆயினும் பழைய நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தான் சேகரன். சற்றுத் தூரத்தில் சமையல் அறை இருந்தது. அவ்வறையின் கதவின் பின்னால் அரைகுறையாக நின்று அதிசயத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒரு பெண். அவள் தான் ஏகாம்பரத்தின் மனைவியாக இருக்க வேண்டும் என்று சந்திரசேகரனுக்குப் புரிந்து விட்டது.

"இன்று காலையில் தான் காப்டனின் மரணச் செய்தி எனக்குத் தெரியும். இவ்வாறு நடக்கும் என்று நீங்கள் நினைத் திருக்கமாட்டீர்கள்."

"எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அந்தச் செய்தி யைக் கேட்டவுடன் நான் எவ்வளவு அதிர்ச்சி அடைந்து போனேன் தெரியுமா? இப்பொழுது நினைத்துக் கொண்டால் கூட என் உடம்பு சிலிர்க்கிறது."

"இந்தக் கொலையை யார் செய்திருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?"

"எங்கள் எஜமானர் பெரிய பணக்காரர். அவரைக் கொன்ன அடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் எவனோ இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று பலர் பேசிக் கொள்கிறார்கள். ஆனால் அவ்வாறு இருக்க முடியாது என்றுதான் நான் எண்ணுகிறேன்."

"நீ ஏன் அப்படி நினைக்கிறாய்?"

"இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்த விதத்திலிருந்து, 'முல்லை வில்லா'வில் நான் கண்ட காட்சிகளும் என்னை அவ்வித முடிவிற்கு வரச் செய்திருக்கின்றன. அது சரி, நீங்கள் யாரென்று சொல்ல வில்லையே?"

"பேச்சு சுவாரஸ்யத்தில் அதை நான் மறந்து விட்டேன்! 'தினசரி' பத்திரிகையின் நிருபர் நான். சற்று நேரத்திற்கு முன்பு மேஜரைப் பார்த்தேன். அவருக்கு எங்கள் போட்டியில் ஐந்தாயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது. அதைச் சொல்லப் போயிருந்தேன். அவர் மூலம்தான் உங்களைப்பற்றி எனக்குத் தெரியவந்தது" என்றான் சேகரன். பிறகுதான் ஏகாம்பரத் திற்குத் துணிவு ஏற்பட்டது. அவனும் சேகரனின் முன்னால் அமர்ந்து கொண்டான். அவனுடைய மனைவி ராணியும் இரண்டு

கோப்பைகளில் காபியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு ஒரு பக்கமாக நின்றாள். வீட்டைத் தேடி வந்திருக்கும் ஆசாமி போலீஸ் அதிகாரி அல்ல என்று தெரிந்த பிறகுதான் அவளுக்கும் துணிவு வந்தது.

"இது கொள்ளையடிப்பதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி தான். இதில் சற்றும் சந்தேகமில்லை" என்றாள் அவள்.

"சரி, அப்படியே வைத்துக் கொள்வோம். திருடன் புகுந்திருந்தால் பணத்துடன் பறந்திருப்பானே தவிர, காப்டனைக் கொலை செய்திருக்க மாட்டான். மேலும் இந்த வட்டாரத்தில் அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் யாருக்கு ஏற்பட்டிருக்கப் போகிறது?" என்றான் ஏகாம்பரம்.

சந்திரசேகரன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு இருவரையும் மாறி மாறிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். ஏற்கனவே அவன் மேஜரின் மூலம் அறிந்திருந்த விஷயத்தைத் தான் திருப்பித் திருப்பி சொன்னார்களே தவிர, புதிய உண்மைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் அந்த இரண்டு பேட்டிகளின் சாரத்தையும் பயன்படுத்திக்கொண்டு பத்திரிகை வாயிலாக பிரபலமடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் சின்னமலைக்குத் திரும்பினான் சேகரன்.

சோலமலைக்கும் சந்திரகிரிக்கும் அதிக தூரம் இல்லை. சோலைமலை, சின்னமலை, சந்திரகிரி முதலிய இடங்கள் சுற்றுப் பக்கத்திலேயே இருந்தபடியால் தான் இன்ஸ்பெக்டர் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு அவ்வளவு விரைவில் போய் வந்து கொண்டிருந்தார். அதனால்தான் அவருக்கு சந்திரகிரிக்கு வந்து சேருவதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

சந்திரகிரியில் காப்டனின் சகோதரி கற்பகம் வசித்து வந்த வீட்டு வாசலின் முன்னால் போய் நின்றார் இன்ஸ்பெக்டர். அவ்வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. அந்த வீட்டையும் சுற்றுப் புறத்தையும் ஒரு முறை கவனித்துவிட்டு வீட்டின் கதவைத் தட்டினார். பதில் வரவில்லை. மீண்டும் தட்டினார். அப்பொழுதும் கதவு திறக்கப்படவில்லை. மூன்றாம் முறை கதவைத் தட்டிய பிறகுதான் உள்ளிருந்து கால்டியோசை கேட்டது. மறு கணம் கதவும் திறக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் கரத்தைப் பொறுத்திக் கொண்டிருந்த கதவு அரைகுறையாகத் திறக்கப் பட்டது. கதவின் பின்னால் மருண்ட விழிகளுடனும் அச்சம் கலந்த முகத்தோற்றத்துடனும் ஓர் இளங்கன்னி நின்றுகொண் டிருந்தாள்! இன்ஸ்பெக்டரைக் கண்டவுடன் அவளுடைய கலவரம் அதிகரித்தது.

"நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று தடுமாற்றம் நிறைந்த குரலில் கேட்டாள் அவள்.

"நான் சோலைமலையிலிருந்து வந்திருக்கிறேன். ஒரு முக்கிய விஷயமாக கற்பகம் என்பவரைப் பார்க்க வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்தப் பெண்மணியின் குழப்பமும் கலவரமும் அதிகரித்து விட்டது. ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அசட்டுப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு அவரை வீட்டினுள் வரவேற்று ஹாலிலிருந்து நாற்காலியில் அமரச் செய்து விட்டு எஜமானியை அழைத்து வரப் பின் கட்டிற்குச் சென்றாள் அந்தப் பெண்மணி. இன்ஸ்பெக்டர் கரத்திலிருந்த தடியை லேசாக முழங்காலின் மீது உருட்டிய வண்ணம் சுற்றும் முற்றும் கண்ணோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். கற்பகம், இன்ஸ்பெக்டரை அதிக நேரம் காத்திருக்கச் செய்யவில்லை. இரண்டு, மூன்று நிமிடங்களில் பின்கட்டிலிருந்து ஹாலிற்கு வந்தாள் அவள். ஒல்லியாகவும் உயரமாகவும் கம்பீரமான முகத் தோற்றத்துடனும் காணப்பட்டாள் கற்பகம். கொஞ்சம் வயது

மூதிர்ந்தவளாக இருந்த போதிலும் செயற்கை அலங்காரங்களி னல் தன்னை அழகுபடுத்திக்கொண்டிருந்தாள் அவள். முகத்தில் புன்னகை மலரக் கரங்களைக் கூப்பி இன்ஸ்பெக்டருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, "நீங்கள் வக்கீல் லோகநாதன் அவர்களிட மிருந்து வந்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்" என்று கேட்டவண்ணம் அவருக்குச் சற்றுத் தூரத்தில் தள்ளி அமர்ந்து கொண்டாள் கற்பகம்.

"சோலைமலையிலிருந்துதான் வந்திருக்கிறேன், ஆனால் வக்கீ லிடமிருந்து வரவில்லை. நேற்று இரவு உங்கள் சகோதரர் காப்டன் கந்தசாமி கொலை செய்யப்பட்டு துர்மரணமடைந்த விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். அந்தக் கேஸ் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் உங்களைப் பார்க்க வந்தேன்" என்று கூறிவிட்டு கற்பகத் தின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார் இன்ஸ்பெக்டர்.

கொலை என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அவளுடைய முகபாவனை சற்று மாறியது. ஆனால் அழுகை பொங்கி வர வில்லை. முகத்தைப் பொத்திக்கொண்டு விசிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக இமை கொட்டாது இன்ஸ்பெக்டரையே பார்த் துக்கொண்டிருந்துவிட்டு விம்மல் கலந்த பெருமூச்சு விட்டாள். ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பேச ஆரம்பித் தாள் அவள்.

"கொலை! எத்தனை பயங்கரமான வார்த்தை? அண்ணனைக் கொலை செய்ய யாருக்குத் துணிவு ஏற்பட்டிருக்கும் என்றுதான் எனக்குப் புரியவில்லை!"

"அவர் மரணமடைந்த செய்தி உங்களுக்கு ஏற்கனவே தெரி யும் அல்லவா?"

"நேற்றே எனக்கு வக்கீலிடமிருந்து தந்தி வந்துவிட்டது."

"அதில் அவர் காப்டன் கொலை செய்யப்பட்டதாகத்தானே குறிப்பிட்டிருந்தார்?"

"இல்லை. அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்திருந்தார். நான் அதிர்ச்சி அடைந்துவிடப் போகிறேனே என்றுதான் அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார் போலிருக்கிறது. இன்று காலை பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் படித்த பிறகுதான் அவர் கொலை செய்யப்பட்டார் என்பது தெரிய வந்தது."

"உங்கள் சகோதரரைப்பற்றி நான் சில விஷயங்களை விசா ரித்தேன். அதிலிருந்து அவருக்கு யாரும் விரோதிகள் இல்லை

என்பதும், தன்னைக் கொலை செய்யுமளவிற்கு அவர் யாரையும் மனஸ்தாபப் படுத்திக் கொள்ளவில்லை என்பதும் தெரிய வந்தன. அதனால்தான் கொலையின் காரணத்தையும் குற்றவாளியையும் கண்டு பிடிக்க உங்களைக் காண வந்திருக்கிறேன்."

"இன்ஸ்பெக்டர் சார்! இது விஷயமாக என்னால் முடிந்த உதவியைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன், ஆனால் நான் என் சகோதரரைப் பார்த்துப் பேசிப் பத்து வருடங்களாகி விட்டன. ஆகவே அவருடைய நண்பர்களைப்பற்றியோ விரோதிகளைப்பற்றியோ எனக்கு ஒன்றும் சரியாகத் தெரியாது."

"அவரைப் பத்து வருடங்களாகப் பார்க்கவில்லையா? ஆச் சரியமாக இருக்கிறதே! உங்களுக்கு அவரிடம் விரோதம் ஏதேனும் உண்டா?"

"விரோதம் என்று சொல்ல முடியாது. எங்களுக்குள் மனஸ் தாபம் ஏற்பட்டது என்றுதான் சொல்லலாம். அதற்கும் அவருடைய துர்மரணத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக எண்ணி விடாதீர்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் இன்ப துன்பங்களும், சண்டை சச்சரவுகளும் ஏற்படுவது இயற்கை. நான் என் குடும்ப விஷயங்களைப் பிறரிடம் சொல்வதில்லை. மற்றவர்களின் குடும்பத்தைப் பற்றியும் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுவதில்லை. ஆயினும் உங்கள் சந்தேகத்தைப்போக்குவதற்காகத்தான் எங்கள் குடும்பத்தைப்பற்றிச் சொல்கிறேன்: என் பெற்றோர்களுக்கு என் சகோதரனும் நானும் என் சகோதரியும் மூன்று பேர்தான். காப்டனுக்கு அத்தையின் சொத்து வந்திருப்பதனால்தான் இப்பொழுது அவர் பணக்காரராக இருக்கிறார். எனக்கும் என் சகோதரிக்கும் ஏழைக் குடும்பத்தில்தான் மணமாகியது. எவ்வளவோ கஷ்டப்பட்டு நாங்கள் குடும்பத்தை நடத்தி வந்தோம், என் சகோதரி குழந்தைகளை விட்டுவிட்டுப் போய்விட்டாள். என் கணவர் இராணுவத்தில் சேர்ந்து அங்கஹீனராகி வந்தது முதல் குடும்பநிலை மோசமாகிவிட்டது. எப்படியாவது அவருடைய உடம்பைக் குணப் படுத்த வேண்டும் என்று அரும்பாடு பட்டேன். கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்த பணம்தான் வீணாகியதே தவிர, அவருக்குக் குணம் ஏற்படவில்லை. வைத்தியச் செலவினாலும் குடும்பச் செலவினாலும் பண நெருக்கடி அதிகரித்தது. ஆகவே, என் சகோதரனிடம் சென்று பண உதவி செய்யும்படி கேட்டேன். ஆனால் என் வேண்டுகோளை மறுத்து விரட்டியடித்து விட்டார். அதற்குப் பிறகு நான் அவரைப் பார்க்க விரும்பவில்லை. கடிதப் போக்கு வரத்தும் நின்றுவிட்டது. அவரை வெறுத்ததற்கு இதுதான் காரணம்" என்று கூறிவிட்டு மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டாள்

கற்பகம். இன்ஸ்பெக்டர் இமை கொட்டாது அவளையே கவனித்துக்கொண்டிருந்தார். ஒவ்வொரு விஷயத்தைக் கூறும்போதும் அவளுடைய முகம் மாறுவதைக் கவனித்தார். அவள் உண்மையைத்தான் கூறியிருக்கிறாள் என்பது விளங்கியது.

"உங்கள் குடும்பத்தைப்பற்றி விளக்கமாகக் கூறியதற்கு மிகவும் நன்றி. ஆனால் உங்கள் சகோதரரின் மரணத்தைப்பற்றி நீங்கள் ஒன்றும் கேட்காமல் இருப்பதுதான் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது" என்று கேட்டுத் தன் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள முயன்றார் இன்ஸ்பெக்டர்.

"என்னதான் நான் என் சகோதரரை வெறுத்தபோதிலும் அவருடைய துர்மரணம் எனக்கு வருத்தத்தைத்தான் கொடுத்திருக்கிறது. வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் துயரம் தாள மாட்டாமல் விசித்து அழுது பொறுமையிருப்பாள். ஆனால் நான் மனோதிடம் படைத்தவளாகையினால்தான் துக்கத்தை வெளிக்காட்டாமல் பொறுமையுடன் இருக்கிறேன். என் கணவர் இதுபோன்ற கொலை, கொள்ளைகளைப்பற்றி எத்தனையோ சொல்லியிருக்கிறார். அதனால்தான் என் சகோதரர் கொலை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு நான் பதறவில்லை; பதட்டமடையவில்லை. இவ்வாறு அவர் துர்மரணமடைய வேண்டும் என்று அவருடைய தலையில் எழுதியிருக்கும்போது நாம் வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்?" என்று கூறியபோதிலும் அவளையும் மீறிக்கொண்டு துக்கம் கலந்த பெருமூச்சு வெளிவந்தது.

"உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. சிலர் இன்பம் ஏற்பட்டால் தலைகால் புரியாமல் குதிப்பார்கள். துன்பம் வந்தால் தாங்க முடியாமல் தவிப்பார்கள். இரண்டையும் சமமாகப் பாவித்து நிதானத்துடன் நடந்து கொள்வார்கள் சிலர். நீங்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். காப்டனின் துர்மரணத்தைப்பற்றி வர்ணித்து உங்களைத் துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் இங்கு வரவில்லை. அவருடைய குடும்பத்தைப்பற்றி விசாரிக்கத்தான் வந்தேன். காலம் சென்ற உங்கள் சகோதரியின் குடும்பத்தைப் பற்றிச் சொன்னால் நல்லது."

"பார்வதிக்கு மூன்று குழந்தைகள். இரண்டு ஆண், ஒரு பெண்."

"அவர்களைப்பற்றி உங்களுக்குத் தெரிந்ததை விவரமாகச் சொல்ல முடியுமா?"

"மூத்த மகனின் பெயர் ஜானகிராமன். அவன் கோயமுத்தூரில் ஓர் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறான்."

"ஓஹோ! அவனுக்கு என்ன வயது இருக்கும்?"

"இருபத்து ஏழு அல்லது இருபத்தெட்டு இருக்கலாம்."

"ஜானகிராமனுக்குக் கலியாணமாகிவிட்டதா?"

"இல்லை. ஆனால் அவன் ஒரு பெண்ணை நேசித்து வருவதாகவும், அவளைத்தான் அவன் கலியாணம் செய்துகொள்ளப் போவதாகவும் கேள்விப்பட்டேன்."

"அவனுடைய விலாசம்?"

"21, கணபதிபுரம், கோயமுத்தூர்."

இன்ஸ்பெக்டர் இந்த விவரத்தை டைரியில் குறித்துக் கொண்டு தலையை உயர்த்தினார்.

"அவனுக்கு அடுத்தவள் சாருமதி. அவளுக்குக் கலியாணமாகிவிட்டது. கணவனின் பெயர் சுதாகரன். 'சுரன்' என்ற புனைப் பெயரில் கதைகளும் கட்டுரைகளும் எழுதி வருகிறான்."

"ஓ, அப்படியா? 'சுரன்' எழுதிய புத்தகங்களைப் படித்திருக்கிறேன். அது சரி, அவர்களின் விலாசம்?"

"அவர்களும் கோயமுத்தூரில்தான் இருக்கிறார்கள். ராஜ வீதியில் உள்ள 'இலக்கிய இல்லத்'தில் வசிக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் யாரைக் கேட்டாலும் அந்த வீட்டைக் காண்பித்து விடுவார்கள்."

"நல்லது. கடைசி மகனைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே!"

"அவன் பெயர் பாலசுப்பிரமணியன். பாலன் என்று கூப்பிடுவார்கள். அவன் இப்பொழுது சென்னையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அவனுடைய விலாசம் எனக்குத் தெரியாது. ஜானகிராமனுக்கும் சாருமதிக்கும்கூட அவனுடைய இருப்பிடம் தெரிந்திருக்காது என்று எண்ணுகிறேன்."

"மிகவும் நல்லது. மற்றொரு முக்கியமான கேள்வி ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தவறாக எண்ணாமல் பதில் சொல்ல வேண்டும். நேற்று மாலை நீங்கள் என்ன செய்தீர்கள்? எவ்வாறு பொழுதைக் கழித்தீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். இக்கேள்வியைச் செவியுற்ற வுடன் திகைத்துப் போனாள் கற்பகம். ஏதோ ஒரு நெருக்கடியில்

சிக்கிக்கொண்டு விட்டதுபோன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

"என்னைப்பற்றிக் கேட்கிறீர்களா? நேற்று வழக்கம்போல் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு ஈஸிசேரில் சாய்ந்துகொண்டு பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தேன். ராணி தியேட்டரில் ஒரு நல்ல படம் ஓடுவதாக விளம்பரப்படுத்தியிருந்தது. அப்படத்தைப் பார்க்கப் பகல் காட்சிக்குச் சென்று ஆறு மணி சுமாருக்குத்தான் வந்து சேர்ந்தேன். அந்தப் படத்தைப் பலர் புகழ்ந்து கொண்டிருந்தார்களே தவிர, எனக்கு அது பிடிக்கவில்லை. ஒரே தலை வலியாக இருந்தது. விரைவில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுத்துவிட்டேன். வேறு ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா?" என்று குறும்பு கலந்த குரலில் கேட்டாள் அவள்.

"விசேஷமாக ஒன்றும் இல்லை. உங்கள் சகோதரியின் பிள்ளைகளையும் பெண்ணையும் பார்த்துப் பேச வேண்டும். காப்டன் கந்தசாமியின் சொத்தில் பெரும் பகுதி உங்களுக்கும் அம்மூவருக்கும் வரவிருக்கிறது என்பதை வக்கீல் இன்னும் தெரியப்படுத்தவில்லை போலிருக்கிறது!" என்று கூறிவிட்டு கற்பகத்தைக் கடைக் கண்ணால் கவனித்தார் இன்ஸ்பெக்டர். அவர் எதிர்பார்த்தபடி கற்பகத்தின் முகத்தோற்றம் திடீரென்று மாறியது. இன்பத்தின் ரேகைகள் படர்ந்தன. தன் சகோதரரின் உயர்ந்த குணத்தைப் பாராட்டிப் புகழ வேண்டும் போலவும் இருந்தது அவளுக்கு. ஆனால் மிகுந்த பிரயாசையுடன் பொறுமையை வரவழைத்துக் கொண்டாள். இன்ஸ்பெக்டரும் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு செல்ல முயன்றார். அப்பொழுது மாடியிலிருந்து 'கற்பகம்! கற்பகம்!" என்று ஈனஸ்வரத்தில் யாரோ அழைக்கும் குரல் கேட்டது. அது அவளுடைய கணவனைத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்து உணர்ந்தார் இன்ஸ்பெக்டர். அவரிடம் ஏதோ சொல்ல முயன்றாள். அதற்குள் மீண்டும் அந்தக் குரல் மாடியிலிருந்து வெளி வந்தது. அத்துடன் மாடிப்படிக்கட்டுகளில் மடமடவென்று இறங்கி வந்த நர்ஸ், "அவர் உடம்பை அலட்டிக்கொண்டு பலமாக சப்தம் போடுகிறார். நீங்கள்தான் அவரைச் சமாதானப்படுத்த வேண்டும், உடனே போங்கள்" என்று துரிதப்படுத்தினாள். மறுகணம் மாடி அறைக்கு விரைந்து சென்றாள் கற்பகம்.

"அவர் திடீரென்று ஏன் அவ்வாறு கத்த ஆரம்பித்துவிட்டார்? அவருடைய உடம்பிற்கு என்ன?" என்று நர்ஸை விசாரித்தார் இன்ஸ்பெக்டர்.

"அவர் முடக்கு வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார். பல வருடங்களாகப் படுத்த படுக்கையாக இருக்கிறார். அதிர்ச்சி அடையக்கூடிய செய்தியைக் கேட்டால் உடனே அவருடைய மூளை குழம்பிவிடும், நிலை தடுமாறி, நிதானம் இழந்து இவ்வாறு கத்த ஆரம்பித்து விடுவார்" என்றாள் நர்ஸ்.

"இப்பொழுது அவர் ஏன் அதிர்ச்சி அடைந்தார்?"

"வீட்டு வேலைக்காரி உங்கள் சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள். அவள் அவரிடம் காப்டன் கந்தசாமி கொலை செய்யப்பட்டதைத் தெரிவித்து விட்டாள். அதனால் தான் அதிர்ச்சி அடைந்து விட்டார் அவர்."

"நேற்று மாலையோ அல்லது இரவோ அவர் இவ்வாறு அதிர்ச்சி அடையும்படி ஏதாவது நடந்ததா?"

"இப்படி ஒன்று நடக்கவில்லை."

"தன் கணவரைக் கவனித்துக் கொள்வதற்காகத்தானே கற்பகம் உங்களை நியமித்திருக்கிறார்?"

"ஆமாம்."

"நேற்று முழுவதும் நீங்கள் அவருடன்தானே இருந்தீர்கள்?"

"மாலை நான்கு மணி வரையில்தான் இருந்தேன். அவர் ஒரு புத்தகப்பூச்சி. எந்த நேரத்திலும் ஏதாவது ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருப்பார். நான்கு மணி சுமாருக்கு அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகம் தீர்ந்துவிட்டது. உடனே லைப்ரரிக்குச் சென்று இரண்டு புத்தகங்கள் வாங்கிவரச் சொன்னார். இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது அந்த வாசகசாலை. ஆயினும், விரைவில் திரும்பிவிடலாம் என்ற எண்ணத்துடன் தான் அங்கு புறப்பட்டேன். வழியில் என்னுடைய சிநேகிதி ஒருத்தி என்னைப் பிடித்துக்கொண்டாள். என்னை மடக்கி மடக்கிப் பேசிக்கொண்டிருந்தாள். அவளிடமிருந்து விடுவித்துக்கொண்டு லைப்ரரிக்குச் சென்று இங்கு வருவதற்குள் ஆறு மணிக்கு மேலாகி விட்டது. கற்பகம் வீட்டில் இல்லாதினால் அவருக்கு ஏதாவது விபரீதம் ஏற்பட்டிருக்கப் போகிறதே என்று விரைந்து வந்தேன். ஆனால் இங்கு திரும்பி வந்தபோது அவர் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தார்."

"அப்பொழுது கற்பகம் வீட்டில் இருந்தாரா?"

"ஆமாம்! தலைவலி என்று கூறிவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார்."

"கற்பகத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"ஏழ்மையில் பிறந்து, எளிமையில் வாழ்ந்தபடியால் குடும்பத்தின் கஷ்ட நிஷ்டூரங்களை நன்கு உணர்ந்திருக்கிறார். தன் கணவர் அங்கனஹீனராய் படுத்த படுக்கையாக இருக்கிறாரே என்று எண்ணி எண்ணி உள்ளம் குமுறுகிறார். கணவனையே தெய்வமாகப் பாவித்து வருகிறார். இந்தக் காலத்தில் இம்மாதிரி ஒரு பெண் இருக்கிறாள் என்றால் அது மிகவும் அதிசயப்பட வேண்டிய விஷயம்தான்" என்று கற்பகத்தை வெகுவாகப் பாராட்டினாள் நர்ஸ். அவர்களின் பேச்சிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதுபோல் சுவரில் இருந்த கடிகாரம் ஒலித்தது. இன்ஸ்பெக்டர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார்.

"அடே! நான் இங்கு வந்து ஒரு மணி நேரம் ஆகப் போகிறதா? நேரம் போனதே தெரியவில்லையே! இன்னும் அரை மணி நேரத்தில் நான் ரயில்வே ஸ்டேஷனில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கோயமுத்தூர் வண்டியைப் பிடிக்க முடியாது. என் நன்றியை கற்பகத்துக்கு தெரியப்படுத்துங்கள்; நான் வருகிறேன்" என்று விரைந்து வெளியே வந்தார் அவர். இன்ஸ்பெக்டரைத் தன் பார்வையிலிருந்து மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அசதி நிறைந்த நெடுமூச்செறிந்தாள் அந்த நர்ஸ்.

கேப்டன் கந்தசாமியின் மரணத்தில் ஜானகிராமன்தான் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது இன்ஸ்பெக்டருக்கு. அவனைக் கண்டு அதுபற்றி நேரிடையாக விசாரிப்பதற்கான தைரியமும் அவரிடம் இருந்தது. ஆனால் உண்மையைக் கூறுமல் போய்விடப் போகிறானே என்று அஞ்சினார். தன்னைப்பற்றியும் தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றியும் ஏதாவது சொல்லித் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டு விடலாமல்லவா? ஆகவே, முதலில் அதே ஊரில் வசித்து வரும் அவனுடைய சகோதரியை விசாரிக்க வேண்டும் என்று தீர்மானித்தார் இன்ஸ்பெக்டர். கோயமுத்தூரில் சர்குமதி வசித்து வந்த விலாசத்தைக் கண்டுபிடிக்க அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

"இலக்கிய இல்லம்' என்ற பெயருக்குத் தகுந்தபடி அந்த வீடு கம்பீரமாகவும் கவர்ச்சியுடனும் காணப்பட்டது. சாரு மதியின் கணவன் அப்பொழுது வீட்டில் இல்லை. அவள் மட்டும் ரேடியோவின் இன்னிசையை ரசித்தவண்ணம் தன் கணவர் சமீபத்தில் எழுதிய புத்தகம் ஒன்றைச் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தாள். சிலருக்கு எழுத்தாளர்களைக் கண்டால் பிடிக்காது. அதிலும் மனைவிமார்களுக்கு எழுத்துத் தொழிலில் ஆர்வம் காட்டும் கணவர்களைக் கண்டால் அலட்சிய மனோபாவம் ஏற்படுவதுண்டு. அவர்கள் எழுதத் தெரியாதவர்கள்; எழுது வதின் பெருமை தெரியாதவர்கள்; இலக்கிய ரசனையில்லாதவர் கள். ஆனால் சாருமதி தன் கணவனைப் போற்றிப் புகழ்ந்தாள். அவருடைய எழுத்துத் திறமையைக் கண்டு பெருமை கொண்டிருந் தாள். நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லி கணவர் முன்ன ணிக்கு வருவதற்கு ஒரு தூண்டுகோலாக விளங்கினாள். அதனால் தான் அவ்வாறு ஆழ்ந்து அப்புத்தகத்தைப் படித்துக்கொண் டிருந்தாள் சாருமதி.

'இலக்கிய இல்ல'த்தின் முன்னால் அரை குறையாகத் திறக்கப் பட்டிருந்த கதவைத் தட்டினார் இன்ஸ்பெக்டர். அந்த ஒலி சாருமதியின் கவனத்தைக் கவர்ந்தது. எழுந்து வந்து கதவைத் திறந்தாள் சாருமதி, அப்பொழுது இன்ஸ்பெக்டர் சாதாரண உடையில் சென்றிருந்தார். ஆகவே, முன்பின் அறிமுகமில்லாத ஆசாமி ஒருவர் நிற்பதைக் கண்டு திகைத்தாள் அவள். அவ ளுடைய திகைப்பின் காரணத்தைப் புரிந்து கொண்டவர்போல் கோட்டுப் பையிலிருந்து தன்னுடைய விஸிட்டிங் கார்டை எடுத்து சாருமதியிடம் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

சாருமதி புத்தி கூர்மையுள்ளவளாயும் படித்தவளாயும் இருந்தபடியால் அந்தக் கார்டிலிருந்து தன் வீட்டைத் தேடிக் கொண்டு வந்திருப்பவர் போலீஸ் அதிகாரி என்று தோன்றிய போதிலும் அவள் கலவரப்படவில்லை. உதட்டில் புன்னகை மலரத் தலையை அசைத்து வீட்டினுள் வரவேற்று ஹாலில் உட்கார வைத்தாள் அவள். இன்ஸ்பெக்டரும் சாருமதியை ஒரு முறை ஏற இறங்கக் கவனித்தார். அவள் நல்ல அழகி, இருபத்து ஐந்து வயது மதிப்பிடக் கூடியவளாக இருந்தாள். ஏதோ ஒரு விதக் கவலையும் வேதனையும் அவளை வாட்டி வதைக்கிறது என்பதை அவளுடைய எழில் முகம் இலேசாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

"என் மாமாவின் மர்மக் கொலை சம்பந்தமாக நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். அந்தச் செய்தி என்னை நடுங்க வைத்துவிட்டது. இவ்வாறு அவர் துர்மரண மடைவார் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. இது விஷயமாக என்னால் முடிந்த உதவியைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அவருடன் நான் அதிகமாகப் பழகிய தில்லை. மேலும் அவர் பழகுவதற்கு ஏற்ற மனிதர் அல்ல என்று தான் சொல்வேன்."

"ஆமாம், அவரைப்பற்றி நானும் அப்படித்தான் கேள்விப் பட்டேன். காப்டனின் மரணச் செய்தி உங்களுக்கு எவ்வாறு தெரியவந்தது?"

"என்னுடைய பெரியம்மா எனக்குத் தந்தி கொடுத்திருந் தார்கள்."

"ஓ! கற்பகம் மூலம் தெரிந்து கொண்டீர்களா? நீங்கள் காப்டனை அதிகமாகப் பார்த்ததில்லை என்று எண்ணுகிறேன்."

"எனக்குக் கலியாணமான பிறகு அவரை நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். இரண்டாவது முறை பார்த்தபோது அவர் முரட்டுத்தனமாக நடந்துகொண்டு விட்டார். அதனால் மனஸ்தாபம் ஏற்பட்டு உடனே திரும்பி வந்துவிட்டோம்."

"உங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படக் காரணம் என்ன?"

"என் கணவருக்குச் சொந்தமாக ஓர் அச்சு ஆபீஸ் ஆரம் பிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. தன்னுடைய புத்தகங் களைப் பிரசுரித்துக் கொள்ளலாம், வெளி வேலைகளையும் வாங்கி அச்சடித்துக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு. அதற்காக என் கணவர் மாமாவிடம் கடனாகப் பணம் கேட்டார். என் மாமா பணம் கொடுக்க மறுத்துவிட்டார்.

அத்துடன் என் கணவர் ஒரு சோம்பேறி என்றும், எழுத்துத் தொழிலை மேற்கொண்டு வீண்பொழுது கழித்துக்கொண்டு வருபவர் என்றும் பழித்துரைத்தார். வாக்குவாதம் மிஞ்சி வாய்ச் சண்டையில் வந்து முடிந்துவிட்டது. மேலும் அங்கிருந்தால் விரோதம் வளர்ந்துவிடப் போகிறதே என்று நான் என் கணவரைச் சமாதானப்படுத்தி திருப்பி அழைத்து வந்து விட்டேன்."

"அது சரி, நேற்று மாலை நீங்கள் என்ன செய்தீர்கள் என் பதைக் கூற முடியுமா?"

"நேற்றுக் காலையில் எழுந்தது முதல் வீட்டு வேலைகள் அதிக மாகயிருந்தபடியால் மத்தியானம் மூன்று மணிவரையில் தூங்கி னேன். தூக்கம் கலைந்து எழுந்த நான் முகம் கை கால்களை அலம்பிக்கொண்டு புதிய உடைகளை அணிந்துகொண்டு என் கணவரின் புதிய புத்தகங்கள் சிலவற்றைப் படித்த வண்ணம் இருந்தேன். பிறகு அடுத்த தெருவிலிருந்து என்னுடைய சிநேகிதி ஒருத்தி வந்திருந்தாள். அவளுடன் உலக விவகாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் பொழுதை உல்லாசமாகக் கழித்தேன்."

"உங்கள் கணவர் அப்பொழுது வீட்டில் இல்லையா?"

"இல்லை, என் கணவர் எழுதிய ஐம்பதாவது புத்தகத்தை யொட்டிப் பிரசுரகர்த்தர்கள் சங்கம் அவருக்கு ஒரு பார்ட்டுக் கூட்டம் நடத்தினார்கள். அதனால்தான் அவர் வீட்டில் இல்லை."

"உங்களுடைய தம்பி ஒருவன் பட்டணத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே?"

"எனக்குச் சரியாகத் தெரியாது. ஒருவேளை என் அண்ணை விற்குத் தெரிந்திருக்கலாம்."

"நல்லது, நான் உங்கள் அண்ணனைப் பார்த்து இதர விஷயங்களைத் தெரிந்து கொள்கிறேன்" என்று கூறிவிட்டு ஜானகிராமனைக் காணப் புறப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

அப்பொழுது இரவு ஏழு மணி யிருக்கும். ஜானகிராமன் கண் டிப்பாகக் காரியாலயத்திலிருந்து திரும்பியிருப்பான் என்று தோன்றியபடியால் அவனுடைய வீட்டுக்கு விரைந்து சென்றார் அவர்.

கணபதி புரத்தில் ஜானகிராமன் வசித்து வந்த இடத்தைக் கண்டு பிடிக்க இன்ஸ்பெக்டருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. 21-வது நெம்பர் வீட்டின் கதவைத் தட்டினார் அவர். அங்கும்

நடுத்தர வயதுடைய ஒரு நங்கைதான் கதவைத் திறந்தாள். அவள் அவரை விசாரித்தாள்; தன் எஜமானரைப் பார்க்க யாரோ ஒரு பெரிய மனிதர் வந்திருக்கிறார் என்பதை உணர்ந்து வராண்டாவில் இருந்த பிரம்பு நாற்காலியில் அவரை அமரச் செய்துவிட்டு உள்ளே சென்றாள் அந்நங்கை. அந்த வராண்டாவில் இருந்த மரச் சாமான்களின் மீதும் சுவரில் மாட்டப்பட்டிருந்த பொருள்களின் மீதும் கண்ணோட்டம் விட்டவண்ணம் அமர்ந்திருந்தார் இன்ஸ்பெக்டர். ஜானகிராமன் அவரைத் தாமதிக்க வைக்காமல் விரைவாகத் தன் அறையை விட்டு வெளியே அவர் முன்னால் வந்து நின்றான். அவன் அப்பொழுது சாதாரண உடைகளைத்தான் அணிந்திருந்தான். சிவந்த மேனியும் கவர்ச்சிகரமான தோற்றமும் அவனுடைய அழகை அதிகப் படுத்திக் காட்டின. அவன் என்னதான் உற்சாகத்துடனும் புன்னகை மிகுந்த தோற்றத்துடனும் காணப்பட்ட போதிலும் ஏதோ ஒருவிதக் கவலை அவனுடைய உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கிறது என்பது நன்கு வெளிப்பட்டது.

"நான்தான் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம். ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னவுடன் எதிரிலிருந்த மற்றொரு பிரம்பு நாற்காலியில் 'தொப்'பென்று உட்கார்ந்து விட்டான் ஜானகிராமன். 'நான் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேனோ அவர் வந்து விட்டார்! எந்த நேரத்தை எதிர்பார்த்திருந்தேனோ அந்த நேரமும் வந்துவிட்டது' என்று உள்ளூர நினைத்துக்கொண்டு விம்மல் கலந்த பெருமூச்சு விட்டான் ஜானகிராமன்.

"உங்கள் மாமா காப்டன் கந்தசாமியின் மர்மக் கொலை விஷயமாக நான் விசாரணை செய்து கொண்டிருக்கிறேன். இது விஷயமாக நீங்கள் எனக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா?" என்று சாதாரணமாகத்தான் கேட்டார் இன்ஸ்பெக்டர். ஆனால் இந்தக் கேள்வி ஜானகிராமனின் உடலை நடுங்க வைத்துவிட்டது. உள்ளத்தைத் துடிக்க வைத்துவிட்டது. மின்சார அதிர்ச்சியினால் தாக்கப்பட்டவன்போல் நாற்காலியிலிருந்து திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

"என் மாமாவின் மர்மக் கொலை விஷயமாக என்னை நீங்கள் கைது செய்யப் போகிறீர்களா?" என்று குழப்பமும் தடுமாற்றமும் கலந்த குரலில் கேட்டான் அவன்.

"இல்லை! அவ்வாறு இருந்தால் இத்தனை நேரம் உங்கள் கரங்கள் விலங்கினால் பிணைக்கப்பட்டிருக்கும். நேற்று நீங்கள்

என்ன செய்தீர்கள் என்பதை அறியத்தான் இத்தனை அவசர மாக உங்களைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஓஹோ! நான் நேற்று சோலைமலையில் இருந்தேன் என்ப தைக் கண்டு பிடித்து விட்டீர்களா?"

"ஆமாம்! நீலவானம் ஓட்டலில் இருந்த ரிஜிஸ்தரின் மூலம் அதை அறிந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் ஏன் அங்கு சென் றீர்கள் என்று சொல்ல முடியுமா?"

"என் மாமாவைப் பார்ப்பதற்காகத்தான் அங்கு போயிருந் தேன்."

"நீங்கள் அங்கு வரப்போகும் விஷயம் உங்கள் மாமா வுக்குத் தெரியுமா?"

"அவர் என்னை எதிர்பார்த்திருக்க மாட்டார் என்றே எண்ணுகிறேன். ஏனென்றால், திடீரென்று நான் அவரைப் பார்க்கச் சென்றேன்."

"என்ன காரணம்?"

"காரணம் என்ன? அவரைப் பார்ப்பதற்காகத்தான் போயிருந்தேன்."

"பல காலமாகத் தொடர்பு இல்லாத நீங்கள் திடீரென்று அவரைப் பார்க்கச் சென்றது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! அது சரி, அவரை நீங்கள் பார்த்தீர்களா?"

"அவரை விரைவில் பார்க்க வேண்டும் என்றுதான் சோலை மலைக்குப் புறப்பட்டேன். ஆனால் ரயில் வண்டி ஐந்து மணி நேரம் தாமதமாக அங்கு போய்ச் சேர்ந்தது. ஒரு மணி சுமாருக் குத்தான் வண்டி சோலைமலையை அடைந்தது. நீலவானம் ஓட்டலுக்குச் சென்று ஓர் அறையை ஏற்பாடு செய்துகொண்டு பகல் போஜனத்தை முடித்துக்கொண்டு கிளம்புவதற்குள் அதிக நேரம் பிடித்து விட்டது."

"நீங்கள் காப்டனைக் காணச் சென்றபோது நாலு அல்லது நாலரை மணியிருக்குமா?"

"மாமாவைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்ற ஒரே எண்ணம் என்னை உந்தித் தள்ளிக்கொண்டிருந்த படியால் நான் நேரத்தை கவனிக்கவில்லை. ஆனால் அப்பொழுது நேரம் சுமார் நாலரைமணி யிருக்கலாம் என்று எண்ணுகிறேன்."

"அது சரி, நீங்கள் உங்கள் மாமாவைப் பேட்டி கண்டு பேசினீர்களா?"

"முல்லைவில்லாவைத் தேடிக் கண்டுபிடிப்பதில் எனக்கு அதிக சிரமம் ஏற்படவில்லை. என் மாமாவைச் சந்தித்தேன்; அவருடன் பேசினேன். பிறகு நீலவானம் ஓட்டலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன்."

"நீங்கள் எவ்வாறு முல்லைவில்லாவினுள் பிரவேசித்தீர்கள்?"

"நான் அந்த வீட்டின் முன்னலிருந்த காலிங் பெல்லின் விசையை அழுத்தினேன். கதவு திறக்கப்படவில்லை. பிறகு கதவைத் தட்டினேன். சற்று நேரத்திற்குப் பிறகு அவரே கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார்."

"அவர் உங்களைக் கண்டு அதிசயமடைந்திருக்க வேண்டுமே!"

"ஆமாம், ஆச்சரியப்பட்டுப் போனார்!"

"நீங்கள் எவ்வளவு நேரம் அந்த வீட்டில் இருந்தீர்கள்?"

"கால்மணி நேரம் இருந்திருப்பேன். அப்பொழுது அவர் நல்ல நிலையில்தான் இருந்தார். அவரிடம் எந்தவிதமான மாறுதலும் காணப்படவில்லை."

"எத்தனை மணிக்கு அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டீர்கள்?"

"சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் ஐந்தேகால் மணிக்கு மேல் இருக்காது என்று சொல்வேன்."

"நீங்கள் எத்தனை மணிக்கு நீலவானம் ஓட்டலுக்குத் திரும்பி வந்தீர்கள்?"

"ஐந்தேமுக்கால் மணியிருக்கும் என்று எண்ணுகிறேன்."

"முல்லைவில்லாவிற்கும் நீலவானம் ஓட்டலுக்கும் அதிக தூரம் இல்லை. எத்தனைதான் மெதுவாக நடந்து வந்தபோதிலும் ஓட்டலுக்கு வந்து சேர பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குமேல் பிடித்திருக்காது."

"நீங்கள் அரைமணி நேரம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்களே!"

"முல்லை வில்லாவிலிருந்து புறப்பட்ட நான் நேராக ஓட்டலுக்குத் திரும்பி வரவில்லை. அந்த வட்டாரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கொஞ்சம் தாமதித்துத்தான் வந்து சேர்ந்தேன்."

"நேற்று வழக்கத்தைவிட சீக்கிரமாகக் குளிர ஆரம்பித்து இருக்கிறது. அத்துடன் மூடுபனியும் அந்த வட்டாரத்தை

விழுங்க முயன்றிருக்கிறது. அந்த நிலையில் நீங்கள் மலை வட்டாரத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றதாகக் கூறுவதை என்னால் நம்ப முடியாது."

"நான் நடந்ததைத்தான் கூறுகிறேன். அப்பொழுது அத்தனை பனி படரவில்லை. அதனால்தான் என்னால் ஓரளவு சுற்றிப் பார்க்க முடிந்தது."

"நீங்கள் எதற்காக நேற்றுத் திடீரென்று காப்டனைக் காணச் சென்றீர்கள்?"

"குறிப்பாக எந்தவிதமான காரணமும் சொல்ல முடியாது. அவரைப் பார்க்க வேண்டும், குடும்ப விஷயங்களைப் பேச வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டிருந்தது. அதனால்தான் முல்லை வில்லாவிற்குப் போயிருந்தேன்."

"காப்டனின் துர்மரணம் நேற்று இரவே அந்த வட்டாரத்தில் பிரபலமடைந்து விட்டது. அத்துடன் இன்று காலையிலும் அவரைப்பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கின்றன. அவருடைய மரணச் செய்தியை அறிந்திருந்தும் நீங்கள் ஏன் திடீரென்று இன்று காலை வண்டியில் இங்கு புறப்பட்டு வந்தீர்கள்?"

"என் மாமா கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன் நான் கலவரமடைந்து போனேன். அச்சம், வேதனை, குழப்பம் ஆகிய மூன்றும் ஒரே சமயத்தில் என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டன. அவர் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் நேரத்தில் நான் அந்த வட்டாரத்தில் அலைந்துகொண்டிருந்த படியால் என்மீது சந்தேகம் ஏற்பட்டாலாமல்லவா? அதனால் முதல் வண்டியிலேயே புறப்பட்டு இங்கு வந்து விட்டேன். அவ்வாறு அவசரப்பட்டுப் பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டு விட்டோமே என்று நான் இப்பொழுது வருந்துகிறேன்."

இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் கீழ்க்கண்ணால் ஒரு முறை அவனைப் பார்த்துவிட்டுப் பேசினார்: "நீங்கள் இவ்வளவு தூரம் உங்களைப்பற்றி விளக்கமாகக் கூறியதற்கு நன்றி. நான் இது வரை செய்த விசாரணையிலிருந்து நீங்கள்தான் கடைசி முறையாகக் காப்டனை உயிருடன் பார்த்திருக்கிறீர்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே, என்னுடன் வந்து மேலதிகாரிகளின் முன்னால் உங்களை கைப்பட ஒரு வாக்குமூலம் எழுதிக் கொடுக்க வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஜானகிராமனுக்கு அந்த நெருக்கடியிலிருந்து எப்படியாவது தப்பினால் போதுமென்று இருந்தது. ஆகவே, உடைகளை மாற்றிக் கொண்டு அவருடன் புறப்படச் சித்தமானான் அவன்.

அந்த சமயத்தில் அலங்காரமான உடைகளை அணிந்து கொண்டிருந்த அழகு மங்கை ஒருத்தி, கரத்திலிருந்த டம்பப் பையைச் சுழற்றியவண்ணம் கேட்டைத் திறந்து கொண்டு கம்பீரமாக உள்ளே நுழைந்தாள். ஜானகிராமனின் கலவரம் மிகுந்த தோற்றத்தையும், அவனுக்குப் பக்கத்தில் நிற்கும் இன்ஸ்பெக்டரையும் கண்டு திகைத்துப் போனாள் அவள். சற்று வேகமாக நடந்து முன்புறமிருந்த மூன்று படிக்கட்டுகளையும் ஒரே எட்டில் கடந்து அவ்விருவரின் முன்னால் வந்து நின்றாள்.

"என்ன சமாச்சாரம்? ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டாள் அவள்.

"நான் நினைத்தபடி நடந்துவிட்டது! நான்தான் என் மாமாவைக் கொன்றேன் என்று போலீசார் சந்தேகப்படுகிறார்கள்" என்றான் அவன் துக்கம் கலந்த குரலில். இன்ஸ்பெக்டரைச் சுட்டெரித்துவிடுபவள்போல் தலையைத் திருப்பி நன்றாகப் பார்த்தாள் அவள்.

"இவள்தான் மிஸ் பிரேமா. என்னைப் பரிபூரணமாக நேசித்து வருகிறாள். இவளைத்தான் நான் மணந்து கொள்ளப் போகிறேன்" என்று தன் நிலைமையையும் மறந்து மனம்விட்டுப் பேசிவிட்டான் அவன்.

பிரேமாவிற்கு ஒருவாறு விஷயம் விளங்கிவிட்டது. காப்டனின் மர்மக்கொலை சம்பந்தமாகத்தான் அவனை அழைத்துச் செல்ல இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார் என்று எண்ணியபோது துயரம் நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. அவள் படித்த பெண்ணாகவும் துணிச்சல் மிகுந்தவளாயும் மனோதிடமும் பிடிவாத குணமும் கொண்டவளாயும் இருந்தபடியால் துயரத்தை அடக்கிக்கொண்டு பேசினாள்:

"இன்ஸ்பெக்டர் சார்! அவர் பயந்த சுபாவம் உள்ளவர். நல்லொழுக்கமும் உயர்ந்த குணங்களும் கொண்டவர். சமய சந்தர்ப்பங்களும் சூழ்நிலையும் அவர்மீது சந்தேகத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. ஆனால் அவர் எந்தவிதமான பாவமும் அறியாதவர். அவரைக் குற்றவாளியாக்கிக் கைது செய்து தண்டனை வாங்கிக் கொடுத்து என்னுடைய வாழ்வைப் பாழாக்கி விடாதீர்கள்" என்று மன்றாடும் குரலில் பேசினாள் அவள்.

இருவரும் உண்மையாக நேசிக்கிறார்கள் என்பது இன்ஸ்பெக்டருக்கு விளங்கியது. ஆனால் ஜானகிராமனின்மீது சந்

தேகப்படுவதற்குச் சரியான காரணங்கள் இருக்கும்போது அவன்மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட முடியுமா?

இன்ஸ்பெக்டர் பதிலொன்றும் பேசவில்லை. அனுதாபம் கலந்த பார்வையில் அவளைப் பார்த்துவிட்டுக் கிளம்பினர். கருவிழிகள் கண்ணீர் குளத்தில் மிதக்க, பார்வையிலேயே பிரேமாவிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு இன்ஸ்பெக்டரைப் பின் தொடர்ந்தான் ஜானகிராமன். பிரேமாவிற்கு அழுகை பீறிட்டு வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டு அவ்விருவரும் தன் பார்வையிலிருந்து மறையும்வரை ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள் பிரேமா. அந்தப் பார்வையில் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் பிரதிபலிப்பதை இன்ஸ்பெக்டர் எவ்வாறு உணர்ந்திருக்க முடியும்?

காப்டன் கந்தசாமி வெள்ளிக்கிழமையன்று மரணமடைந்தார். திங்கட்கிழமையன்றுதான் மேலதிகாரிகளினால் அது ஒரு மர்மக்கொலை என்பது நிச்சயிக்கப்பட்டது. இடையில் இருந்த இரண்டு நாட்களில் அந்தக் கொலையின் மர்மத்தைக் கண்டு பிடிக்க அரும்பாடுபட்டார் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம். தான் விசாரித்த ஆசாமிகள் அனைவரையும் திங்கட்கிழமையன்று விசாரணைக்கு வரச்சொல்லியிருந்தார் இன்ஸ்பெக்டர். அவருக்கு மற்றவர்களைவிட ஜானகிராமனின் மீதுதான் அதிகமான சந்தேகம் ஏற்பட்டது. அதனால் அவனையும் அங்கு வரச் செய்திருந்தார் அவர். பயந்த சுபாவமும் எளிதில் ஏமாற்றமடையக்கூடிய தன்மையும் கொண்டிருக்கும் தன் காதலன் ஏதாவது உளறிக் கொட்டி தண்டனையடைந்து விடப்போகிறானே என்ற பயத்தினால் பிரேமாவும் வந்திருந்தாள். எல்லோரிடமும் சகசமாகப் பழகிவிடுவாள். அவள் சிறிது அறிமுகமாகியிருந்தபோதிலும் பலகாலமாகப் பழக்கப்பட்டவள்போல் பேச ஆரம்பித்து விடுவாள். பிடிவாதகுணம் மிகுந்தவள். எளிதில் விட்டுக் கொடுத்து விடமாட்டாள், யாரைக் கண்டும் எதற்காகவும் அஞ்சமாட்டாள். எத்தகைய கஷ்டம் ஏற்படுவதாய் இருந்தபோதிலும் அதை எதிர்த்துப்போராடித் தன் காரியத்தைச் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவள். ஜானகிராமன், பிரேமா ஆகிய இருவரின் உள்ளங்கள்தான் ஒன்றுபட்டிருந்தன என்று சொல்லவேண்டுமே தவிர, இருவருடைய குணாதிசயங்களும் முற்றிலும் முரண்பட்டிருந்தன. பொதுவாக ஆண்களுக்கிருக்கும் குணம் பிரேமாவிடம் இருந்தது. பெண்களின் பயந்த சுபாவம் ஜானகிராமனிடம் குடிகொண்டிருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

காப்டனின் மர்மக்கொலையின் விசாரணை காரணமாக விபரீதமாக ஏதாவது விளைந்து விடப்போகிறதே என்று அஞ்சியிருந்தாள் பிரேமா, ஆனால் எப்படி எப்படியோ பதில் சொல்லி அந்த நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டான் ஜானகிராமன்.

காப்டனின் விசித்திர மரணம் மக்களிடம் பரபரப்பையும் அந்த வழக்கைப் பற்றிய உண்மைகளை அறிய வேண்டும் என்ற கவலையும் உண்டாக்கியிருந்தபடியால் புதிய விஷயங்களைச் சேகரிப்பதற்காக அங்கு வந்திருந்தான் 'தினசரி' பத்திரிகை நிருபரான சந்திரசேகரன். அவனுடன் வெகு விரைவில் பழக ஆரம்பித்து விட்டாள் பிரேமா. ஜானகிராமனும் அவனுடன் நட்புக்கொள்ள ஆரம்பித்தான். விசாரணைக்

குப் பிறகு ஜானகிராமனின் உடம்பு ஒருமாதிரியாக இருந்தது. சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டால்தான் மன நிம்மதி ஏற்படும் போலிருந்தது. ஆனால் பிரேமாவிற்கு மூல்லைவில்லாவை யும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்த்துவிட்டு வரவேண்டும் போ லிருந்தது. சந்திரசேகரன் பத்திரிகை நிருபன் என்ற பெயரில் கொலை நடந்த இடத்தைப் பார்வை யிடுவதற்கும் போட்டோ எடுப்பதற்கும் அனுமதி பெற்றிருந்தான். அவனுக்கு மூல்லைவில் லாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் போலிருந்தது. ஆகவே சந்திரசேகரனைத் துணையாக வைத்துக்கொண்டு அந்த வட்டாரத்தைப் பார்த்துவிட்டு வந்துவிடுவது என்று தீர்மானித் தாள் பிரேமா. ஜானகிராமன் அவளைச் சீக்கிரம் வந்து சேரும் படி கூறிவிட்டு நீலவானம் ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தான். பிரேமாவின் உயர்குணங்களைப் பற்றியும் சேகரின் நேர்மையைப் பற்றியும் அவன் அறிந்திருந்தபடியால் கவலையற்று இருந்தான்.

சந்திரசேகரன், தான் மேஜரைச் சந்தித்துப் பேசியதைப் பற்றியும் அவர் மூலம் தான் அறிந்த உண்மைகளைப்பற்றியும் அவளிடம் கூறினான். தன்னுடைய காதலரைப் போலீசார் சந் தேகிப்பதாகவும், அவருக்கு எந்த சமயத்தில் என்ன நேருமோ என்று கவலைப்படுவதாகவும் வெளியிட்டாள் பிரேமா. சில மணி நேரங்களுக்கு முன்பு அவர்கள் அறிமுகமானபோதிலும் இருவரும் சகோதர பாவனையில் பழக ஆரம்பித்து விட்டார்கள். சந்திரசேகரன் ஒரு சாதாரண நிருபர் மட்டுமல்ல, புத்தி கூர்மை யும் மூன் யோசனையும் மிகுந்தவன். ஆகவே, அந்த மர்மக் கொலையின் காரணத்தையும் உண்மைக் குற்றவாளி யாரென் பதையும் கண்டுபிடித்தாக வேண்டும் என்று தீர்மானித்தான். அத்துடன் பிரேமாவிற்கும் தன்னால் முடிந்த உதவியைச் செய்து ஜானகிராமனின் மீதிருக்கும் சந்தேகத்தை நீக்கி அவளுடைய வாழ்வைப் பரிமளிக்கச் செய்வது என்றும் முடிவு செய்து கொண்டான். இருவரும் சோலைமலை வட்டாரத்தைச் சுற்றிப் பார்த்தனர். மூல்லைவில்லாவில் அவசியமான இடங்களையும் போட்டோப் பிடித்துக் கொண்டான் அவன். அண்டைப் பக்கத் தில் இருப்பவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றும் அறிந்து கொண்டான். காப்டன் கந்தசாமியை யாரோ வேண்டுமென்றே கொலை செய்திருக்கவேண்டும் என்று விளங்கியதே தவிர, ஒரு வரும் அதற்குச் சரியான காரணம் கூறவில்லை. பிறகு மேஜர் வசித்து வந்த சின்னமலை வட்டாரத்திற்கு வந்து பட்டும்படாமல் விசாரித்தனர். அந்த வட்டாரத்தில் அதிக மனித நடமாட்டம் இல்லாவிட்டாலும் அங்குமிங்கும் சில வீடுகள் கண்களில் தென்

படாமல் இல்லை! ஒவ்வொரு வீட்டில் வசிப்பவர்களைப்பற்றியும் விசாரித்தறிந்தான் சந்திரசேகரன். மேஜர் பகதூர் சிங்கும் காப்டன் கந்தசாமியும் இணைபிரியாத நண்பர்கள் என்றும், ஒருவருக்காக மற்றொருவர் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்றும், வாரமிருமுறை இருவரும் சந்தித்து வந்தனர் என்றும் தெரியவந்தன. காப்டன் கந்தசாமிக்குச் சொந்தமான ஆனந்த நிலையத்தில் வசித்து வந்த வேதவல்லியைப்பற்றியும் அவளுடைய குடும்பத்தைப் பற்றியும் விசாரித்தறிந்தார்கள். அவர்கள் இருவரும் அந்தக் கொலையின் மர்மத்தைக் கண்டு பிடிக்க எவ்வளவுதான் மும்முரமாக முனைந்தபோதிலும் அவர்களிஞல் அதிக அபிவிருத்தி அடைய முடியவில்லை. ஆகவே இருவரும் ஒருவித ஏமாற்றத்துடன் நீலவானம் ஓட்டலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அங்கு பிரேமாவிற்கு ஓர் அதிசயச் செய்தி காத்திருந்தது. அந்த ஓட்டலின் சொந்தக்காரியான பத்மாவதிக்கு பிரேமாவைக் கண்டவுடன் துக்கம் பொங்கி வந்தது. பிரேமா ஜானகிராமனைப் பரிபூரணமாக நேசிப்பதை அவள் உணர்ந்திருந்தபடியால்தான் அவ்வாறு அவளுக்குத் துயரம் ஏற்பட்டது. மலர்ந்த முகத்துடன் புன்னகை தவழ பேசிப் பழகக்கூடிய அவள் அப்பொழுது ஏன் அவ்வாறு வாட்டமுற்று இருக்கிறாள் என்று பிரேமாவிற்குப் புரியவில்லை! பத்மாவதி அவ்விருவரையும் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்று அவர்கள் அதிர்ச்சி அடையாத வகையில் விஷயத்தைக் கூறினாள்.

"காப்டன் கந்தசாமி கொலையுண்ட தினத்தன்று ஜானகிராமன் இங்கு வந்து தங்கியது உனக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன்" என்று ஆரம்பித்தாள்.

"நன்றாகத் தெரியும். அவர் எதற்காக வந்தார் என்பதையும் நான் அறிவேன்!" என்று அழுத்தம் திருத்தமான குரலில் கூறினாள் பிரேமா.

"அவர் காப்டனைக் காண முல்லைவில்லாவிற்குச் சென்றதாகவும் கேள்விப்பட்டேன்."

"ஆமாம், காப்டனைக் கண்டு பேசியும் இருக்கிறார். அவர்கள் மரணமடைந்த சமயத்தில் அவர் அந்த வட்டாரத்தில் இருந்தார் என்பதும் எனக்குத் தெரியும்."

"அதுதான் அவரை இப்பொழுது அபாயத்தில் சிக்க வைத்திருக்கிறது!"

"என்ன, அபாயமா?"

"ஆமாம், அவரை அரைமணி நேரத்திற்கு முன்பு போலீசார் கைதுசெய்து அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்!" என்று சொல்ல முடியாமல் சொன்னாள் பத்மாவதி. பிரேமாவிற்குச் சம்மட்டியினால் படீரென்று தலையில் அடித்ததுபோல் இருந்தது. "ஐயோ!" என்று வாய்விட்டுக் கதறினாள். சட்டென்று இரண்டு கரங்களினால் முகத்தை மூடிக்கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். பிரேமா எவ்வளவுதான் மனோதிடம் கொண்டவளாக இருந்தபோதிலும் தன் காதலன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்ற பயங்கரச் செய்தியினால் ஏற்பட்ட அதிர்ச்சியை அவளால் தாங்கமுடியவில்லை. பிரேமாவின் பரிதாபகரமான அழுகை பத்மாவதியின் உள்ளத்தை உருக்கியது. அவளுடைய தலையை வருடி அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள். பிரேமாவின் துயரம் அடங்கி அழுகை நிற்பதற்கு சற்றுநேரம் பிடித்தது. முகத்தை மறைத்துக் கொண்டிருந்த கரங்களை விலக்கினாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆவேசம் கொண்டவள்போல் தலையை உயர்த்தித் தன் முன்னால் அமர்ந்திருந்த இருவரையும் பார்த்தாள்.

"அநியாயம்! அக்கிரமம்! அவருடைய குணம் எனக்கு நன்றாகத் தெரியும். ஒருபோதும் அவர் கொலை செய்திருக்க மாட்டார். இன்ஸ்பெக்டர் எந்தக் காரணத்தைக் கொண்டு அவரைக் கைது செய்தார் என்று கேட்டுவிட்டு வருகிறேன். சரியான பதில் சொல்லாவிட்டால் மானபங்கம் ஏற்பட்டதற்காக அவர்மீது கேஸ் போட்டு என்னபாடு படுத்துகிறேன் பாருங்கள்" என்று ஆவேசமான குரலில் இரைந்தாள் பிரேமா.

"அவசரப்படாதே பிரேமா. போலீசார் காரணமில்லாமல் எதையும் செய்யமாட்டார்கள். நீ அவசரப்பட்டு எதையாவது செய்துவிட்டால் கடைசியில் அது அவருக்கே அபாயத்தை விளைவித்து விடலாம். அவர்களுக்கு உன்மீதும் அனுதாபம் இல்லாமல் போய்விடும். கொஞ்சம் அமைதியாய் இரு" என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் பத்மாவதி.

"மேலதிகாரிகள் தன்மீது குற்றம் கண்டு பிடிக்கப் போகிறார்களே என்று தான் இன்ஸ்பெக்டர் அவரைக் கைது செய்திருக்க வேண்டும். போலீஸ் உத்தியோகத்தில் இருப்பவர்களில் சிலர் பித்தலாட்டக்காரர்கள். சிலர் பகல் கொள்ளைக்காரர்கள். பத்து வருடங்களுக்கு முன்பு சுதந்திரம் வந்ததாகச் சொல்லிக் கொள்கிறோமே தவிர, இப்பொழுதுதான் நாம் முன்னைவிடக் கேவலமான நிலையில் இருக்கிறோம்" என்று பொறுமித் தள்ளினாள் பிரேமா.

சற்று தூரத்தில் அமர்ந்து பிரேமாவைக் கவனித்துக் கொண்டிருந்த சந்திரசேகரனுக்கு இது சற்று மனத்தாங்கலாகத்தான் இருந்தது. பிரேமாவின் வார்த்தை வருத்தத்தை உண்டாக்காமல் இல்லை. ஆனால் தன் காதலனின் பிரிவினால் ஏற்பட்ட துயரத்தினால் அவள் அவ்வாறு பேசியிருக்கிறாள் என்பதை உணர்ந்து அவளைத் தேற்ற முயன்றான்.

"என்ன செய்வது பிரேமா? ஒவ்வொருவரும் தான் செய்யும் காரியங்கள் சரியானது என்றுதான் எண்ணுகிறார்கள்! இன்ஸ்பெக்டர் தன் கடமையைச் செய்திருக்கிறார். உண்மை வெளியானால் ஜானகிராமனுக்கு விடுதலை கிடைத்து விடுகிறது. நிரபராதிகள் தண்டிக்கப்பட்டது இல்லை. குற்றவாளிகள் ஒருபோதும் தண்டனையிலிருந்து தப்பியதும் இல்லை. அவனை நிரபராதி என்று நிரூபிக்க வழிதேட வேண்டுமே தவிர, நடந்துபோன விஷயத்தை நினைத்துக்கொண்டு வருத்தப்படுவதில் பிரயோசனமில்லை" என்றான் சந்திரசேகரன்.

"சந்திரசேகரன் அப்படிச் சொன்னது அவளுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. ஆனால் பதட்டமாகப் பேசுவதினால் பலன் ஒன்றுமில்லை என்று தோன்றியபடியால் சிறிதுநேரம் மௌனமாக அவனைப் பார்த்தவண்ணம் இருந்தாள்.

"நீங்கள் கூறுவது வாஸ்தவம்தான். அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடும். எப்படியாவது அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கவேண்டும். அத்துடன் உண்மைக் குற்றவாளியாரென்பதையும் கண்டு பிடித்து அவன் கரங்களுக்கு விலங்கு பூட்டச் செய்யவேண்டும். இந்த இரண்டையும் செய்து முடித்தால்தான் எனக்கு அமைதி ஏற்படும். மன நிம்மதி உண்டாகும். இந்த விஷயத்தில் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும். உங்களை நான் என் சகோதரன் போல் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?" என்று கேட்டாள் பிரேமா.

"கவலைப்படாதே பிரேமா. என்னால் முடிந்த உதவியைக் கண்டிப்பாய்ச் செய்கிறேன். ஒரு சகோதரியின் மீது ஏற்படும் வாஞ்சை உன்மீது எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உன்னுடைய இன்ப வாழ்விற்காக நான் எந்தவிதமான தியாகமும் செய்யத் தயாராகயிருக்கிறேன்" என்று அவளைத் தேற்றினான் அவன். அவ்வார்த்தைகளைக் கேட்ட பிறகுதான் பிரேமாவின் கவலை நிறைந்த முகத்தில் ஒருவிதத் தெளிவு ஏற்பட்டது.

இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் ஏறக்குறைய அதே சமயத்தில் சோலைமலை ஆனந்த நிலையத்தில் வசித்துவந்த ஸ்ரீமதி வேத வல்லியை விசாரிப்பதில் மூழ்கிருந்தார்.

"நமஸ்காரம் இன்ஸ்பெக்டர். உட்காருங்கள் இப்படி. காப்டனின் துர்மரணத்தைக் கேட்டு நாங்கள் கலங்கிப் போய் விட்டோம். அவருடைய வாழ்க்கை இவ்வாறு முடிந்துவிடு மென்று நான் நினைக்கவில்லை. இவள்தான் என்னுடைய மகள் வனஜா" என்று தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த தன் மகளை இன்ஸ்பெக்டருக்கு அறிமுகப்படுத்திய வண்ணம் அவருக்கு எதிரில் அமர்ந்து கொண்டாள் வேதவல்லி. இன்ஸ்பெக்டர் அவ்விருவரையும் பார்த்தார். அந்த இடத்தைச் சுற்றி ஒரு முறை கண்ணோட்டம் விட்டார். பிறகு பேச ஆரம்பித்தார் அவர்.

"காப்டன் கந்தசாமியின் கொலை வழக்கு என்னிடம் ஒப் படைக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் நான் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்."

"காப்டனைப்பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆயினும் என்னால் முடிந்த உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறேன்."

"மேஜர் பகதூரைச் சந்தித்து விசாரித்தபோதுதான் உங் களைப்பற்றியும் எனக்குத் தெரியவந்தது. அவர்தான் காப்டன் மரண மடைந்திருந்ததைக் கண்டு பிடித்தார். நீங்கள் எவ்வாறு இங்கு குடி வந்தீர்கள் என்பதையும் சொன்னார். மேலும் அன்று மாலை மேஜர் இங்கு இருந்ததாகவும் தெரியவருகிறது. அதனால்தான்..."

"ஆமாம்! சென்ற வெள்ளிக்கிழமை மாலை அவர் இங்குதான் வந்திருந்தார்."

"அதை அவரே என்னிடம் சொன்னார். அவரை உங்களுக்கு வெகு காலமாகத் தெரியுமா?"

"சோலைமலை வட்டாரத்திற்கு வந்த பிறகுதான் தெரியும். என் சுபாவம் உங்களுக்குத் தெரியாது. நான் எல்லோருடனும் எளிதில் சகஜமாகப் பழகிவிடுவேன். ஒருமுறை அறிமுகம் ஏற் பட்டால் போதும், பலகாலமாகச் சிநேகிதர்களாக இருப்பவர்கள்போல் பழகி விடுவேன்."

"அன்று அவர் எதற்காக இங்கு வந்தார்?"

"குறிப்பாக எந்தவிதமான காரணமும் சொல்ல முடியாது. என்னுடைய வற்புறுத்தலின் பேரில்தான் அவர் இங்கு வந்திருந்தார் என்றுதான் சொல்லவேண்டும். அவர் வாரம் ஒருமுறை காப்டனைக்காண இந்த வட்டாரத்திற்கு வந்து போவது எனக்குத் தெரியாது. ஐந்தாறு மாதங்களாக அவர் என் வீட்டின் பக்கம் வராததினால், சென்ற வாரம் அவரைப் பார்த்தபோது இங்கு வந்து போகும்படி வற்புறுத்தினேன். அடுத்த வாரம் வரும்போது வருவதாகச் சொன்னார். அதனால்தான் அன்று அவர் இங்கு வந்தார்."

"அவர் இங்கு வந்தபோது மணி என்ன இருக்கும்?"

"நான் அப்பொழுது கடிகாரத்தைப் பார்க்கவில்லை. ஆனால் மாலை ஐந்து மணிக்குமேல் இருக்காது என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்."

"அவர் இங்கு எத்தனை மணி வரையில் இருந்தார்?"

"அரைமணி, முக்கால்மணி நேரத்திற்குமேல் இருந்திருக்க மாட்டார்."

"அவ்வளவு சீக்கிரத்தில் கிளம்பிவிட்டாரா?"

"இன்னும் சற்றுநேரம் இருந்திருப்பார். ஆனால் அந்த விசித்திரப் பலகையின் பயங்கரச் செய்தி அவரைப் பயமுறுத்தி உடனே இங்கிருந்து புறப்படும்படி செய்து விட்டது. அடாடா! விசித்திரப் பலகையைப்பற்றிச் சொல்ல மறந்து விட்டேனே..."

"நீங்கள் சிரமப்படவேண்டாம். அதைப்பற்றி மேஜர் என்னிடம் விவரமாய்க் கூறிவிட்டார். அந்த விசித்திரப் பலகை காப்டனின் மரணத்தைப்பற்றி அறிவித்தது உண்மைதானே?"

"அந்தச் செய்தியைப் படித்து நான் திடுக்கிட்டுப் போனேன். வனஜா அதிர்ச்சி அடைந்தாள். அன்று என்னுடைய வேண்டுகோளின்பேரில் இங்கு வந்திருந்த ரங்கராஜனும் தாமோதரனும் கூட அதிர்ச்சி அடைந்து போனார்கள். கலவரமும் குழப்பமும் அடைந்த மேஜர் இங்கிருந்து உடனே புறப்பட்டு விட்டார். அந்தச் செய்தி வெறும் பித்தலாட்டமாக இருக்குமென்று எண்ணினேன். ஆனால் காப்டனின் மரணச் செய்தியைப் படித்த பிறகுதான் விசித்திரப் பலகை அறிவித்தது உண்மை என்று விளங்கியது!"

"அதை நீங்கள் நம்புகிறீர்களா?"

"சில பெண்களைப்போல் நான் ஒரு கட்டுப்பட்டியல்ல. உலகத்தையும் உலகத்தின் போக்கையும் உணர்ந்தவள். பழங் காலத்துப் பழக்கவழக்கங்களிலும் அர்த்தமற்ற மூடக்கொள்கை களிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆயினும் விதித்திரப் பலகையை நம்பவேண்டித்தான் இருக்கிறது. அது கூறியபடி குறிப்பிட்ட நேரத்தில் காப்டன் இறந்திருக்கும்போது அதை எவ்வாறு நம்பாமல் இருக்கமுடியும்?"

இன்ஸ்பெக்டர் கின்று நிதானித்து யோசித்தார். மேஜர் கூறிய வாக்குமூலங்களில் பெரும் பகுதி உண்மையாக இருந்த படியால் மீண்டும் மீண்டும் அவரைப்பற்றி விசாரிப்பதில் பலன் இல்லை என்று விசாரணையை வேறு வழியில் திருப்பினர் அவர்.

"நீங்கள் இந்த வட்டாரத்திற்கு வருவதற்கு முன்பு எங்கு இருந்தீர்கள்?"

"பம்பாயில் இருந்தேன். என் கணவர் ஒரு பத்தாம் பசலி! பெண்களை அடிமைகளாகக் கருதும் மனப்போக்குக்கொண்டவர். இருபது வருடங்களாக, அவருடன் காலம் தள்ளிவிட்டேன். நாளுக்கு நாள் நாகரிகமும் முற்போக்குக் கொள்கைகளும் வளர்ந்துவரும் இந்தக் காலத்தில் அவர் பிற்போக்கு வாதியாகவே இருந்துவந்தபடியால் என் மனம் உடைந்து போயிற்று, அதனால் தான் அவரைவிட்டுவிட்டு வனஜாவுடன் இங்கு வந்துவிட்டேன்."

"முற்போக்குக் கொள்கைகள் மிகுந்த நீங்கள் எவ்வாறு ஒரு பத்தாம் பசலியைக் கலியாணம் செய்துகொண்டீர்கள்?"

"நான் வாழ்வில் மகிழ்ச்சி காண முடியாததற்கு என்னு டைய பெற்றோர்கள்தான் காரணம். அவர்களின் சுய நலமும் உற்றார் உறவினர்களின் குறுகிய மனப்பான்மையும்தான் என் வாழ்வைச் சூன்யமாக்கி விட்டன. என்னுடைய அந்தரங்க வாழ்க்கையைப்பற்றிக் கூறினால்தான் இந்த வார்த்தைகளின் அர்த்தம் உங்களுக்கு விளங்கும். வனஜா, உள்ளே போய் எங்கள் இருவருக்கும் டீ போட்டுக் கொண்டுவா" என்றாள் வேதவல்லி தன் மகளைப் பார்த்து. தன் தாயாரின் உள்ளத்தை உணர்ந்து கொண்டவள்போல் பின் கட்டிற்குச் சென்றாள் வனஜா.

"என் வாழ்க்கையைச் சூன்யமாக்கிய அந்தச் சம்பவத்தைத் தான் நான் உங்களுக்குக் கூறப்போகிறேன். இப்பொழுது அது அவசியமற்றதுதான். ஆனால் அது உங்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது. பல வருடங்களானபோதிலும் அந்தச் சம்பவங்கள் நேற்று நடந்ததுபோல்தான் தோன்றுகின்றன. அந்தக்

காலத்தில் பெண்கள் அதிகம் படிக்கமாட்டார்கள். அவர்களுக்குத் துணிவும் கிடையாது. ஒரு பெண் ஓர் ஆணுடன் பேசி விட்டால் போதும்! ஆயிரம் கதைகளைக் கட்டி அவளை அல்லல் படுத்தி விடுவார்கள். இந்தக் காலத்திலும் அவ்வாறு மிருகத் தன்மை கொண்ட மனிதர்கள் இல்லாமல் இல்லை. ஆயினும் அந்தக் காலத்தில் அது அதிகம். என் குடும்பத்தில் நான் புரட்சியை உண்டாக்கினேன். நன்கு படித்தேன். நவநாகரிக மாக வாழ ஆரம்பித்தேன். படிப்பு முடிந்தவுடன் பிரபல கம்பெனி ஒன்றில் உத்தியோகமும் தேடிக் கொண்டேன். அந்தக் கம்பெனியில் சிவசாமி என்று ஒருவர் உத்தியோகம் பார்த்து வந்தார். அவர்தான் எனக்கு வேலை சொல்லிக் கொடுத்தார். அவர் கண்ணியமும் நேர்மையும் ஒழுக்கமும் உள்ளவர் என்பதை நான் வெகு எளிதில் புரிந்து கொண்டுவிட்டேன். அவர் ஒரு பிரம்மச்சாரி என்பதை உணர்ந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அவரை மணந்துகொள்ளவும் துணிந்தேன். என் விருப்பத்தை உணர்ந்த அவர் உள்ளம் பதறிப்போனார். அவரும் என்னைப் பரிபூரணமாக நேசித்து வந்தபோதிலும் ஜாதிமத வித்தியாசம் குறுக்கே நின்றது. அவர் உயர்ந்த ஜாதி. நான் தாழ்ந்த குலத்தில் பிறந்தவள். நான் மெல்ல என் பெற்றோர் களிடம் விஷயத்தை வெளியிட்டேன். பெற்றோர்கள் வெகுண்டு எழுந்தார்கள். பாம்பைப்போல் சீறி விழுந்தார்கள்! ஆயினும் நான் அட்டகாசம் செய்து அடக்கி ஒடுக்கி என் வழிக்குக் கொண்டுவர முயற்சி செய்து கொண்டிருந்தேன். இந்த நிலையில் சிவசாமியின் பெற்றோர்களுக்கு, அவர் என்னுடன் பழகும் விஷயம் தெரிந்து விட்டது. அவர் ஏற்கனவே ஒரு கோழை; ஒரு பயங்கொள்ளி; பிடிவாத குணமும் தைரியமும் இல்லாதவர். ஆகவே, அவருடைய பெற்றோர்கள் அவரை உருட்டி மிரட்டி வேறு ஒருத்தியின் கழுத்தில் தாலி கட்டும்படி செய்து விட்டார் கள். நான் ஒரு ஆணைப்போல் பிடிவாதமாக இருந்தேன். அவர் ஒரு பெண்ணைப்போல் கோழையாக இருந்து என்னைத் தவிக்க வைத்து விட்டார்! அதனால் நான் அவரைக் கோபித்துக் கொள்ளவில்லை. சமூகத்தைச் சபித்தேன். ஜாதிமத வெறியர் களை வைதுதீர்த்தேன். ஜாதிமத வித்தியாசமும், ஏழை, பணக் காரன் என்ற பேதமும் ஒழிந்தால்தான் இளைஞர்கள் சந்தோஷ மாக வாழமுடியும் என்று பொருமினேன். கடைசியில், என் பெற்றோர்களின் பலவந்தத்தின் பேரில் வேறு ஒருவரை நான் மணந்து கொண்டு பம்பாய்க்குப் போய்விட்டேன். அவருடன் நான் இயந்திரம்போல் வாழ்ந்தேனே தவிர சுகப்படவில்லை. எவ் வாறு சுகமடையமுடியும்? பெற்றோர்கள், தாங்கள் பெருமையாக

வாழவேண்டும், உற்றூர் உறவினர்கள் தங்களைப்பற்றி உயர்வாக எண்ணவேண்டும் என்றுதான் எண்ணுகிறார்களே தவிர, தன் மக்களின் மனோ நிலையை உணர்ந்து பார்ப்பதில்லை! காதலர்களின் இன்ப வாழ்விற்கு இடையூறாக இருக்கும் பெற்றோர்களைத் தண்டிக்குமளவிற்காவது சட்டங்கள் அமைக்கவேண்டும். அதுவரையில் நம் நாடு உருப்படாது. இனப்பூசல் ஒழியாது. மக்களிடமும் இன்பம் தலை காட்டாது" என்று ஆவேசம் மிகுந்த குரலில் சிறு பிரசங்கம் செய்து முடித்தாள் வேத வல்லி. தன் காதல் வாழ்வில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக உலகத்தின் போக்கையே மாற்றி வைக்க முயலும் அவள்மீது இன்ஸ்பெக்டருக்கு அனுதாபம்தான் ஏற்பட்டது.

"பல்லாண்டுகளாகத் தலைதூக்கி விரித்தாடிக்கொண்டிருக்கும் இந்த இனப்பிரச்னை அவ்வளவு எளிதில் தீர்ந்துபோய் விடுமா? இருந்தாலும் எல்லோரும் ஓர் இனம் என்ற காலம் வராமல் போய்விடாது. அது சரி, நீங்கள் குறிப்பாக இந்த வட்டாரத்திற்கு வரவேண்டிய காரணமென்ன?"

"வனஜாவிற்கு மலைவட்டாரத்தில் வசிக்கவேண்டும் என்ற எண்ணம் வெகு காலமாக உண்டு. நானும் மலைகளும் மடுவுகளும் பூந்தோட்டங்களும் மிகுந்த இடத்தில் வசிக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். எனக்கும் என் கணவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டவுடன் எனக்கு வக்கீல் லோகநாதனின் நினைவு வந்தது. அவர் ஒன்றிரண்டு முறை சில கேஸ்கள் விஷயமாக பம்பாய்க்கு வந்திருக்கிறார். அப்பொழுதுதான் அவரை எனக்குத் தெரியும். அவர் இந்த வட்டாரத்தைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லியிருந்தார். ஆகவே, அவரிடம் என் நிலைமையைப்பற்றித் தெரிவித்து உடனடியாக இந்த வட்டாரத்தில் ஓரிடம் ஏற்பாடு செய்யச் சொன்னேன். இந்த இடத்தை அவர் ஏற்பாடு செய்தார். உடனே நான் வனஜாவை அழைத்துக் கொண்டு இங்கு வந்துவிட்டேன்" என்றாள் அவள்.

இன்ஸ்பெக்டர் ஏற்கனவே விசாரித்தறிந்திருந்த விஷயத்திற்கும் இப்பொழுது வேதவல்லி கூறியதற்கும் ஒத்திருந்தபடியால் மேலும் அதைப்பற்றி வற்புறுத்தாமல் விட்டுவிட்டார். சற்றுநேரத்திற்கு முன்பு பின்கட்டிற்குச் சென்ற வனஜா தேனீர் நிறைந்த இரண்டு பீங்கான் கோப்பைகளைக் கொண்டு வந்து அவர்களுக்கு முன்னாலிருந்த டீபாயின்மீது வைத்தாள். இருவரும் தேனீர் பருக ஆரம்பித்தனர்.

"அது சரி, காப்டனின் கொலை சம்பந்தமாகக் கைது செய்யப் பட்டிருக்கும் ஜானகிராமனைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கி றீர்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். அந்தப் பெயரைக் கேட்டவுடன் 'கிரீச்' சென்று கத்திவிட்டுப் புடவை முந்தாணியை எடுத்து வாயில் புதைத்துக் கொண்டாள் வனஜா. அவளுக்கு மயக்கம் வரும்போலவும் இருந்தது. நிலை தடுமாறி நிதானமிழந்து அருகிலிருந்த நாற்காலியில் 'தொப்' பென்று அமர்ந்து தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"வனஜா! என்னவாகி விட்டது?" என்று கேட்ட வண்ணம் வனஜாவின் அருகில் சென்று அவளை ஆசுவாசப்படுத்த முயன்றாள். பிறகு இன்ஸ்பெக்டரின் பக்கம் திரும்பி, "இவள் ஏற்கனவே பலஹீனமான இருதயம் படைத்தவள். அத்துடன் அந்த விசித்திரப் பலகையின் பயங்கரச்செய்தி, காப்டனின் மரணம் ஆகிய இரண்டும் சேர்ந்து அவளை அதிர்ச்சி அடையச் செய்துவிட்டன. கொஞ்சநேரம் ஓய்வு கொடுத்தால் அவள் உடம்பு சரியாகிவிடும்" என்று கூறிவிட்டு வனஜாவின் உடம்பைக் கவனிக்க முற்பட்டாள் வேதவல்லி.

இன்ஸ்பெக்டர் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம் பினர். அவருடைய கால்கள் இயந்திரம்போல் நடந்து கொண்டி ருந்தனவேயன்றி அவர் மனம் வெகுவாகக் குழப்பிக் கொண்டு தான் இருந்தது! வேதவல்லி கூறியவைகள் உண்மையானது தானா, அல்லது ஏதாவது ஒரு முக்கிய விஷயத்தை மறைத்து வைத்திருக்கிறாளா? ஜானகிராமனின் பெயரை உச்சரித்தவுடன் வனஜாவிடம் திடீரென்று ஏன் அவ்விதம் மாறுதல் ஏற்பட்டது? ஜானகிராமனுக்கும் வனஜாவிற்கும் என்ன சம்பந்தம்? — இந்த மூன்று கேள்விகளும் அடிக்கடி எழுந்து அவருடைய மூளையைக் குழப்ப ஆரம்பித்துவிட்டன.

பிரேமா ஒரு துப்பறிபவள் அல்ல; ஆயினும் தன் காதலனின் விடுதலைக்காக அவ்வாறு மாறியிருந்தாள்! இல்லாவிட்டால் அத்தனை துணிச்சலாகப் பத்திரிகை நிருபரான சந்திரசேகரனை அழைத்துக் கொண்டு மேஜர் பகதூர் சிங்கைப் பேட்டி காண வந்திருப்பாளா? காப்டனின் கொலை விஷயமாக விசாரிக்க மீண்டும் வந்திருக்கும் பத்திரிகை நிருபரின்மீது கோபம் பொங்கி வந்தது. ஆனால் தன்னுடன் ஒரு பெண்ணை அழைத்து வந்திருந்தபடியால் கோபத்தை வெளிக்காட்டாமல் புன்னகை மலர அவ்விருவரையும் வீட்டினுள் வரவேற்று, ஹாலிலிருந்த சோபாவில் உட்கார வைத்தார் பகதூர்சிங்.

"இவள்தான் மிஸ் பிரேமா! உங்களைப் பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினாள். அதனால்தான் அழைத்து வந்தேன். தற்போது காப்டன் கொலை வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கும் ஜானகிராமனை இவள் மனப்பூர்வமாக நேசித்து வருகிறாள். தன் காதலன் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவன் என்று கைது செய்யப்பட்டிருந்தால் காதலியின் உள்ளம் எவ்வாறு துடிக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அவனுடைய தூய குணங்களை உணர்ந்திருக்கும் இவள் எப்படியும் அவனைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறாள்" என்று பிரேமாவை மேஜருக்கு அறிமுகப்படுத்தினான் சந்திரசேகரன். 'ஓ! இவள் ஜானகிராமனின் காதலியா? அவனைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் துப்பறியப் புறப்பட்டிருக்கிறாள் போலிருக்கிறது' என்று உள்ளூர எண்ணிய வண்ணம் அவளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

"மற்றவர்களைவிட எனக்கு அவருடைய குணம் நன்றாகத் தெரியும். அவர் நிரபராதி என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன். எப்படியாவது அவரை இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்ற வேண்டும். அவரைப்பற்றி நினைக்கும்போது என் உடல் நடுங்குகிறது, உள்ளம் துடிக்கிறது" என்று கூறிய வண்ணம் பொங்கி வந்த துயரத்தை மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக்கொண்டாள் அவள்.

"உங்களுடைய நிலைமையை நினைக்கும்போது எனக்கும் வருத்தமாக இருக்கிறது. ஆனால் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் ஒன்று சேர்ந்து சதி செய்யும்போது நாம் என்ன செய்ய முடியும்?"

"அப்படியானால் அவரைக் குற்றவாளி என்று நீங்களும் நினைக்கிறீர்களா?"

"அப்படி நான் சொல்லவில்லையே! குற்றவாளி, முன்னேற் பாடுடன் திட்டமிட்டுக் காப்டனைக் கொலை செய்திருக்க வேண்டும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. ஜானகிராமன் குற்றவாளி யாயிருந்தால் நீலவானம் ஓட்டலுக்கு வந்து தங்கியிருக்கமாட் டான். அப்படி வந்திருந்தாலும் பெயரை மாற்றிவைத்துக் கொண்டிருந்திருப்பான். அவ்வாறு இல்லாவிட்டாலும் கொலை செய்தபிறகு ஊரைவிட்டே ஓடிப்போயிருப்பான். அவ்வாறு செய்யாததினால் அவனை நிரபராதி என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது."

"இந்தக் கொலையை யார் செய்திருக்கமுடியும்? உங்களுக்கு வேறு யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா?"

"நான்தான் காப்டன் கொலை செய்யப்பட்டிருந்ததை முதல் முதலில் கண்டுபிடித்தேன்! எவனோ ஒரு திருடன் கொள்ளை யடிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் வீட்டினுள் புகுந்து அவரைக் கொலை செய்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று தான் நான் நினைத்தேன். ஆனால் பிறகுதான் அது வேண்டு மென்று செய்யப்பட்ட கொலை என்பது தெரியவந்தது. முதலில் நானும் காப்டனின் மரணத்தைப்பற்றி அறிய மண்டையை உடைத்துக் கொண்டு பார்த்தேன். ஒன்றும் என் மூளைக்கு எட்டவில்லை. போலீசாரின் வேலை அது என்று விட்டு விட்டேன்."

"அவருடன் நெருங்கிப் பழகிவந்த உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டுமே?"

"காப்டனைப்பற்றி மற்றவர்களைவிட எனக்கு அதிகமாகத் தெரியும். ஆகவே நான் சந்தேகப்படுமளவிற்கு ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை."

"நீங்கள் கொஞ்சம் முயன்றால் அவரைக் கண்டிப்பாய்க் காப்பாற்ற முடியும். நீங்கள்தான் என் துயரத்தைப் போக்க வேண்டும்" என்று கண்களில் கண்ணீர் மல்க மன்றாடும் குரலில் வேண்டினாள் அந்த அழகு மங்கை.

"நான் காப்டனின் நெருங்கிய நண்பனுகையினால் என்னிட மிருந்து புதிய உண்மைகளை ஏதாவது அறியலாம் என்ற எண்ணத்துடன் தானே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்? எனக்குத் தெரிந்தவைகளை நான் ஏற்கனவே இன்ஸ்பெக்டரிடம்

சொல்லிவிட்டேன். ஒன்றையும் நான் மறைத்து வைக்கவில்லை. அவர் ஒரு செல்வந்தரானபோதிலும் எளிய வாழ்க்கையைத்தான் மேற்கொண்டிருந்தார். அவருக்கு அதிகமாகக் கடிதங்கள் ஒன்றும் வராது. அவரும் அனுவசியமாக ஒருவருக்கும் எழுத மாட்டார். பெண்களிடம் ரகசியத் தொடர்பு, சூதாட்டம், பேராசை போன்ற மன விரோதத்தை வளர்க்கக்கூடிய துர்க் குணங்கள் ஒன்றும் அவரிடம் கிடையாது. இந்த நிலையில் யார் அவரைக் கொலை செய்யத் துணிந்திருக்க முடியும்?"

"மூல்லை வில்லாவில் வேலை பார்த்து வந்த ஏகாம்பரத்தைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?"

"சில வருடங்களாக அவரிடம் வேலை பார்த்து வருகிறான். மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்."

"சமீபத்தில்தான் அவனுக்குக் கலியாணமாகியது என்று கேள்விப்பட்டேன்."

"ஆமாம்! நீலவானம் ஓட்டலின் சொந்தக்காரியான பத்மாவதியின் மகள் ராணியை மணந்து கொண்டான். காப்டனுக்கும் பெண்களைப் பிடிக்காது; அதனால்தான் கலியாணமானவுடன் தனிக்குடித்தனம் வைத்துவிட்டான் அவன்."

"ஆனந்த நிலையத்திலேயே உங்களுக்குக் காப்டனின் மரணத்தைப்பற்றித் தெரிந்துவிட்டது என்று கேள்விப்பட்டேன்....."

"ஆமாம்! விசித்திரப்பலகை ஒன்றை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தோம். அதுதான் அந்த விபரீதச் செய்தியை வெளியிட்டது. நான் அதிர்ச்சி அடைந்த போதிலும் அதை நான் நம்பவில்லை. அறிவும் நாகரிகமும் வளர்ந்து வரும் இந்தக் காலத்தில் சாஸ்திரம், ஜோஸ்யம் போன்ற ஆதாரமற்ற, அர்த்தமற்ற விஷயங்களை யார் நம்புவார்கள்?"

"அதை நீங்கள் நம்பவில்லை என்று சொல்கிறீர்கள். அவ்வாறு இருந்தால் நீங்கள் ஏன் அந்தச் செய்தியினால் கலவரமும் குழப்பமும் அடைந்து உடனே மூல்லைவில்லாவிற்குச் சென்றீர்கள்? அத்துடன் காப்டன் உண்மையிலேயே கொலை செய்யப்பட்டிருந்திருக்கிறார்! இதில் ஏதோ மர்மம் மறைந்திருக்கிறது என்பது உங்களுக்கு விளங்கவில்லையா?"

"சரிதான்! இன்னும் சற்று நேரத்தில் நான்தான் கொலைகாரன் என்று முடிவு கட்டி விடுவீர்கள் போலிருக்கிறதே!"

"அப்படித் தவறாக எண்ணி விடாதீர்கள்! விசித்திரப் பலகைக்கும் காப்டனின் மரணத்திற்கும் ஏதோ சம்பந்தம்

இருக்கிறது என்றுதான் சொல்ல வந்தேன்! அது சரி, வேத வல்லியைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?"

"அவள் ஒரு நாகரிக நங்கை; முற்போக்குவாதி; அத்துடன் பணக்காரி. கணவனைப் பகைத்துக் கொண்டு சமீபத்தில் இங்கு வந்து சேர்ந்திருக்கிறாள். இளமைக் காலத்தில் காதலில் தோல்வியுற்றுக் கடமைக்காக ஒருவனை மணந்து கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறாள் என்று தெரிய வந்தது! மனமில்லாத மணவாழ்வில் எவ்வாறு மகிழ்ச்சியைக் காண முடியும்?"

"இந்த விஷயங்கள் என் காதிலும் விழுந்தன. வேத வல்லி காதலில் தோல்வி அடைந்திருக்கிறாள். காப்டனை பெண்களை வெறுத்து வந்திருக்கிறார். அத்துடன் அவள் கணவனைப் பகைத்துக் கொண்டு சமீபத்தில் இங்கு குடியேறியிருக்கிறாள். இருவரும் ஏன் காதலர்களாக இருந்திருக்கக் கூடாது?"

"உங்களுக்குக் கற்பனைசக்தி அதிகமாக இருக்கிறது என்று எண்ணுகிறேன். நீங்கள் சந்தேகப்படுவதற்குத் தகுந்த ஆதாரம் இல்லை. அவர்கள் இருவரும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் அல்ல என்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். அப்படியே அவர்களை மாஜி காதலர்களாக வைத்துக் கொண்டபோதிலும் அவள் ஏன் காப்டனின் மரணத்திற்குக் காரணமாக இருக்க வேண்டும்?" என்று அவளையே மடக்கினான் மேஜர். அளவு மிகுந்த நம்பிக்கையுடன்தான் மேஜரைக் காண வந்தாள் அவள். ஆனால் அந்த பேட்டி அவளுக்குப் பலனளிக்கவில்லை. தன் காதலனைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையையும் கொடுக்கவில்லை. ஆகவே, சந்திரசேகரனை அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள் பிரேமா.

மேஜரின் சந்திப்பு எந்தவிதமான அபிவிருத்தியையும் கொடுக்காததினால் மிகுந்த சோர்வுடன் மீண்டும் நீலவானம் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தாள் அவள். சந்திரசேகரன் ஏதேதோ நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைச் சொல்லி அவளை உற்சாகப்படுத்த முயன்று கொண்டிருந்தான். ஆனால் அவளுடைய மனப்புயல் அத்தனை சுலபத்தில் அடங்குவதாக இல்லை. நீலவானம் ஓட்டலின் சொந்தக்காரியான பத்மாவதி அவளை விசேஷமாகக் கவனித்தாள். பிரேமாவின் பரிதாபகரமான நிலைமை அவளுடைய உள்ளத்தை உருக்கியது. ஜானகிராமன் விடுதலை அடைந்து இருவரும் மணம் செய்து கொண்டு மகிழ்வோடு இருப்பதைப் பார்க்கவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

அன்று இரவு பிரேமா, சந்திரசேகரன் ஆகிய இருவரின் ஆலோசனையிலும் கலந்து கொண்டாள் பத்மாவதி. அவர்களுக்குப் புரியாத விஷயம் தன் புத்தியில் எட்டிவிடும்; அதன் மூலம் குற்றவாளி யாரென்பது விளங்கிவிடும்; அவ்வாறு வெற்றி பெற்றால் தனக்கு நல்ல பெயர் கிடைக்குமல்லவா?

"நீங்கள் இவ்வளவு தூரம் ஏன் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள்? கொஞ்சம் நிதானித்து யோசித்தால் உண்மை விளங்கிவிடுமே! விசித்திரப் பலகையின் விபரீதச் செய்தியைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன? அதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டாள் பத்மாவதி.

"நம்பாமல் என்ன செய்வது? அந்தச் செய்தியின்படி காப்டன் கொலை செய்யப்பட்டுத்தானே கிடந்தார்" என்று வருத்தம் நிறைந்த குரலில் சொன்னாள் பிரேமா.

"அன்று ஆனந்த நிலையத்தில் கூடியிருந்தவர்களில் யாருக்காவது காப்டன் மரணமடைந்த செய்தி தெரிந்திருந்து கபட நாடகமாடியிருக்கலாமல்லவா?" என்று ஒரு சந்தேகத்தை எழுப்பி விட்டாள் பத்மாவதி.

"சரி, அப்படியே வைத்துக்கொண்டு ஒவ்வொருவரைப் பற்றியும் ஆராய்ந்து பார்ப்போம். ரங்கராஜன் காப்டனின் நெருங்கிய நண்பர். மேஜர் பகதூர்சிங் காப்டனைக் காணத்தான் சோலமலைக்குப் போயிருக்கிறார். காப்டனின் மரணச்செய்தி அவருக்கு ஏற்கனவே தெரிந்திருந்தால் அவர் அங்கு சென்றிருக்க மாட்டாரல்லவா? தாமோதரன் அந்த வட்டாரத்திற்குச் சமீபத்தில் குடி வந்தவர் என்பது தெரியவருகிறது. அவருக்குக் காப்டனைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது என்றும் கேள்விப்பட்டேன். வேதவல்லி, அவளுடைய மகள் வனஜா ஆகிய இருவரையும் சந்தேகிப்பதில் அர்த்தமில்லை; ஆதாரமும் இல்லை! காப்டனை அவளுடைய பழைய காதலர் என்றும் தன்னை அவர் கை விட்டுவிட்டதனால் அவரை அவள் பழி வாங்கியிருக்க வேண்டும் என்றும் வைத்துக்கொண்டாலும் காப்டனின் மரணத்தினால் அவளுக்கு என்ன பயன் ஏற்பட்டிருக்க முடியும்?" என்றான் அரைகுறையாகச் சில விஷயங்களை சேகரித்து வைத்திருந்த சந்திரசேகரன். இந்த நிலையில் ஆரம்பித்த அவர்களின் ஆலோசனை வெகுநேரம் வரையில் வளர்ந்து கொண்டிருந்தது. நள்ளிரவு அம்மூவரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்றார்கள்.

அன்று இரவு வெகுநேரம் வரையில் தூக்கமில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் பிரேமா. காப்டன்

கொலையுண்டு விழுந்து கிடந்த காட்சியும், ஜானகிராமன் கரங்களில் விலங்குடன் சிறையில் நடமாடும் தோற்றமும், தன்னுடைய அவலநிலையும் அடிக்கடி அகக்கண் முன்னால் தோன்றி அவளை அல்லல்படுத்திக் கொண்டிருந்தன. பொழுது விடிந்த பிறகும் அவளுக்கு மன நிம்மதி ஏற்படவில்லை. ஆகவே மலைச்சாரல் பக்கம் நடமாடினாலாவது அமைதி ஏற்படாதா என்று எண்ணித் தனியாக வெளியே புறப்பட்டாள் அவள். சின்னமலைச் சாரலைக் கடந்து சோலைமலை வட்டாரத்திற்கு வந்து சேர்ந்தாள் அவள். காலைவேளையில் வீசிய குளிர்ந்த காற்றும் மலைச்சிகரங்கள் வானத்தை எட்டுவது போன்று தோற்றமளித்த காட்சியும், பலவகை மலர்களின் நறுமணமும் அவளுடைய கவனத்தைக் கவர்ந்தன. இயற்கைக் காட்சிகள் நிறைந்து பரிபூரணப் பொலிவுடன் விளங்கும் அந்த இடத்தின் அழகை உடன்சேர்ந்து அனுபவிக்கத் தன் காதலன் உடன் இல்லையே என்று உள்ளம் வெதும்பிய வண்ணம் நடந்து கொண்டிருந்தாள் பிரேமா. அந்தச் சமயத்தில் "நமஸ்காரம், மிஸ் பிரேமா! என்னை உனக்குத் தெரிகிறதா?" என்று ஒரு குரல் கேட்டுத் தலையை நிமிர்த்தினாள் அவள். நாகரிக உடைகளுடன் கரத்திலிருந்த வாக்கிங் ஸ்டிக்கைச் சுழற்றிய வண்ணம் தனக்கு எதிரில் சற்று வயது முதிர்ந்த ஒருவர் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டுப் போனாள் அவள்! அவளுடைய விழிகளில் பிரதிபலித்த தவிப்பு அவரைத் தனக்குத் தெரியாது என்று வெளிப்படுத்தின. "என் பெயர் ரங்கராஜன். என்னை நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள். நான் நேற்றுக் காப்டனின் கொலை சம்பந்தமாக நடந்த விசாரணைக்கு வந்திருந்தேன். என்னை நீங்கள் கவனித்திருக்கமாட்டீர்கள். நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கும் ஜானகிராமனை உண்மையாக நேசித்து வருகிறீர்கள் என்பதும், அவருடைய விடுதலைக்காக அரும்பாடு படுகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்! உங்களுடைய நிலைமையைக் கண்டு பரிதாபப்படுகிறேன். உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவதற்கு என்னால் முடிந்த உதவியைச் செய்யச் சித்தமாய் இருக்கிறேன்" என்று வலிய அவளுக்கு உதவி செய்ய முன் வந்தார், உலாவுவதற்காக அந்தப் பக்கம் வந்த ரங்கராஜன்.

"உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து அவரை விடுதலை செய்ய நீங்கள்தான் உதவி செய்யவேண்டும். இதுவரை முக்கியமாக ஒன்றிரண்டு நபரை விசாரித்தேன். இன்ஸ்பெக்டரும் இந்த வழக்கு விஷயமாக மும்முரமாய் வேலைசெய்து வருவ

தாகத் தெரிகிறது. "விஷயம் முற்றி அவருக்குத் தண்டனை கிடைப்பதற்கு முன்பு உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடித்துப் போலீஸ்வசம் ஒப்படைத்தாக வேண்டும். அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் என்னால் உயிர்வாழ முடியாது" என்று கூறிய வண்ணம் புடவை முந்தாணியினால் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"இங்கிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் மலைக்குகை ஒன்று இருக்கிறது, அதில் கொள்ளைக்காரர்கள் சிலர் மறைந்து வாழ்ந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். அவர்களில் யாராவது ஏன் இதைச் செய்திருக்கக்கூடாது?" என்று கேட்டார் ரங்கராஜன்.

"வெளித்தோற்றத்திற்குக் கொள்ளையடிக்கப்பட்டதுபோல் காணப்படுகிறதே தவிர, அது ஒரு மர்மக்கொலைதான் என்று போலீசார் கண்டுபிடித்து விட்டார்களே! ஆகவே, இது ஒரு மர்மக்கொலை என்பதில் சந்தேகம் இல்லை. அதனால்தான் இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன."

"ஜானகிராமனை நீங்கள் எவ்வாறு நிரபராதி என்று நினைக்கிறீர்கள்? அவன் இந்தக் கொலையைச் செய்துவிட்டு ஒன்றுமறியாதவன்போல் ஏன் உங்களிடம் கபட நாடகமாடியிருக்கக்கூடாது?"

"அப்படிச் சொல்லாதீர்கள். ஒருகாலும் அவர் கொலை செய்திருக்கமாட்டார். அவருக்கு அத்தனை துணிவு இருந்திருந்தால் என்னை அவர் என்றோ மணந்து கொண்டிருப்பார். மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டவர். எந்தக் காரியத்தையும் சிந்தித்துப் பார்த்துச் செய்யக்கூடியவர், மற்றவர்களைவிட அவரைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியும். அதனால்தான் அவரை விடுதலை செய்ய இத்தனை பாடுபடுகின்றேன்."

"உங்களுடைய துணிவும் பிடிவாதமும் அஞ்சா நெஞ்சமும் பாராட்டத்தக்கதுதான். ஆனால் சரியான ஆதாரம் இல்லாமல் ஜானகிராமனை, நிரபராதி என்று நிச்சயித்து விட்டதுதான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது, ஜானகிராமன்தான் அவரைக் கடைசியாக உயிருடன் பார்த்திருக்கிறான். பொறுப்பற்ற வாழ்க்கையை நடத்திவந்ததினால் கடன் ஏற்பட்டிருக்கிறது. பணநெருக்கடியிலிருந்து சமாளிக்கக் காப்டனைக் காணச் சென்றிருக்கிறான். அவர் பணம் கொடுக்க மறுத்து அவனை விரட்டி விட்டிருக்கிறார். ஏமாற்றத்தினாலும் கடுஞ்சொற்களினாலும் அவன் வெகுண்டு எழுந்து காப்டனின் அறையிலிருந்து கண்டெடுத்த

மனல் பையினுல் அவருடைய மண்டையைப் பிளந்து விட்டு ஓடி வந்திருக்கலாமல்லவா ?" என்ற பிரச்னையைக் கிளப்பிவிட்டு விட்டார் ரங்கராஜன். தன் காதலனின்மீது வீண்பழி சுமத்த மூயலும் அவர்மீது பிரேமாவிற்கு ஆத்திரம் பொங்கி வந்தது. ஆயினும் அதை அடக்கிக்கொண்டாள்.

"காப்டனுக்கும் ஜானகிராமனுக்கும் நடந்த வாக்கு வாதத்தை யாராவது மறைந்திருந்து கேட்டுக் கொண்டி ருந்துவிட்டு அவர் வெளியேறிய பிறகு காப்டனை ஏன் அடித்துக் கொன்றிருக்கக்கூடாது?" என்றுள் அவள்.

"அப்படியே வைத்துக்கொள்வோம்; ஆனல் வேறு ஓர் ஆசாமி குற்றவாளியாக இருந்தால் அதற்குச் சரியான காரணம் விளங்கவில்லையே?" என்றூர் அவர்.

"குற்றவாளி, காப்டனுக்கு நெருங்கிய ஆசாமியாக இருக்க வேண்டும். காப்டனுக்கும் அவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்ட போது அவன் மூல்லைவில்லாவினுள் இருந்திருக்கவேண்டும். அல்லது வெளியேயிருந்து அவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் 'மூல்லைவில்லா' வேலைக்காரன்தான் குற்றவாளி என்று கொள்ள வேண்டும். ஆனல் காப்டன் கொலை செய்யப்பட்ட சமயத்தில், அவன் மூல்லைவில்லாவில் இல்லாததினுல் அவனைச் சந்தேகிப் பதிலும் பலன் இல்லை. மேலும் அவனுக்குத் தன் எஜமானரைக் கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லையே! அதுசரி, காப்டன் கொலையுண்ட தினத்தன்று நீங்களும், மேஜரும், தாமோதரன் என்பவரும் வேதவல்லியின் வீட்டில் விசித்திரப்பலகையை வைத்துக் கொண்டு வேடிக்கையாகப் பொழுதைக் கழித்து வந்ததாகத் தெரியவருகிறது. 'காப்டன் காலமானர்' என்று அது வெளிப் படுத்தியதாகவும் விளங்குகிறது. அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டாள் பிரேமா.

"நான் என்ன சொல்வது? நான் அப்பொழுது அங்கு இருந்தது உண்மை. மேஜர் வேதவல்லியைப் பார்க்க வந்ததும் உண்மை! அப்பொழுது அந்த அதிசயச் செய்தி வெளிப்பட்ட தும் உண்மை! இவ்வளவு இருந்தும் என்னல் அதை நம்ப முடியவில்லை. அதில் ஏதோ மர்மம் இருப்பதாகவே நான் எண்ணுகிறேன்" என்றூர் ரங்கராஜன். எவ்வளவு ஆலோசித் துப் பார்த்தும் மீண்டும் இருவரும் பேச்சு ஆரம்பித்த இடத் திற்கே வந்து சேர்ந்தனர்.

ஆனால், ரங்கராஜனுடன் பேசியதிலிருந்து இது வரையில் தனக்குத் தெரியாத ஆசாமி ஒருவன் அந்த வழக்கில் மறைந் திருக்கிறான் என்பது மட்டும் நன்கு விளங்கியது அவளுக்கு.

சற்றுநேரம் நிம்மதியாக இருக்கவேண்டும் என்று தான் பிரேமா அந்த வட்டாரத்திற்கு வந்தாள். ஆனால் அவள் எதிர் பார்த்த அமைதி அங்கு கிடைக்கவில்லை. ஆகவே ரங்கராஜ னிடம் விடைபெற்றுக் கொண்டு 'நீலவானம்' ஓட்டலுக்கு விரைந்தாள் அவள்.

ஜானகிராமனின் வீடுதேடிக்கார பிரேமா பெரு முயற்சி செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் சந்திரசேகரனும் காப்டனின் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணையில் ஆழ்ந்திருந்தான். காப்டன் பெண்களை வெறுத்து வந்திருக்கிறார். அதற்கு எந்தவிதமான காரணமும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆண்களில் சிலர் வைராக்கியமும் திடசித்தமும் கொண்டவர்களாக இருக்கலாம். பெண்களை மனத்தில் நினைக்காமல்கூட இருந்திருக்கலாம். ஆனால் ஒருவராலும் வாழ்க்கை முழுவதும் அப்படியிருந்திருக்க முடியாது. அப்படியே வைத்துக் கொண்டாலும் அதற்காக அவர்கள் பெண்களை வெறுக்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

காப்டன் கந்தசாமி ராணுவத்தில் வேலை பார்த்தவர். பெரிய செல்வந்தர். ஆனால் பிடிவாதக் குணமும் கருமித்தனமும் நிறைந்தவர். அத்துடன் பெண்களின் மீதும் வெறுப்புக் கொண்டவர். அத்தகைய ஒருவர் திடீரென்று ஒரு நாள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்! தன்னைக் கொலை செய்யுமளவிற்கு அவர் ஒருவரையும் விரோதித்துக் கொள்ளவில்லை! ஆனால் கொலை செய்யப்பட்ட தினத்தன்று மிகுந்த பண நெருக்கடியில் சிக்கியிருந்த ஜானகிராமன் அவரைப் பார்த்து பண உதவி கேட்டு ஏமாற்றமடைந்து சென்றிருக்கிறான். அவன் ஏன் அவரைக் கொலை செய்திருக்கக்கூடாது என்ற சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணம் இருக்கிறது. அவன் பணத்திற்காகத்தான் அவரைக் கொலை செய்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் காப்டனைக் கொலை செய்ததுடன் அவரிடமிருந்து பணத்தைக் களவாடிக் கொண்டு மறைந்திருப்பான். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை! அதற்குப் பதில் எக்கச்சக்கமாகப் பேசிக் கைதாகியிருக்கிறான். ஆனால் அவருடைய மேஜைடிராயர் திறக்கப்பட்டிருந்ததாகவும் காகிதங்களும் மற்றும் சில பொருள்களும் தரையில் சிதறிக் கிடந்ததாகவும் தெரியவருகிறது! காப்டனுக்கும் ஜானகிராமனுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தைப் பயன்படுத்திக் கொண்டு வேறு யாராவது ஏன் இந்தக் கொலையைச் செய்திருக்கக்கூடாது?

வேதவல்லியின் வாழ்க்கையில் ஏதோ சில மர்மங்கள் மறைந்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. அவள் கலியாணமானவள். ஆனால் அவள் கணவனைப் பகைத்துக்கொண்டு ஆனந்தநிலையத்திற்கு வந்திருக்கிறாள்! அவள் ஏன் குறிப்பாகச் சோலைமலை வட்டாரத்திற்கு

வர வேண்டும்? அதிலும் காப்டனுக்குச் சொந்தமான வீட்டில் ஏன் குடியேறவேண்டும்? கணவனை விரோதித்துக் கொண்டு ஆனந்தநிலையத்திற்குக் குடியேறியதற்கும் காப்டனின் துர்மரணத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா? சந்திரசேகரன் நேராக ஆனந்தநிலையத்திற்குச் சென்று வேதவல்லியை விசாரித்தான். ஏற்கனவே இன்ஸ்பெக்டர் கூறிய விஷயங்களைத்தான் அவனிடம் மீண்டும் தெரிவித்தாள் அவள். இவ்வாறு அடிக்கடி யாராவது காப்டனின் கொலை விஷயமாகத் தன்னை விசாரிக்க வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் தன்னை எங்கே குற்றவாளி என்று சொல்லிவிடப் போகிறார்களோ என்ற பயம் அவளுக்கு ஏற்படாமல் இல்லை!

வேதவல்லியை விசாரித்தபிறகு ஏற்கனவே அவள்மீதிருந்த சந்தேகம் சற்று அதிகமாகியது. அத்துடன் ஜானகிராமனைப் பற்றிப் பேச்செடுக்கும்போதும் அவனுடைய சகோதரன் சகோதரியைப்பற்றிப் பேசும்போதும் வனஜாவின் முகத்தோற்றம் மாறுவதும் சந்திரசேகரனுக்கு வியப்பைக் கொடுத்தது. அத்துடன் வனஜா பேசிய விதத்திலிருந்து அன்று இரவு ஏதோ ஒரு சம்பவம் நடக்கப்போகிறது என்பதை ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டான் அவன்.

பிரேமா நீலவானம் ஓட்டலுக்கு வந்து சேருவதற்கு முன்பு திரும்பி வந்து விட்டான் சந்திரசேகரன். ஆகவே அவன் பிரேமாவிடம் வேதவல்லியின் மூலம் அறிந்த விஷயங்களை அவளிடம் சொல்லவில்லை. ஆனால் பிரேமா, ரங்கராஜனைச் சந்தித்துப் பேசியது பற்றியும், அவன்மூலம் அறிந்த விஷயங்களையும் விளக்கிவிட்டு, "ஜானகிராமன் காப்டனைப் பார்த்துப் பேசியதை எவனோ ஒருவன் மறைந்து கவனித்துக் கொண்டிருக்கிறான். அவன்தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காப்டனைக் கொலைசெய்திருக்கிறான். அவன் யார் என்று கண்டுபிடித்துவிட்டால் ஜானகிராமனுக்கு விடுதலை கிடைத்து விடும். ஆனால் எவ்வளவு முயன்றாலும் எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லையே" என்று குறைபட்டுக்கொண்டான்.

"இதுவரை ஜானகிராமன் காப்டனைப் பேட்டி கண்ட பிறகு யார் வந்திருக்க முடியும் என்றுதான் ஆராய்ந்து கொண்டிருந்தோம், அதற்கு முன்பே குற்றவாளி முல்லைவில்லாவிற்கு வந்திருந்தால்...?" என்று புதிய பிரச்னையைக் கிளப்பி விட்டான் சந்திரசேகரன்.

"குற்றவாளி முன்பே வந்திருந்தால் காப்டனைக் கொலை செய்துவிட்டு மறைந்திருப்பான். அவ்வாறு இருந்தால் ஜானகி

ராமன் எவ்வாறு காப்டனைப் பேட்டி கண்டு பேசி யிருக்க முடியும்?" என்று அந்த சந்தேகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள் பிரேமா.

அதே பிரச்னைதான் பகல்பொழுதெல்லாம் அவர்களின் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. அன்று இரவு பிரேமா விற்குத் தெரியாமல் ஆனந்தநிலையத்திற்குச் சென்று உளவறிய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான் சந்திரசேகரன். அன்று இரவு எட்டு மணி சுமாருக்கு ஆனந்த நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தான் அவன். அந்த வட்டாரத்தில் நிலவியிருந்த நிசப்தமும் அமைதியும் அவனுக்கு அச்சத்தைக் கொடுத்தன. இருட்டிய பிறகு இந்த வட்டாரத்தில் பேய் பிசாசுகள் நடமாடும் போலிருக்கிறதே! எப்படித்தான் இந்த இரண்டு பெண்மணிகளும் இங்கு தனியாக வசிக்கிறார்களோ?' என்று வியந்தான் அவன். சரியாக இரவு எட்டு மணிக்கு ஆனந்த நிலையத்தின் உட்புறத் தாழ்ப்பாள் மெல்லத் திறக்கப்படும் ஒலி கேட்டது. சந்திரசேகரன் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறுக வனஜா கரத்தில் ஒரு டார்ச் விளக்கைப் பற்றியவண்ணம் அவ்வீட்டை விட்டு வெளியே வந்தாள்! காப்டனின் கொலை வழக்கில் அவள் சம்பந்தப்பட்டிருப்பாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு. ஆகவே மிகுந்த ஆர்வத்துடன் மறைந்திருந்து அவளுடைய நடவடிக்கைகளைக் கவனித்தான் சந்திரசேகரன். சுமார் பத்து நிமிட நேரங்களுக்குப் பிறகு தோட்டத்திலிருந்து யாரோ சீட்டியடிப்பது போன்ற ஒலி கேட்டது. அவ்வொலி வந்த திசையின் பக்கம் பரபரப்புடன் நடந்தாள் வனஜா. மறைந்திருந்த சேகரன் தலையை வெளியே நீட்டி நன்கு கவனித்தான். சற்றுத் தூரத்திலிருந்த செடி மறைவிலிருந்து சட்டென்று ஓர் உருவம் வெளிப்பட்டது. நாகரிக உடைகளை அணிந்து கொண்டிருந்தான் அந்த வாலிபன், ஆனால் வெண்திரை தொங்கியதுபோல் காணப்பட்ட பனிப் படலம் அவனுடைய முகத்தைச் சரியாகப் பார்க்க முடியாதபடி மறைத்துக் கொண்டிருந்தது. இன்னும் அருகில் நெருங்கினால்தான் அவனைப் பார்க்க முடியும் போலிருந்தது. ஆகவே, வலது பக்கமாக அடி எடுத்து வைத்தான் அவன். மறுகணம் தரையில் சரிந்திருந்த மரக்கிளை இடறியது. நிலை தடுமாறிக் கீழே விழுந்து விட்டான் அவன். அதனால் எழுந்த ஒலி அவ்வாலிபனிடம் பரபரப்பை உண்டாக்கி விட்டது. யாரோ மறைந்திருந்து தங்களைக் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து விட்டான் போலும்!

"என்ன சப்தம்? யார் அங்கே இருப்பது?" என்று கேட்டவண்ணம் விரைந்து வந்தான் அவ் வாலிபன். சந்திரசேகரன்

சமாளித்துக் கொண்டு எழுந்து ஓட ஆரம்பித்தான். ஆனால் அந்த இளைஞன் குபீரென்று அவன்மீது பாய்ந்து அவனைப் பலமாகப் பற்றி இழுத்து வந்தான்.

"வனஜா, விளக்கைப் போடு! இவன் யாரென்று பார்க்க வேண்டும்" என்றான். வனஜா கரத்திலிருந்த டார்ச் விளக்கைப் பொறுத்தினாள். அந்த விளக்கொளி சந்திரசேகரனின் முகத்தில் வீசி அவனுடைய கண்களைக் கூசும்படி செய்தது.

"இவர் 'தினசரி' பத்திரிகையின் நிருபராயிற்றே! இவரை எனக்கு நன்றாய்த் தெரியுமே!" என்று கூறிய வண்ணம் வியப்புக் கலந்த விழிகளினால் அவனைப் பார்த்தாள் வனஜா.

பிறகுதான் அந்த வாலிபனிடம் ஏற்பட்டிருந்த பரபரப்பு அடங்கியது.

"ஓ! பத்திரிகை நிருபரா? பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. அது சரி, உங்கள் பெயர் என்ன?" என்று அதிகார தோரணையில் கேட்டான் அவன்.

"சந்திரசேகரன். 'சேரன்' என்ற புனை பெயரில் எழுதி வருகிறேன்."

"உங்களுக்கு இந்த நேரத்தில் இங்கு என்ன வேலை?"

"காட்டனின் கொலை வழக்கு சம்பந்தமாக வேதவல்லியை விசாரிக்க வந்தேன். உங்கள் இருவரின் உருவமும் எனக்குச் சந்தேகத்தை விளைவித்தன..."

"அதனால் எங்களைத் துப்பறியத் தீர்மானித்து விட்டீர்கள் போலிருக்கிறது! உங்களுடைய சாமர்த்தியமெல்லாம் எழுத்தில் தான் இருக்கமுடியும். செய்கையில் காட்ட முடியாது."

"ஜானகிராமன் என்ற நிரபராதி ஒருவனைப் போலீசார் கைது செய்திருக்கிறார்கள். உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடித்து அவனுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கத்தான் இத்தனை பாடுபடுகிறேன்."

"என்ன! ஜானகிராமன் கைது செய்யப்பட்டிருக்கிறானா? எனக்கு ஒன்றும் தெரியாதே!" என்று அதிர்ச்சி அடைந்த குரலில் கேட்டான் அவன்.

"ஆமாம்! அதைப்பற்றிக் கூறுவதற்காகத்தான் உங்களைச் சந்திக்க இத்தனை ஆவலுடன் காத்திருந்தேன். அந்த

அபகீர்த்தி நம்முடைய இன்ப வாழ்வைக் குலைத்துவிடும் போலிருக்கிறது. அவர் விடுதலை அடைந்தால் தான் நாம் மணம் செய்து கொள்ள முடியும். உலகவாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியாது" என்று கூறினாள் வனஜா.

"மிஸ்டர் சேரன், காப்டன் கொலை செய்யப்பட்ட செய்திதான் எனக்குத் தெரியும். ஆனால் என் சகோதரனைக் கைது செய்த விஷயம் இதுவரை என் காதில் விழவில்லை. அவன் நேர்மையானவன். ஒழுக்கமுள்ளவன். அவ்வாறு அவன் ஒருபோதும் செய்திருக்கமாட்டான்" என்று அனுதாபம் நிரம்பிய குரலில் பேசினாள் அவள்.

அந்த வாலிபன்தான் சென்னையில் வசித்துவந்த ஜானகி ராமனின் சகோதரன் பாலன் என்பது விளங்கிவிட்டது.

"கவலைப்படாதீர்கள் மிஸ்டர் பாலன்! உங்களைப்பற்றி எனக்குத் தெரியும். ஜானகிராமனின் குணங்களைப்பற்றியும் நான் அறிவேன். நானும் உங்கள் சகோதரனை மனப்பூர்வ மாய் நேசித்து வரும் பிரேமாவும் ஜானகிராமனின் விடுதலைக் காகப் பெரும்பாடுபடுகிறோம். எனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களைப் போக்கினால் கண்டிப்பாக நமக்கு வெற்றி கிடைக்கும்" என்றாள் சேரன். பாலன் அவனுடன் பரிபூரண மாக ஒத்துழைக்கச் சம்மதித்தான். இருவரையும் அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள் வனஜா.

மறுநாள்; போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் நாக லிங்கம் காப்டனின் கொலைவழக்கு சம்பந்தமான ஆலோசனை யில் ஆழ்ந்து போய்க் கிடந்தார். அதுவரை அவர் விசாரித்துச் சேகரித்து வைத்திருந்த விஷயங்களின் குறிப்புகள் அடங்கிய டைரி அவருக்கு முன்னாலிருந்த மேஜையின் மீது விரிந்து கிடந்தது. காப்டனின் உடலைப் பரிசோதனை செய்த டாக்டரின் ரிபோர்டும் அதற்குப் பக்கத்தில் இருந்தது. மற்றொரு பக்கத் தில் மூல்லைவில்லாவையும் அதைச் சுற்றியிருந்த இடங்களிலும் எடுக்கப்பட்ட போட்டோக்கள் அடங்கிய ஆல்பம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. இன்ஸ்பெக்டர் அந்த ஆல்பத்தை எடுத்துப் புரட்டிய வண்ணம் இருந்தார். மூன்றாவது பக்கத் தில் இருந்த போட்டோ தான் அவருடைய கவனத்தை வெகு வாகக் கவர்ந்தது. பூதக் கண்ணாடியின் மூலம் அந்தப் போட்டோவை நன்கு கவனித்தார் அவர். மூல்லைவில்லா வில் சிதறியிருந்த ஜன்னலின் பக்கமாக வெளிப்புறம் இருந்த புழுதிப் பாதையில் காணப்பட்ட பூட்ஸ்களின் அடையாளங் கள்தான் அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. ஆரம்பத்தில் அதை அவர் பொருட்டாக எண்ணவில்லை. அந்த பூட்ஸ் அடையாளங்கள் அன்று ஏற்பட்டதாக இருக்கலாம்; அதற்கு முன்னால் ஏற்பட்டதாகவும் இருக்கலாம் என்று அலட்சியமாக இருந்து விட்டார் அவர். ஆனால் காப்டனின் கொலை வழக்கில் இவ்வளவு சிக்கல்கள் ஏற்பட்டபிறகு அந்தக் காலடி அடை யாளங்களைக் கவனிக்க வேண்டியது முக்கியமாகத் தோன்றியது அவருக்கு! குற்றவாளிகள் எவ்வளவுதான் முன்னெச்சரிக்கை யுடன் தந்திரமாகக் குற்றங்கள் செய்த போதிலும் ஏதாவது சிறியதவறு செய்து அகப்பட்டுக் கொண்டுவிடுவது இயற்கை யல்லவா?

அந்தப் போட்டோவில் தெரிந்த பூட்ஸ்களின் அடை யாளங்களை உன்னிப்பாகக் கவனித்தார், சதுரங்க அட்டையில் காணப்படும் கட்டங்களைப் போன்று சதுரங்களின் குறிகள் அதில் தென்பட்டன. குற்றவாளி, அடிப்பாகத்தில் அவ்வித அடையாளம் கொண்ட பூட்ஸை அணிந்திருக்க வேண்டும் என்று அவருக்கு விளங்கிவிட்டது. ஆனால் யார் அவ்வித பூட்ஸை அணிந்திருக்கக்கூடும் என்ற கேள்விதான் அப்பொழுது அவருடைய மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது. இன்ஸ் பெக்டருக்குப் பக்கத்தில் பணிவுடன் நின்று கொண் டிருந்த கான்ஸ்டேபிள் காளிரத்னம், முகமாறுதலி லிருந்து அவருடைய உள்ளத்தை உணர்ந்து கொள்ளப்

பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் தன்னைத் துப்பறிய உடன் அழைத்துச் செல்ல வில்லையே, தன்னுடைய ஒத்துழைப்பை உதாசீனம் செய்து வருகிறாரே என்ற மனத் தாங்கல் கொண்டிருந்த அவனுக்கு 'பளிச்' என்று ஏதாவது ஒரு யோசனை கூறி நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

"காப்டனின் கொலைவழக்கின் போக்கு அத்தனை திருப்தி கரமாக இல்லை. ஜானகிராமன் குற்றவாளியாக இருப்பான் என்று தோன்றவில்லை" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம் சார்! நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். ஆரம்பத்தில் இந்த வழக்கின் போக்கு ஒருமாதிரியாக இருந்தது. இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டது" என்று அவருடைய யோசனையை ஆமோதித்தான் காளிரத்னம்.

"ஜானகிராமனைக் கைது செய்து விட்டோனே தவிர, அவனைக் குற்றவாளியாக்க சரியான ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பாலன் வந்து சேர்ந்து விட்டான்!"

"பாலனா? அவன் அவரைக் கொலை செய்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?"

"நேற்று இரவு அவன் திடீரென்று இந்த ஊருக்கு வந்து சேர்ந்திருக்கிறான். அவன் வனஜாவை நேசித்து வருவதாகவும் தெரிகிறது. கொஞ்சநேரத்திற்கு முன்புதான் சந்திரசேகரன் அந்த விஷயத்தை எனக்குத் தெரியப்படுத்தினான். ஆனந்த வில்லாவிற்குப்போய் விசாரித்துவிட்டு வந்தேன். காப்டன் கொலையுண்ட தினத்தன்று அவன் இந்த ஊரில்தான் இருந் திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் அவன் வனஜாவை நேசித்து வருவதாகவும் தெரியவருகிறது. அவன் தன்னுடைய நடவடிக்கைகளைப்பற்றித் திருப்திகரமாகப் பதில் சொல்ல மறுக்கிறான். ஒருவருடைய கண்ணிலும் படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இரவு வேளையில் அவன் வனஜாவைத் தனிமையில் சந்தித்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தான். முதல் முறை நான் வேதவல்லியின் வீட்டிற்குச் சென்றபோது ஜானகிராமனின் பெயரை எடுத்த போது அதனால்தான் அவள் அவ்வாறு பம்மி இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. நேற்று இரவுதான் தன் சகோதரன் கைது செய்யப்பட்டிருப்பது அவனுக்குத் தெரிந்திருக்கிறது.

அத்துடன் சந்திரசேகரனும் அவனை யாரென்று கண்டுபிடித்து விட்டான். அதனால்தான் அவன் அவ்வளவு துணிவுடன் வேதவல்லியின் வீட்டில் வசித்துவருகிறான். இந்த நிலையில் இப்பொழுது இந்தக் காலடி அடையாளங்கள் என்னுடைய மூளையைக் குழப்ப ஆரம்பித்து இருக்கின்றன" என்று சற்று ஏமாற்றம் கலந்த குரலில் உரைத்தார் அவர்.

"ஒருவன் பிடிவாதமாக இருப்பதினால் அவனை விட்டுவிட முடியுமா? உருட்டி மிரட்டிக் கேட்டால் உண்மையைக் கக்கி விடுகிறான்!"

"அதையும் செய்து பார்த்துவிட்டேன். காப்டனின் கொலைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறுகிறானே தவிர, காப்டன் கொலையுண்டதாகக் கருதும் சமயத்தில் அவன் எங்கு இருந்தான், என்ன செய்தான் என்பவைகளைச் சொல்ல மறுக்கிறான். அத்தனை சுலபத்தில் அவனிடமிருந்து உண்மை களை வரவழைக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. அத்துடன் அவசரப்பட்டால் அவன் தப்பித்துக் கொண்டு விடலாம் என்ற பயமும் இருக்கிறது. அதனால்தான் நிதான மாக இருந்து உண்மைகளைக் கண்டு பிடிக்கத் தீர்மானித் திருக்கிறேன்."

"இப்பொழுது நம் நிலைமை முன்னைவிட சற்று அதிக மாகமுன்னேறியிருக்கிறது. இந்தப் போட்டோவில் காணப்படும் பூட்ஸ் குற்றவாளியினுடையதுதான் என்று நீங்கள் தீர்மானித்து இருப்பதினால் நாம் சந்தேகிக்கும் ஆசாமிகள் அணியும் பூட்ஸ் களைப் பரிசோதனை செய்துபார்த்தால் உண்மை விளங்கி விடுகிறது."

"அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. குற்றவாளி மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும், தகுந்த முன்னேற்பாட்டு டனும் இந்தக் கொலையைச் செய்திருக்கிறான். ஆகவே, அவன் கண்டிப்பாக இந்த பூட்ஸை எங்காவது மறைத்து வைத்திருப் பான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எப்படியும் அதைக் கண்டுபிடித்து விடலாம் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது."

"அந்த பூட்ஸைக் கண்டுபிடித்துவிட்டால் குற்றவாளி யாரென்பது விளங்கிவிடும். ஆனால் நீங்கள் கூறியதுபோல் குற்றவாளி புத்தி கூர்மையுள்ளவனாக இருந்திருந்தால் இந்த விஷயத்தில் அஜாக்கிரதையாக நடந்து கொள்ளமாட்டான். முதலில் அவன் அந்த பூட்ஸ்களைத் தன் வீட்டில் வைத்திருக்க

மாட்டான். அதற்குப் பதிலாக அவைகளை காப்டனின் வீட்டிலேயே எங்காவது மறைத்து வைத்துவிட்டுப் போயிருக்கலாம். அப்பொழுதுதானே அவைகள் காப்டனின் பூட்ஸ்கள் என்று எண்ணிக் கொண்டு அவைகளைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளாமல் இருந்து விடுவோம்" என்று கூறிவிட்டு ஒருவித வெற்றிப் பார்வையில் அவரைப் பார்த்தான் காளிரத்னம்.

"சபாஷ்! இந்த யோசனை வரவேற்கத் தக்கது தான். இன்னொரு முறை முல்லைவில்லாவைச் சோதனை போட்டுப் பார்த்து விட்டால் அந்த சந்தேகமும் நீங்கிவிடுகிறது" என்று கூறிவிட்டு எழுந்தார். காளிரத்னம் பூட்ஸின் அடையாளங்கள் பதிந்த போட்டோவை எடுத்துக் கொண்டு உற்சாகத்துடன் இன்ஸ்பெக்டருடன் புறப்பட்டான். முல்லைவில்லா வக்கீல் லோகநாதனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபடியால் அவரிடமிருந்து சாவியை வாங்கிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார் இன்ஸ்பெக்டர். கொலை நடந்த சமயத்தில் பார்த்தபடிதான் இருந்தது அந்த வீடு. முன்னைவிட மும்முரமாக அவ்வீட்டைச் சோதனை போட்டார் இன்ஸ்பெக்டர். அதிகமான அபிவிருத்தி ஒன்றும் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் மெல்ல மெல்லக் குளர ஆரம்பித்து விட்டது. இன்ஸ்பெக்டரைவிட காளிரத்னம்தான் மும்முரமாகப் பரிசோதனை செய்து கொண்டிருந்தான். தான் எதிர்பார்த்தபடி குற்றவாளியின் பூட்ஸ்கள் அங்கு கிடைத்துவிட்டால்.....? என்ன ஆச்சரியம்? கடைசியில் அவன் நினைத்தபடி நடந்து விட்டதே! காப்டனின் படுக்கை அறையில் ஒரு பக்கமாக இருந்த மரப்பெட்டி ஒன்றினுள் இதர தட்டுமுட்டுச் சாமான்களுடன் ஒரு ஜோடி பூட்ஸ்கள் திணிக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிசயித்துப் போனான் அவன்!

"வெற்றி சார்! மகத்தான வெற்றி!! குற்றவாளியின் பூட்ஸ்கள் கிடைத்து விட்டன. இனிமேல் காப்டனின் கொலை வழக்கு ஒரு முடிவிற்கு வந்த மாதிரிதான்" என்று உற்சாகத்துடன் கூறிய வண்ணம் அவ்விரண்டு பூட்ஸ்களுடன் ஓடி வந்தான் காளிரத்னம். இன்ஸ்பெக்டரின் முகம் மலர்ந்தது. அந்த பூட்ஸ்களை வாங்கிப் பின்னல் திரும்பிப் பார்த்தார். போட்டோவில் காணப்படும் அடையாளங்கள் அந்த பூட்ஸ்களினுல் ஏற்பட்டவைகள்தான் என்பது விளங்கிவிட்டது!

"குற்றவாளியைக் கண்டுபிடிக்கச் சரியான ஆதாரம் கிடைத்துவிட்டது. ஆனால் இது யாருடைய பூட்ஸ் என்றுதான் கண்டுபிடிக்க வேண்டும்! குற்றவாளிக்குக் காப்டனைப்பற்றியும்

அவருடைய நடவடிக்கைகளைப் பற்றியும் தெரிந்திருக்கவேண்டும் என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நாம் சந்தேகிக்கும் ஆசாமிகள் அனைவரும், காப்டனுக்கு வேண்டியவர்களாகத்தான் இருக்கிறார்கள்! இந்த நிலையில் யாரைக் குற்றவாளியாக்குவது? இந்த பூட்ஸைப்பற்றிக் கேட்டால் குற்றவாளி ஒப்புக் கொள்வானா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஏகாம்பரம் இந்த வீட்டில் சில வருடங்களாக வேலை பார்த்து வருகிறான். காப்டனின் நண்பர்களை அவனுக்குத் தெரிந்திருக்கும். இது யாருடைய பூட்ஸ் என்று அவனுக்குத் தெரிந்திருக்கலாமல்லவா?" என்று மற்றொரு யோசனையை வீசினான் காளிரத்னம். இன்ஸ்பெக்டருக்கு அது நல்ல யோசனை என்றே தோன்றியது. காளிரத்னத்தைப் பாராட்டி விட்டு அவனுடன் சற்றுத் தூரத்தில் இருந்த ஏகாம்பரத்தின் வீட்டிற்குச் சென்றார். இன்ஸ்பெக்டரைக் கண்டவுடன் அலறிப் புடைத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்தான் ஏகாம்பரம். தன் கரங்களிலிருந்த பூட்ஸ்களை அவனிடம் காண்பித்து, "இது உங்களுடைய எஜமானரின் பூட்ஸ்கள் தானே?" என்று கேட்டார். ஏகாம்பரம் அவைகளைக் கரத்தில் வாங்கி திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

"இல்லை, இது அவருடையது 'அல்ல" என்று அழுத்தம் திருத்தமாகப் பதிலுரைத்தான் அவன்.

"இதற்கு முன்பு இந்த பூட்ஸ்களை நீ பார்த்திருக்கிறாயா?"

"நன்றாகப் பார்த்திருக்கிறேன்."

"அப்படியா? இது யாருடையது?"

"மேஜர் பகதூர்சிங்குடைய பூட்ஸ்கள் இவை."

"என்ன! மேஜருடையதா?"

"ஆமாம்! நான்தான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இவைகளை அவருக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன்" என்றான் ஏகாம்பரம்.

இன்ஸ்பெக்டரும் காளிரத்னமும் திகைத்துப் போனார்கள்! அதிசயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இப்பொழுது யார் குற்றவாளி என்று புரிந்து விட்டது. இந்தச் சிறிய தவறுதான் மேஜரைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இனிமேல் நான் என் மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டிய

தில்லை" என்று வெற்றி நிரம்பிய குரலில் பேசினார் இன்ஸ் பெக்டர்.

"அன்று மேஜர்தானே இந்த வீட்டின் கதவைத் தட்டி காப்டனை எழுப்பமுயன்றார்?" என்று அதிசயத்துடன் கேட் டான் காளிரத்னம்.

"ஆமாம்! கதவைத் தட்டிய கைதான் காப்டனைக் கொலை செய்திருக்கிறது! குற்றவாளியைக் கைது செய்தால் நமக்கு ஏற்பட்டிருக்கும் அரைகுறைச் சந்தேகங்களும் நீங்கிவிடும்" என்று மகிழ்ச்சி பொங்கும் குரலில் பதிலுரைத்தார் இன்ஸ் பெக்டர்.

* * *

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு நீலவானம் ஓட்டலில் ஆனந்தம் பொங்கி வழிய மூச்சு விடாமல் பேசிக்கொண்டிருந்தாள் பிரேமா.

"நான் மேஜரை அப்பொழுதே சந்தேகித்தேன். ஆனால் தகுந்த ஆதாரம் இல்லாததினால் குற்றத்தை நிரூபிக்கமுடிய வில்லை. இன்னும் ஒன்றிரண்டு நாட்கள் கழிந்திருந்தால் அந்தப் பூட்ஸ்களின் மூலம் நானே குற்றவாளியைக் கண்டு பிடித்து இருப்பேன். இப்பொழுது அந்தப் பெருமை கான்ஸ்டபிள் காளிரத்னத்திற்குப் போய்விட்டது" என்றாள் பிரேமா.

"அது சரி, காப்டன் கொலை செய்யப்பட்டதாகக் கருதப் படும் நேரத்தில் மேஜர், வேதவல்லியின் வீட்டில் இருந்ததாகத் தெரியவருகிறது. அவர் எப்படிக் காப்டனைக் கொலை செய்திருக்க முடியும்?" என்று கேட்டாள் பத்மாவதி.

"நான் ஒரு மணி நேரத்திற்கு முன்பு இன்ஸ்பெக்டரைக் காணப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது தான் அவர் மேஜரிடமிருந்து வாக்கு மூலம் வாங்கிக் கொண்டி ருந்தார். அதன் சாராம்சம் இதுதான். காப்டன் பெண் இனத்தை வெறுத்து வந்ததற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. அதுதான் அவருடைய உயிருக்கு உலைவைத்து விட்டது. மேஜர் ராணுவத்தில் உத்தியோகம் பார்த்து வந்த சமயத்தில் ஒருத்தியை மனமாற நேசித்தார். அவளை மணந்து கொள்ளவேண்டும் என்றும் எண்ணமிட்டார். அந்தப் பெண்ணை காப்டனுக்கும் அறிமுகப் படுத்திவைத்தார். காப்டனுக்கும் அம்மங்கையின் மீது ஒருவித அபிமானம் ஏற்பட்டது. அது விரைவில் அன்பாகமாறிக் காதலாகப் பரிமளித்தது. இதனால் மேஜருக்குக் காப்டனின்மீது பொறுமை எழுந்தது. அந்த

மங்கை இருவரிடமும் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தாளே தவிர ஒருவரையும் நேசிக்கவில்லை. காப்டனிடம் பணம் இருப்பது அவளுக்குத் தெரியவந்தது. அவரை விரும்புவதுபோல் நடித்து சகஜமாகப் பழகினாள். ஒரு நாள் மாறுசாவியினால் காப்டனின் இரும்புப் பெட்டியைத் திறந்து பெருஞ்செல்வத்துடன் மறைந்து விட்டாள். அதனால்தான் காப்டனுக்குப் பெண்களின்மீது வெறுப்பு ஏற்பட்டது. தான் நேசித்த மங்கையைத் தன்பக்கம் இழுத்துக்கொண்டதாக எண்ணிக் காப்டனின்மீது பகைமை கொண்டார் மேஜர். அந்த விரோதம் உள்ளுர வளர்ந்து கொண்டே வந்தது. ஏதாவது ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் அவரை ஒழித்துவிடவேண்டும் என்று எண்ணி அவருடன் சகஜமாகப் பழகி வந்தார். ராணுவத்திலிருந்து விடுபட்டு சோலைமலைக்கு வந்த பிறகும் மேஜர் காப்டனுடன் நெருங்கிப் பழகினார். அன்று அதாவது சென்றவார வெள்ளிக்கிழமையன்று காலையிலேயே 'தினசரி' அறிவுப் போட்டியில் பரிசு வந்திருப்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. எப்படியும் அந்தப் பணம் காப்டனுக்குப் போய்ச்சேர்ந்துவிடும்! தனக்கு வெறும் பெயரும் புகழும்தான் கிடைக்கும்!! அந்த சமயத்தில் மேஜர் மிகுந்த பணநெருக்கடியில் இருந்தார். அத்துடன் பழிவாங்கும் எண்ணமும் உச்சநிலையை அடைந்து கொண்டிருந்தது. அன்று மாலை காப்டனை எப்படியும் ஒழித்துக்கட்டிவிடுவது என்ற எண்ணத்துடன் சோலைமலைக்குப் புறப்பட்டார் மேஜர். கொலை விஷயம் வெளியானால் தன்மீது சந்தேகம் ஏற்படாமல் இருப்பதற்காகத் தான் வேதவல்லியின் வீட்டிற்குச் சென்றார். அங்கு நடந்த சம்பவம் அவருக்கு மிகவும் சாதகமாக இருந்தது. விசித்திரப் பலகையைத் தன் தந்திரத்திற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு வேண்டுமென்றுதான் 'காப்டன் காலமானார்' என்ற எழுத்துக்களை எழுதி அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தினார். உண்மையில் காப்டன் ஐந்தரை மணிக்கு இறக்கவில்லை. அவர் ஆறு மணி சுமாருக்குத் தான் கொலை செய்யப்பட்டார். விசித்திரப்பலகையின் செய்தியினால் கலவரமடைந்தவர்போல் கபட நாடகமாடிய அவர் நேராக முல்லைவில்லாவிற்கு வந்து சேர்ந்தார். வில்லாவின் வடது பக்கம் இருந்த கண்ணாடி ஜன்னலின் அருகில் சென்றார் அவர். அவ்வறையினுள் காப்டன் தன் சகோதரியின் மகனைக் கடிந்து கொண்டிருப்பது அவருடைய காதில் விழுந்தது. ஜானகிராமனின் பேட்டியும் அவருக்குச் சாதகமாகத்தான் இருந்தது. அவன் வெளியேறியவுடன் முன் புறம் வந்து கதவைத் தட்டினார் மேஜர். காப்டன் கதவைத் திறந்து மேஜரை உள்ளே வரவேற்றுத் தன் அறையின் பக்கம்


சென்றார். மேஜர் சற்றுத் தூரத்தில் கிடந்த நீளமான மணல் பையை எடுத்துக் காப்டனின் மண்டையில் ஓங்கி அடித்தார். 'ஐயோ' வென்று அலறிய வண்ணம் தரையில் விழுந்து மரண மடைந்தார் காப்டன். பழி தீர்த்து விட்டோம் என்ற எண்ணம் அவருக்குப் பரமதிருப்தியைக் கொடுத்தது. ஆனால் அடுத்த கணம் அச்சம் அவரை ஆட்டி வைக்க ஆரம்பித்து விட்டது. கொள்ளையடிக்க வந்தவன் எவனோ அவரைக் கொலை செய்து விட்டதாக எண்ணவேண்டும் என்பதற்காக மேஜை டிராயரில் இருந்த காகிதங்களையும் கடிதங்களையும் தரையில் எடுத்து வீசினார். அறையிலிருந்த இதர பொருள்களை இங்குமங்கும் சிதறச்செய்தார். கதவின்மீதும் மணல் பையின்மீதும் தெரிந்த கைரேகைகளைத் துடைத்தார். கண்ணாடி ஜன்னலையும் உடைத் தார். காலடி அடையாளங்களின் மூலம் தன்னைக் கண்டு பிடித்து விட்டபோகிறார்களே என்று தன்னுடைய இரண்டு பூட்ஸுகளை யும் கழற்றிக் காப்டனின் படுக்கை அறையில் இருந்த மரப்பெட்டி யினுள் திணித்துவிட்டு வெளியேறிவிட்டார். பிறகு குளிரி னாலும் பனியினாலும் பாதிக்கப்பட்டவர்போல் எட்டு மணி சுமாருக்கு மூல்லைவில்லாவிற்கு வந்து கபட நாடகமாடியிருக் கிறார். சீதோஷ்ணநிலைமை, சூழ்நிலை, சமய சந்தர்ப்பம் ஆகிய அனைத்தையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு சாமர்த்தியமாக இந்தக் கொலையைச் செய்த மேஜர், சிதறிய ஜன்னலின் அருகில் தெரிந்த காலடிகளைக் கவிக்க மறந்து விட்டார்! அந்தத் தவறுதான் கடைசியில் அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது! குற்றவாளிகள் என்றைக்கும் தப்பிக்க முடியாது. நிரபராதிகள் தண்டிக்கப்பட்டதும் இல்லை என்பது எவ்வளவு உண்மையாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்று பெருமை நிறைந்த குரலில் கூறி முடித்தாள் பிரேமா.

"இந்த விஷயங்கள் அனைத்தும் வெகு விரைவில் உங்கள் பத்திரிகையில் விவரமாக வெளியாகும் என்று எண்ணுகிறேன்" என்றாள் பத்மாவதி.

"இதை ஒரு கதையாக எழுதவேண்டும்போல் இருக்கிறது எனக்கு. ஆனால் கேஸ் முடியும் வரையில் இவைகளை வெளியிடப் போவீசார் அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு முன்னால் இரண்டு முக்கிய கலியாணங்களைப் பற்றிய செய்திகள் வெளி வந்துவிடும். ஒன்று வனஜா, பாலன் திருமணம். மற்றொன்று பிரேமா, ஜானகிராமன்..." என்று சந்திரசேகரன் சரியாகக் கூறுவதற்கு முன்பே பத்மாவதி குபீரென்று சிரித்துவிட்டாள். சேகரனின் குறும்புப் பேச்சையும் பத்மாவதியின் விஷமச்சிரிப்

பையும் அவ்வளவாக பீரேமா அப்பொழுது பொருட்படுத்த வில்லை. ஏனென்றால், மெல்ல எழுந்த மோட்டார் காரின் ஒலி அவளுடைய கவனத்தை இழுத்துக் கொண்டிருந்தது. அவள் எதிர்பார்த்ததுபோல் அந்த ஒலி அதிகமாகியது. வெகுவிரைவில் ஓர் அழகிய டாக்ஸி நீலவானம் ஒட்டலின் வாசலில் வந்து நின்றது. ஹாலிலிருந்தவாறே அவ்வண்டியில் வந்திருப்பது யாரென்று பீரேமாவிற்குப் புரிந்துவிட்டது. இருதயத்திலிருந்து இன்பம் பொங்கி எழ, உணர்ச்சி வெள்ளம் உந்தித்தள்ள நிரபராதி என்று விடுதலை அடைந்து வந்திருக்கும் தன் காதலனை வரவேற்க மானைப்போல் துள்ளி வாசலுக்கு விரைந்து சென்றாள் பீரேமா.

முற்றும்



Printed at Sri Rajah Power Press, Madras-14.

லிப்கோ தமிழ்ச் சிறு நூல்

சுவை மிக்க தமிழ்ப் பெரு நூல்களின் சுருக்கங்கள் [கையட

ஒவ்வொன்றின் விலை 4 அணா

1. வள்ளுவர் வாய்மொழி (திருக் குறள் மூலம்)
2. பொய்யாமொழிக்குப் பொழிப் புரை (திருக்குறள் தெளிவு)
3. வள்ளுவர் வகுத்த வழி (குறள் விளக்கம்)
4. வள்ளுவர் காட்டிய ஏர்
5. வள்ளுவர் கண்ட காதலர்
6. வள்ளுவர் காட்டிய இல்லறம்
7. நாலடியார் (மூலம்)
8. நாலடியார் (தெளிவுரை)
9. பிற்கால நீதி நூல்கள்
10. கடையெழு வள்ளல்கள்
11. இலக்கியச் சோலையிலே
12. பாரதியும் பைந்தமிழும்
13. வருக! வாழ்க! (அழைப்பும், வாழ்த்தும்)
14. சிலப்பதிகாரம்
15. சிலப்பதிகாரப் பெண்டிர்
16. மணிமேகலை
17. சீவக சிந்தாமணி
18. நளவெண்பா (மூலம்)
19. நளவெண்பா (சுருக்கம்)
20. அரிச்சந்திர புராணம்
21. குசேலோபாக்கியானம்
22. பன்னிரு ஆழ்வார்கள்
23. சூடிக்கொடுத்த சுடர்க் கொடி
24. திருவிளையாடற் புராணம்
25. பெரிய புராணம்
26. திருஞானசம்பந்தர்
27. திருநாவுக்கரசர்
28. சுந்தரர்
29. மாணிக்கவாசகர்
30. கம்பரது பால காண்டம்
31. கம்பரது அயோத்தியா காண்டம்
32. கம்பரது ஆரணிய காண்டம்
33. கம்பரது கிஷ்கிந்தா காண்டம்
34. கம்பரது சுந்தர கா
35. கம்பரது யுத்த கா பகுதி)
36. கம்பரது யுத்த கா பகுதி)
37. வில்லிபுத்தூராரின் ஆ
38. வில்லிபுத்தூராரின் ணிய பருவம்
39. வில்லிபுத்தூராரின் விர தியோக பருவம்
40. வில்லிபுத்தூராரின் வீட வம்
41. வில்லிபுத்தூராரின் ட போர்
42. சில தனிப்பாடற் காட்
43. கந்த புராணம் (முற்ப
44. கந்த புராணம் (பிற்பகுதி)
45. குமரேச சதகம் (மூலமு புரையும்)
46. வக்ரையாபதி
47. குண்டலகேசி
48. நந்தனார்
49 பட்டினத்து அடிகள்
50. தாயுமான அடிகள்
51. இராமலிங்க அடிகள்
52. தசாவதாரம்
53. கம்பன் கண்ட பிரகலா
54. தெய்வத் திருமணங்கள்
55. பழந்தமிழ்க் காதல் க
56. தோத்திரத் திருப்புக
57. சுகர் சொன்ன கதை வதம்) — பாகம் 1
58. சுகர் சொன்ன கதை வதம்) — பாகம் 2
59. சுகர் சொன்ன கதை வதம்) — பாகம் 3
60. பாரதியார் பாடல்க பொறுக்குமணிகள்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17 ; எம். தாமோதரம் & அப்பா பில்டிங்ஸ், சென்னை-1 ; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) மவுண்ட் ரோடு, சென்னை-2 and ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே ள்

லிப்கோ நடமாடும் புத்தக "வான்"களிலும் கிட